www.tamilarangam.net

# சுவடுகள்



- தமிழர்களை மிரட்டல் !
- வெளிநாட்டவர்கள் வீதிகளில் தளர்வு !
- தேசத்தின் குறிப்பு !
- ஈழயுத்தம் ஒரு மீழ் பார்வை !
- மாற்றங்கள் ! (தொடர்நாவல்)



உள்ளே:

ர்வேத் தமி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# யுத்தத்தை நிறுத்து ! தமிழ், முஸ்லீம், மலையக மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி !

**SUVADUGAL**
A TAMIL MONTHLY FROM NORWAY
**Estd:** Sept` 1988
**Bank account:** 16075213062
Sparebanken NOR

**ISSN:** 0804-5712
**Editorial Group:** Thuruvapalagar
**Issue number:** 78 -March-April 1997

**Price:** 15NKr.
**Subscription:** 120 NKr / 6 issues


**Published by:** Norway Tamil Cultural Centre
**Address:** Suvadugal,
Herslebs gt43,0578 Oslo,
NORWAY
**Issued Date:** 25 th of March- 97



சுவடுகள்: தமிழ் மாத இதழ்
ஸ்தாபிதம்: புரட்டாதி 1988
வங்கிக்கணக்கிலக்கம்: 16075213062

ஆசிரியர் குழு: துருவபாலகர்கள்.

தனிப்பிரதி விலை: 15 குரோணர்கள்
சந்தா: ஆறு இதழ்களுக்கு 150 குரோணர்கள்
வெளியீடு: நோர்வே கலாச்சார மையம்
முகவரி: சுவடுகள்;
Herslebs gt43, 0578 Oslo,
NORWAY
தொலைபேசி: 92434212 / 92833962
அலுவலக நேரம் பிரதி ஞாயிறு
மாலை6மணி முதல் 8 மணி வரை



இலங்கை அரசே யுத்தத்தை
நிறுத்து!
இலங்கை அரசே தமிழ்,
முஸ்லீம், மலையக மக்களின்
சுயநிர்ணய உரிமையை
அங்கீகரி!!

தமிழக அரசே
ஈழத்தமிழர்களின்
சுயநிர்ணய உரிமையை
அங்கீகரி!!

இந்திய, சர்வதேச
அரசுகளே ஈழத்தமிழர்களின்
சுயநிர்ணய உரிமையை
அங்கீகரி!!

விடுதலைப் புலிகளே முஸ்லீம்
மக்களின் சுயத்தை
அங்கீகரியுங்கள் !
நோர்வே அரசே தமிழர்களை
கொலைக்களத்திற்கு திருப்பி
அனுப்பாதே!

~ சுவடுகள்

www.tamilarangam.net

~சஞ்சயன்~

# தேசத்தின் குறிப்புகள்

அரசியற் தீர்வு, பேச்சுவார்த்தை, சமாதானம் போன்ற விடயங்கள் மீண்டும் இலங்கை அரசியலில் உலா வரத் தொடங்கியுள்ளன. உள்ளூராட்சி மன்றங்களிற்கான பொதுத்தேர்தல் நடைபெற்று முடிந்துள்ள இன்றைய சூழ்நிலையில் பொது ஜன ஐக்கிய முன்னணிக்கு கிடைத்துள்ள கணிசமான அங்கீகாரம், ஏற்கனவே பொ.ஐ.மு அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத் திட்டத்தை நடைமுறைப் படுத்துவதில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. சமாதான முயற்சியில் ஆர்வம் கொண்டவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளும் இலங்கை அரசாங்கம் அதே சமயம் பாரிய இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான துரித ஏற்பாடுகளிலும் படைகளைத் தயார் படுத்தி வருகின்றது. சர்வதேச நிர்ப்பந்தங்கள் காரணமாகச் சமாதானத்தின் மீதான விருப்பத்தை வெளிப்படுத்த வேண்டிய ஒரு கட்டாய சூழ்நிலையில் இலங்கையரசும் விடுதலைப் புலிகளும் உள்ளபோதும் உண்மையில் நிரந்தர அரசியற் தீர்விலும் சமாதானப் பேச்சுவார்த்தையிலும் அரசும் சரி விடுதலைப் புலிகளும் சரி எவ்வளவு துாரம் உண்மையான நம்பிக்கை வைத்துள்ளார்கள் என்பதே கேள்விக்குறியாக உள்ளது.



கடந்தகால அனுபவங்களும் அதன் பலனாகக் கிடைத்த கசப்பான உண்மைகளும் இதையே புலப்படுத்துகின்றன. யதார்த்தபூர்வமாகச் சிந்தித்துப் பார்த்தால் இலங்கையில் சமாதானமும் நிரந்தர அரசியல்த் தீர்வும் ஏற்படும் என்ற நம்பிக்கைகள் தற்போது முற்றுமுழுதாக அற்றுப்போயுள்ளன என்றே கூறலாம். சமாதானம் பற்றியோ அரசியற் தீர்வு பற்றியோ இவர்கள் கதைத்தால் அது தத்தமது இராணுவ வலிமையை மேலும், மேலும் வலுப்படுத்திக் கொள்ளக் கிடைக்கப் பெறும் கால அவகாசமாகவே இரு தரப்பினராலும் கருதப்பட்டு வந்துள்ளது. கடந்த வருடம் பேர்கன் [Bergen] நகரில் இடம் பெற்ற இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான கருத்தரங்கில் நோர்வேஜிய வெளிநாட்டு திணைக்கள அதிபர் யான் ஏகலாண்ட் [Jan Egeland] கூறியது இங்கு குறிப்பிடத்தக்கது. "சமாதானமும் சமாதானத்தின் மீதான விருப்பமும் சொந்த விருப்பின் பேரில் இயல்பாகவே எமது உள்ளத்தில் இருந்து ஏற்பட வேண்டும். மற்றவர்களின் கட்டாயத்தாலோ அல்லது ஏனைய புறகாரணிகளின் நெருக்குதல்களாலோ உருவாக்கப்படும் சமாதானம் நிரந்தரமாக நீடித்து நிலைபெற மாட்டாது. இப்படியான சமாதானம் தற்காலிகமானதே" எனக் குறிப்பிட்டார். இந்த யதார்த்த நிலை ஏற்படாதவரை இலங்கையில்சமாதானம் என்பது வெறும் பகற்கனவே.

இனப்பிரச்சனை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிக்காவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணிலிற்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் உண்மையில் இனப்பிரச்சனைத் தீர்விற்குச் சாதகமானது என்பதிலும் பார்க்க இனப்பிரச்சனைத் தீர்வில் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் வலிமை வலுப்பெற்று வருவதையே வெளிப்படுத்துகின்றது. தமிழ் மக்களின் மிகவும் பலவீனமான இன்றைய அரசியல் சூழ்நிலையில் சிங்கள பௌத்த பேரினவாதிகள் தங்களின் பேரின நலன்களைப் பாதுகாக்கக் கூடிய தீர்வுத் திட்டத்தை சர்வதேச முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளின் ஒத்துழைப்புடன் தமிழ் மக்களின் மீது திணிக்க மேற்கொள்ளப் படுவதற்கான ஆரம்ப நிலையாகவே இவ் ஒப்பந்தத்தைக் கருதமுடியும். இன்றைய இனப்பிரச்சனைக்குப் பல்வேறு வகையிலும் காரணமாயிருக்கும் பிரித்தானிய அரசு, இனப்பிரச்சனைத் தீர்வில் மத்தியஸ்த்தம் வகிக்க முன்வந்திருக்கும் நிலைப்பாடானது (இவ் விடயம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இற்றைவரை உத்தியோகபூர்வமாக வெளிவரவில்லை) நியாயபூர்வமான தீர்வை எதிர்பார்க்கும் தமிழ் மக்களிற்கு நம்பிக்கையீனம் அளிப்பதாகவே உள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த 1948 இல் இருந்து இன்று வரை சிறுபான்மையின மக்கள் மீது இலங்கையரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் சகல வகையான மிலேச்சத்தனமான ஒடுக்குமுறை பற்றியும் பிரித்தானிய அரசாங்கம் மௌனம் சாதித்து வந்துள்ளது மட்டுமின்றி முக்கியமான காலகட்டங்களில் எல்லாம் இலங்கை அரசு சார்பான நிலைப்பாட்டையே மேற்கொண்டுள்ளது. பெரும்பாலான ஐரோப்பிய நாடுகளின் நிலை இதுவேயாயினும் சுமார் 160 வருடங்களிற்கு மேலாக இலங்கையைத் தனது காலனித்துவ நாடாக வைத்திருந்து இலங்கையின் பூகோளஅரசியலையே மாற்றி அமைத்த பிரித்தானிய அரசாங்கம் தனது கடந்தகால செயல்பாடுகளால் தமிழ் சிறுபான்மை மக்களை சமூக அரசியல் ரீதியாக ஒடுக்குமுறைக்குள்ளாகப் பெரிதும் காரணமாயிருந்த பிரித்தானிய அரசு இன்று இவ் விடயத்தில் எவ்வளவு தூரம் நேர்மையாக நடந்து கொள்ளும் என்ற ஐயம் தமிழ் மொழிபேசும் மக்கள் மத்தியில் ஏற்படுவது இயல்பானதே.

பிரித்தானிய அரசின் சமாதான முயற்சி பற்றிய செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கும் அதேவேளை இலங்கை அரசாங்கத்தினால் தற்போது முன்மொழியப் பட்டுள்ள தீர்வுத் திட்டம் விரைவில் பாராளுமன்ற தெரிவுக்குழுவினால் விவாதித்து முடிக்கப்பட்டு சட்ட மூலமாகப் பாராளுமன்றத்தில் பிரேரிக்கப்படும் என அரசியலமைப்பு, பிரதி நிதியமைச்சருமான பீரிஸ் தெரிவித்துள்ளார். எனினும் தெரிவுக்குழுவினால் முக்கிய விடயங்கள் எதுவுமே விவாதத்திற்குட்படுத்தாது இழுபறி நிலையில் இருக்கும் (அரசியல் அங்கம் வகிக்கும் 'லலித்' குழுவினர் நாட்டின் ஒற்றையாட்சி முறை மாற்றப் படுவதையும் வடக்கு கிழக்கு நிரந்தர இணைப்பையும் நிராகரித்துப் புதிய தீர்வு யோசனைகளைச் சமர்ப்பித்துள்ளனர். எனினும் இற்றைவரை இது விவாதத்திற்கு உட்படுத்தப்படவில்லை). பாராளுமன்றத் தெரிவுக்குழு எப்படி ஒருமனதான முடிவுக்கு எப்படி வரும் என தெரியவில்லை. பாராளுமன்றத் தெரிவு குழுவினால் ஒரு நிரந்தர முடிவுக்கு வர முடியாவிட்டால் தீர்வுத் திட்டங்களைப் பாராளுமன்றத்தில சட்டமூலமாக சமர்ப்பிப்பதற்கு முன்னர் இது பற்றி மக்கள் கருத்தை அறிய நேரடியாக மக்களிடம் எடுத்துச் செல்லப்படும் எனவும் அதன் படி சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார். அமைச்சர் பீரிசின் கருத்து அரசியல் யாப்பு ரீதியாக எவ்வளவு தூரம் சாத்தியமானது என்ற கேள்வி ஒரு புறம் எழுந்தாலும் அதற்கான முயற்சிகளை அரசாங்கம் வேகமாக முடுக்கி விட்டுள்ளது.

புதிய அரசியல் யாப்பின் நகற் பிரதிகள் சிலவற்றை அரசாங்கம்வெளியிட்டுள்ள போதும் யாப்பின் முக்கிய விடயங்கள் இன்னும் வெளயிடப்படவில்லை. புதிய அரசியல் யாப்பின் பிரகாரம் இலங்கையின் ஆட்சிமுறை ஒற்றையாட்சி முறையில் இருந்து பிரதேச சுயாட்சி முறைக்கு மாற்றப்பட்டுத் தேசங்களின் ஒன்றியம் என அழைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டிருந்தது. எனினும் பௌத்தகுருமார் மற்றும் சிங்கள இனவாதிகளிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்பையடுத்து இதற்கு மாறாகப் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற பெயர் பரிசீலிக்கப்பட்டு வருவதாகத் தெரியவருகின்றது. புதிய யாப்பின் பிரகாரம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை நீக்கப்பட்டு ஆட்சி அதிகாரம் மீண்டும் பாராளுமன்றத்திடமே வழங்கப்படவுள்ளது. தற்போதைய யாப்பிலுள்ள தேர்தல் முறையே (விகிதாசாரத் தேர்தல் முறை) தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்படுமாயினும் இதிலும் சில திருத்தங்களை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரியவருகின்றது. காலத்துக்கு காலம் ஆட்சிக்கு வரும் பேரினவாத ஆட்சியாளர்கள் தங்களது கட்சியின் பேரினவாத அரசியல் நலன்களை மட்டுமே கருத்திற் கொண்டு செயல்படுவது ஒன்றும் புதிய விடயமில்லை. எனினும் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவது இலங்கை வாழ் தேசிய சிறுபான்மையின மக்களே இதற்குச் சந்திரிக்கா அரசின் புதிய அரசியல் யாப்பும் விதிவிலக்கல்ல. புதிய அரசியல் யாப்பும் 1972, 1978 யாப்புக்களைப் போன்றே மதவாதத்தை (இலங்கை ஒரு பௌத்த சோஸலிஸ ஜனநாயக குடியரசாகத் தன்னைப் பிரகடனப்படுத்துகின்றது) அடிப்படையாகக்கொண்டுள்ளது.

புதிய யாப்பு விதிகள் பற்றிய விவாதங்கள் நடைபெற்று வரும் அதே சமயம் தீர்வுத்திட்ட ஆலோசனைகளும் அரசாங்க மட்டத்தில் பரவலாக நாடு தழுவிய ரீதியில் நடாத்தப்பட்டுவருகின்றன. இவ்வாறான கருத்தரங்குகளும் கலந்துரையாடல்களும் இத் தீர்வுத்திட்டத்தைக் காலம் தாமதித்தேனும் நேரடியாகப் பாராளுமன்றத்திற்கோ அல்லது முதலில் மக்கள் கருத்தை அறிந்து அதன் பின் பாராளுமன்றத்திற்கோ கொண்டு வருவதில் அரச உறுதியுடன் இருப்பதையே புலப்படுத்துகின்றன.

தற்போதைய அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள தீர்வுத்திட்ட யோசனைகள் அதன் ஐரோப்பிய முதலாளிகளாலும் அவர்களின் அரசுகளினதும் கணிசமான ஆதரவைப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. மிக முக்கிய நாடான இந்தியாவும் இத்தீர்வுத் திட்ட யோசனைகளிற்குப் பச்சைக்கொடி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டியுள்ளது. இலங்கையில் பல தரப்பட்ட அரசு சார்பு, சார்பற்ற பொது நிறுவனங்களும் தமது ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்கியுள்ளன. அதேசமயம் சிங்கள அரசியல் கட்சிகள் ஆதரவு, எதிர்ப்பு என்ற நிலையில் பிளவுபட்டிருந்தாலும் உள்நாட்டு, சர்வதேச அழுத்தங்கள் காரணமாக பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சியை வழிக்கு கொண்டு வந்து விடலாம் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

எனினும் இத்தீர்வுத் திட்ட அம்சங்கள் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மாற்றீடாக, ஒரு சாதகமான அம்சமாக கருதப்பட முடியுமா என்பது சந்தேகமே. கொழும்பு அரசின் தயவில் தங்கிவாழும் இயக்கங்களும் தமிழ் அரசியல் கட்சிகளும் இத்தீர்வுத் திட்ட அம்சங்களை நிராகரித்துள்ள நிலையில் இன்றைய தேசிய இனப்பிரச்சனையில் பிரதான பங்கை வகிக்கும் விடுதலைப் புலிகள் இதற்கு உடன்படமாட்டார்கள் என்பது யாவரும் அறிந்ததே.

இலங்கை அரசினாற் பரிந்துரை செய்யப்பட்டுள்ள இத் தீர்வுத் திட்டங்கள் உண்மையில் தமிழ் மக்களின் குறைந்த பட்சக் கோரிக்கையை தானும் நிறைவு செய்யவில்லை. தமிழ் மக்களின் தாயக கோட்பாடோ, அம்மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடோ எந்த சிங்கள அரசியல் கட்சிகளாலும் கண்டுகொள்ளப்படவில்லை. அதிகாரப் பரவலாக்கத்தில் கூட மாநில அரசுகளின் சுயாதிபத்தியம் முழுமையாக உறுதி செய்யப்படவில்லை. கடந்த காலங்களில் இடம் பெற்ற அத்துமீறிய குடியேற்றங்கள் தொடர்பாகவோ, அல்லது தற்போது வேகமாக மேற்கொள்ளப்பட்டு வரும் குடியேற்றங்கள் தொடர்பாக திட்டவட்டமாக எதுவுமே தெளிவுபடுத்தப்படவில்லை இவையெல்லாவற்றையும் விட அதிகாரப் பரவலாக்களில் உயர்கல்வி, நிதித்துறை, நாட்டின் பிரதான வளங்களின் பங்கீடு (குறிப்பாக விவசாயத்தையே நம்பி வாழும் கிழக்கு பிரதேச மக்களின் நீர்ப்பாசன வளங்கள்) பற்றியோ, அதிகாரப் பரவலாக்களின் முக்கிய விடயமான தேசிய இனங்களின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களின் அலகு (உ+ம் முஸ்லீம் மக்களிற்குரிய பிரதேசம் போன்றவை தொடர்பாகவோ, கிழக்கு மாகாண எல்லை மீளவரைவு தொடர்பாகவோ) பௌத்தமதத்திற்குரிய முன்னுரிமை போன்ற பலத்த குறைபாடுகளை கொண்டுள்ளன.

இவ்வாறு பல குறைபாடுகளை கொண்டுள்ள போதும் இத் தீர்வுத் திட்டம் "ஒரு சில" சாதகமான விடயங்களையும் கொண்டுள்ளதை மறுப்பதற்கில்லை. இனப்பிரச்சனை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முன்னைய ஒப்பந்தங்கள் இலங்கையின் ஒற்றை ஆட்சியைக் கெட்டியாகக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்தன. எனினும் புதிய யோசனைகள் இலங்கை ஒரு சமஷ்டி ஆட்சி முறையை கொண்ட நாடாகப் பிரகடனப்படுத்துகின்றன. இலங்கை பல்லினமக்களை, மதங்களை, கலாச்சாரத்தைக் கொண்ட ஒரு நாடாக ஏற்றுக் கொள்ளப் படுகின்றது. முன்னைய ஒப்பந்தங்களைப் போலன்றி அதிகாரப் பரவலாக்கம் அரசியல் யாப்புரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுக் குறைந்த பட்சமாவது மத்திய, மாநிலங்களிற்குரிய அதிகார அலகுகள் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளன. இவை எல்லாவற்றையும் விட மிகவும் சாதகமான ஒரு அம்சம் இத் தீர்வுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை அரசாலும் அரசு சார்பற்ற பொது ஸ்தாபனங்களாலும் சிங்கள மக்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பிரச்சாரங்களே. தமிழ் மக்களைச் சிங்கள மக்களின் எதிரிகளாகவும் பயங்கரவாதிகளாகவுமே சிங்கள மக்கள் மத்தியில் அடையாளப்படுத்தி வந்த பெரும்பான்மையான சிங்கள அரசியல் வாதிகள் தமிழ் மக்களிற்கு எதுவிதமான பிரச்சனையுமில்லை; அவர்களின் போராட்டம் நாட்டை பிரிப்பதற்கான பயங்கரவாதமே என்ற மாயையையே தோற்றுவித்திருந்தனர். ஆனால் இன்று தமிழ் மக்களின் பிரச்சனையைக் குறைந்த பட்சமாவது சிங்கள மக்களுக்குச் சிங்கள அரசியல் தலைமைகளாலேயே வெளிக்கொணரப் படுகின்றது. சாதாரண கிராமப்புற சிங்கள மக்கள் மத்தியில் இருந்து நகர்ப்புறச் சிங்கள மக்கள்வரை தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கான மூலகாரணத்தைக் குறைந்தபட்சமாவது இதில் அறியமுடிகிறது. இதில் அரசாங்க சார்பற்ற பொது அமைப்புக்களின் பங்களிப்பே கணிசமானது. (உண்மையில் இவ்வாறான செயற்பாடுகள் தமிழ் அரசியல் தலைமைகளாலே, தமது சிங்கள ஆதரவு சக்திகளுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். ஆனால் வழமை போன்றே இவர்கள் தமிழ் இனவாதத்திற்குள் அமிழ்ந்துவிட்டனர்) இவ் ஒப்பந்தம் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட முடியாவிட்டாலும் எதிர்காலத் தீர்வுத் திட்டங்களிற்கு ஒரு முன்னுதாரணமாக இருக்கும் என நம்பலாம்.


படியுங்கள்! விமர்சியுங்கள்!!

## காலச்சுவடு

சிறுசஞ்சிகைச் சூழலில் முக்கிய கவனம் பெற்ற காலாண்டிதழ். அழகிய, எளிமையான வடிவமைப்புடன் வருகிறது. தொடர்புகட்கு: **Kalachchuvadu,/ 151 K.P.Road,/ Nagercoil 629 001,/ INDIA.**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நோர்வேயில் ஒஸ்லோ தொய்யன் தேவாலயத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய கொழும்பு பல்கலைக்கழகச் சட்டத்துறை சிரேஸ்டவிரிவுரையாளரும் அரசியல் விமர்சகருமான வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்த கருத்துக்கள் இங்கே தரப்படுகின்றன. உள்நாட்டு மோதல்களுக்கு தீர்வுகான்பது தொடர்பாக ஆறு வார கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக தமிழ்மாறன் கடந்த வருடம் கோடைகால பல்கலைக்கழகத்திற்கு ஒஸ்லோ வந்திருந்தார். தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடம் ஏற்பாடு செய்திருந்த இந்த கருத்தரங்கத்திற்கு இணைவு கூடத்தின் தலைவர் திரு. த. விக்னேஸ்வரன் தலைமை தாங்கினார்.

# 'மூன்றாந்தரப்பின் மத்தியஸ்தத்துக்கான தருணம் இது'

**நோர்வே கருத்தரங்கில் தமிழ்மாறன்**

> தீர்வு என்பது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வரவேண்டுமே தவிர மூன்றாம் தரப்பிடமிருந்து வர முடியாது. இணக்கத்தை எட்டுவதற்கான வழிமுறைகளைப் பூரண கட்டுப்பாட்டோடு விதித்துரைத்தலில் மட்டுமே மூன்றாம் தரப்பு உறுதியாக நிற்றல் வேண்டும்.

இலங்கையில் இடம்பெற்று வரும் மோதல்களுக்கான தீர்வை காண்பதில் மூன்றாந்தரப்பின் உதவியை பெறவேண்டிய தருணம் இதுவேயாகும். இச்சந்தர்ப்பமும் தவறவிடப்படுபடுமேயானால் தொடர்ந்து அழிவுகள் மட்டுமே எமக்கு எஞ்சி நிற்கும். வன்முறை என்பது அரசுக்கே ஏகபோகமானது என்பது சட்ட நிலை. எனவே அரசு வன்முறையை வன்முறையினால் சந்திக்கிறேன் என்று சொல்வதில் பிரயோசனம் இல்லை. இது தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைக்கே வழிவகுக்கும். மூன்றாம் தரப்பின் மத்தியஸ்த்துடனான பேச்சு வார்த்தை உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். சிந்தப்படும் இரத்தத்தில் தமிழ் இரத்தம் சிங்கள இரத்தம் என்று வேறுபாட்டைப் பார்ப்பது மனிதாபிமானமல்ல. இறப்புக்களை நிறுத்துவதற்கான வழிவகைகளை யோசிக்க வேண்டும். இராணுவ முனைப்புக்கள் சற்று தளர்ந்தால் கூடப் பேச்சு வார்த்தைக்கான முன்னெடுப்புக்களைச் செய்வதற்கு விரும்பும் சக்திகளை எங்களால் அடையாளம் காண முடியும். நாம் சமாதானத்தை விரும்புகின்றோம் என்பதில் மற்றவர்களும் நம்பிக்கை கொள்ள வேண்டும். அப்போது தான் மத்தியஸ்தர்களும் துணிவுடன் முன்வருவார்கள். தமிழ் மக்களின் ஏகோபித்த கோரிக்கையாகப் போர் நிறுத்தமும், மூன்றாம் தரப்பு மத்தியஸ்துவமும் தற்போது முன் வைக்கப்பட வேண்டும். தனியொரு நாட்டை அமைப்பதன் மூலம் நாம் எவற்றைப் பெற்று அனுபவிக்க வரும்புகிறோமோ அவற்றையே சுயநிர்ணய உரிமைப் பிரயோகத்தின் மூலமான வேறு வேறு தீர்வுகளின் மூலமும் பெற்றுக் கொள்ள முடியும். அடிப்படையில் தமிழ் மக்கள் தனியான ஒரு தேசியம் என்பதும் அவர்களது சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படுவதும் தான் முக்கிய போராட்டக் காரணிகளாகும். இவற்றை அங்கீகரிக்கும் தீர்வுகளை ஏற்பதில் தமிழினத்தின் குரல் ஒரே விதமாகவே ஒலிக்கிறது. ஆனாலும் அரசாங்கம் தற்போது முன் வைத்துள்ள தீர்வுப்பொதியில் இந்த அடையாள அங்கீகாரத்துக்கான அம்சம் எதுவுமே இல்லை என்பது துரதிஸ்டவசமானது. பெரும்பான்மையினர் மத்தியில் உள்ள தாராளவாதிகள் கூட இதை சுட்டிக்காட்டி உள்ளனர்.

எனவே தான் தீர்வுப்பொதியை ஒருபுறம் வைத்துவிட்டுப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும். தீர்வு என்பது சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து வரவேண்டுமே தவிர மூன்றாம் தரப்பிடமிருந்து வர முடியாது. இணக்கத்தை எட்டுவதற்கான வழிமுறைகளைப் பூரண கட்டுப்பாட்டோடு விதித்துரைத்தலில் மட்டுமே மூன்றாம் தரப்பு உறுதியாக நிற்றல் வேண்டும். ஜனநாயக குழு அடையாளத்தை, குழு உரிமையை மறுதலிப்பதாக இருக்கமுடியாது. எமது முன்னைய பேச்சுவார்த்தைகளும் போர்நிறுத்தங்களும் தோல்வியடைந்தமைக்கு முக்கிய காரணம் மூன்றாம் தரப்பு ஒன்றிடம் பேச்சுவார்த்தை ஒழுங்கு ஒப்படைக்கப்படாமையும் தீர்வு திணிக்கப்பட முனைந்தமையுமேயாகும். வெளிநாடுகளில் உள்ள புலம் பெயர்ந்த தமிழர்கள் முனைந்தால் ஒரு தொடர்புவழியை ஏற்படுத்திக்கொள்ள முடியும். பாலஸ்தீன - இஸ்ரேலிய பேச்சுவார்த்தை வெற்றியடைந்தமைக்கான முக்கிய காரணம் இந்தத் தொடர்பு வழி ஒன்று தொடர்ந்து இருந்து வந்தமை தான் காரணம் என்று கூறப்படுகின்றது. இந்தத்தொடர்பு பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தால் கூட அதற்கான காரணங்களை விளக்க, சர்வதேச சமூகத்தின் உதவியைக் கோர் மிகவும் உபயோகமாக இருக்கும். இதற்கான முயற்சியை நாம் முன்னெடுக்க வேண்டும்.

www.tamilarangam.net



~தொகுப்பு: ராஜன்~

# தமிழ்மாறனுடன் ஒரு சந்திப்பு

திரு.வி.ரி.தமிழ்மாறன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் சட்டபீட முதுநிலை விரிவுரையாளராகப் பணிபுரிகின்றார். இவர் இலங்கையின் முக்கிய அரசியல் விமர்சகராகவும், சட்டவியல் ஆய்வாளராகவும் கருதப்படுகிறார். மனித உரிமைகள், சர்வதேசச்சட்டம், சர்வதேச உறவுகள் தொடர்பாகப் பல ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்.



சுவடுகள்: தீர்வை நிராகரிப்பதற்கான உங்கள் காரணங்களைச் சுருக்கமாகக் கூறமுடியுமா?

தமிழ்மாறன்: ஏற்கனவே நான் கூறியுள்ளதைப் போல எந்தத் தீர்வும் சம்பந்தப்பட்ட மக்களது அடையாளத்தை அங்கீகரிப்பதாயும் அதற்கான அச்சுறுத்தலை அகற்றுவதாகவும் இருக்க வேண்டும். இது இனப்பிரச்சனைக்கான தீர்வுகளின் அடிமட்டத் தேவைப்பாடு. அமைச்சர் பீரிஸின் தீர்வுப் பொதியில் இந்த அங்கீகாரம் அறவேயில்லை. இலங்கை ஏதோ மிகப் பெரிய நாடு போலவும் அதிகாரங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிக்காது ஒரேயிடத்தில் (கொழும்பில்) குவித்து வைத்திருப்பதால் 'மிகத்தூரத்தே' உள்ள மக்கள் வெறுப்புற்றுப் போராடுவது போலவும் அதனால் இப்போது அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படுவது போலவும் அதனால் இப்போது அதிகாரப் பரவலாக்கம் செய்யப்படுவது போலவுமே தீர்வுப் பொதி விளக்கப்படுகிறது. மாத்தறையிலோ, கண்டியிலோ உள்ள சிங்கள மக்கள் தமக்கு அதிகாரப் பரவலாக்கம் கோரிப் போராடவுமில்லை, இறக்கவுமில்லை.

நாட்டில் ஏற்பட்ட அழிவுகள் - சிறுபான்மை மக்களது போராட்டத்தினால் ஏற்பட்டவையே. ஆனால் தீர்வு என்று வரும்போது மாத்தறை, கண்டி, வடக்கு - கிழக்கு எல்லாவற்றுக்கும் ஒரே தீர்வு என்று கூறுவது சுத்தமான ஏமாற்று முயற்சி.

என்னைப் பொறுத்தவரை வடக்கு - கிழக்கு இணைந்த தாயகம், அங்கு தமது தலைவிதியைத் தாமே தீர்மானிக்கக் கூடிய அளவுக்கான அதிகாரம் அவர்கள் கையில் விடப்பட்டால் மட்டுமே சாத்தியமான தீர்வாகும். எண்ணிக்கையில் குறைந்த இனம் என்பதால் எல்லா விடயங்களிலும் அது நிரந்தரச் சிறுபான்மையாக இருக்க முடியாது. தனது சொந்த விடயங்களையாவது அது தானாகக் கையாளுதல் வேண்டும். இதுவே அடையாளப் பிரச்சனை என்றாகும். சமத்துவம் என்பது ஒரு மனிதன் - ஒரு வாக்கு என்பதல்ல. ஒவ்வொருவனது வாக்குக்கும் சமபெறுமதி இருத்தலும் வேண்டும் என்பதாகும். இது பன்மைத்துவ சமுதாய அமைப்பில் மிக இன்றியமையாதது. இது மறுக்கப்படின் பிரிவினையே ஒரேயொரு நிவாரணமாகும்.

தீர்வுப்பொதி பற்றிப் பேசப்பட்ட ஆரம்ப நாட்களில் இந்த விடயம் குறித்து ஏராளமான சந்திப்புகளில் எனது அபிப்பிராயத்தைக் கூறியுள்ளேன். அடையாளத்தை அங்கீகரிப்பதான ஏற்பாடுகளை எவ்விதம் அரசியலமைப்பில் உள்ளடக்கலாம் என்பதற்கு ஆதாரமாக பெல்ஜியம், சுவிஸ், கனடா, மொரிஷியஸ் நாட்டு அரசியலமைப்பு ஏற்பாடுகளை ஆதாரங் காட்டியிருந்தேன். நன்றாகக் கேட்டுக் கொண்டார்கள். எந்தவிதப் பயனும் ஏற்படவில்லை. என்னைப் பொறுத்தவரை பலரிடமும் நன்றாக ஆலோசனை கேட்கப்பட்டது. ஆனால் 'அகப்பையில் வந்திருப்பது புளித்துப்போன படையலேதான்.

ஒரேயொரு கேள்வியைத் தமிழ் மக்கள் கேட்டாலே போதும்! அக்கேள்வி இதுதான்: "இந்தத் தீர்வுப்பொதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுபான்மை இனத்தின் பிரச்சினைக்குத் தீர்வு காணவே முன்வைக்கப்படுகிறது என்பதைத் தெளிவாகக் காட்டவல்ல ஏதாவதொரு ஏற்பாட்டை (Provision) இந்தப் பொதியில் அரசினால் காட்ட முடியுமா?

விடை தெரிந்தால் ஆதரிப்பது என்ற பேச்சே எழமுடியாது.

சுவடுகள்: சரி, புத்திஜீவிகளின் நிலைப்பாடு என்ன?

தமிழ்மாறன்: தமிழ் மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகளில் சொந்த லாப - நட்டம் கருதிய ஒரு சிலரைவிட வேறு எவருமே தீர்வுப் பொதி பற்றிக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

சிங்கள மக்கள் மத்தியிலுள்ள புத்திஜீவிகளில் மூன்று பிரிவினர் உள்ளனர். தெரிந்துகொண்டே பேரினவாதத்தை முன்னெடுப்பவர்கள். இவர்களையிட்டு எதுவும் கூறுவதற்கில்லை. மகாசங்கத்தின் ஆதரவும் இவர்களுக்குண்டு. தமிழ் மக்களுடைய பிரச்சனை என்ன? அப்படியொரு பிரச்சனை இருக்கிறதா என்று இவர்கள் கேட்பதைப் பார்த்திருப்பீர்கள். இவர்களைத் தூக்கத்திலிருந்து எழுப்பவே முடியாது.

இரண்டாவது வகையினர் முற்போக்கு முலாமிட்டவர்கள். ஏனையவர்களை இனவாதிகள் என்றும் தங்களை முற்போக்காளர் என்றும் காட்டுவதே இவர்களது தலையாய பணி. இதனால் சில லாபங்களும் இவர்களுக்குண்டு. ஐ.தே.க. ஆட்சியிலில்லாத எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இவர்கள் கொடிகட்டிப் பறப்பதுண்டு. அப்பட்டமான யுத்தப் பிரச்சாரத்துக்குத் துணைபோய்க்கொண்டே - தாம் சமாதானத்துக்காகப் போராடுவதாக நடிக்க இவர்களால் மட்டுமே முடியும். ஆங்காங்கே பணிப்பாளர் பதவிகள், கூட்டுத்தாபனங்களில் தலைவர், ஆலோசகர் பதவிகள் எனக் கிடைப்பதைத் தக்கவைக்க இவர்கள் எதற்கும் தயாராக உள்ளனர். இவர்கள் மனதாரத் தீர்வுப் பொதி பற்றிப் பேசுவதில்லை. மேலிடம் சொல்கிறது - என்று வந்து பேசிவிட்டுப் போகிறார்கள்.

மூன்றாவது வகையினரே உண்மையில் பிரச்சனையின் ஆழ, அகலத்தை அறிந்து வைத்துள்ளார்கள். பிரச்சனையை வைத்துப் பிழைக்க விரும்பாதவர்கள். இதயசுத்தியுடன் நாட்டின் எதிர்காலம் பற்றிச் சிந்திக்கின்றவர்களும் இவர்களேதான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவே. ஆனால் இது ஆச்சரியத்துக்குரியதல்ல. ஏனெனில் நம்மவர்கள் மத்தியிலும் இப்படியானவர்கள் என்ன நிறைவாகவா உள்ளனர்?

கொழும்பில் சமாதானப் பேரவை அமைப்பாளர் கலாநிதி ஜெகான் பெரோரா, லிபரல் ஜனநாயகவாதியான ரொஹான் எதிரிசிங்ஹ, கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து, நவசமசமாஜக் கட்சியிலுள்ள சில அறிஞர்கள் போன்றோரே இந்த மூன்றாவது அணியினர். இன்னொரு விதத்தில் கூறுவதாயின் - இவர்கள் அரசியலில் பிழைக்கத் தெரியாதவர்கள். ஆனால் எதிர்காலத்தை இருளச் செய்யாதவர்களும் இவர்களேதான். ஏதாவது சமாதான முயற்சியென்றால் இவர்களோடுதான் கதைக்க முடியும். யுத்தக் கோஷங்களுக்கு மத்தியில் இவர்களது குரல் அமுங்கிப்போய்க் கிடக்கிறது.

சுவடுகள்: முஸ்லிம் மக்கள், மலையகத் தமிழர் பற்றிய துங்கள் அரசியல் நிலைப்பாட்டை விளக்குவீர்களா?

தமிழ்மாறன்: இவ்விரு பிரிவினருமே தனியான தேசிய இனங்களாகக் கொள்ளப்பட வேண்டுமெனச் சிலர் வாதாடுகின்றனர். தேசிய இனம் என்பதன் வரைவிலக்கணச் சிக்கல்கள் பற்றி ஏற்கனவே கூறியுள்ளேன். என்னைப் பொறுத்தவரை முஸ்லிம் மக்கள் தனித் தேசிய இனம் என்பதை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதற்காக அவர்கள் கட்டாயமாகப் புறம்பான ஆள்புலத்தைக் கொண்டிருக்க வேண்டுமென்பதும் அவசியமில்லை. இந்த வகையில் அவர்கள் வடக்கு - கிழக்கு தாயக அலகில் உள்ளடங்கி இருப்பதோ அல்லது தனியான அமைப்பைக் கோருவதோ அவர்களது சொந்த விடயம் என்றாகும்.

ஆனால் கடந்தகால அரசியல் (கசப்பு) அனுபவங்களை வைத்துப் பார்க்கையில் தமிழ் மக்களோடு சேர்ந்திருந்து தமது உரிமைகளை அனுபவிப்பதில் சில வினாக்குறிகள் தோன்றியுள்ளன. ஆயினும் இது ஆற்றப்படக்கூடிய ரணங்கள் என்பது எனது அபிப்பிராயம். வேறோரிடத்தில் நான் கூறியிருப்பதைப் போல - தமிழ்த் தேசிய இனம் தன்னைத்தானே ஆளுகிறபோது இன்னொரு (முஸ்லிம்) தேசிய இனத்தைப் புண்படுத்தவில்லை. ஆளுவதற்கான போராட்டத்தின் இடைவிளைவுகள் சில கசப்புணர்வுகளை ஏற்படுத்தியுள்ளன என்பதே உண்மையாகும். தமிழ்த் தேசிய இனமும் முஸ்லிம் தேசிய இனமும் ஒரே அலகினில் இங்கு சேர்ந்து வாழமுடியும் என்பதற்கான வாய்ப்புகள் நிறையவே உள்ளன. ஆனால் அதைப் பயன்படுத்துவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பதில் முஸ்லிம் தேசிய இனத்துக்குள்ள உரிமையினைக் கேள்விக்குட்படுத்த எங்களால் முடியாது.

மலையகத் தமிழர் தனியான ஒரு தேசிய இனம் என்பது கொள்கை ரீதியில் நிறுவப்படல் மிகச் சிரமமானது. இதுபற்றிப் புறம்பான ஒரு விவாதத்தை நடத்துதல் நலம். வட- கிழக்குத் தமிழர்களிடமிருந்து இவர்களை ஆள்புலம் (Territory) மட்டுமே பிரித்து நிற்கின்றது. அதுகூடத் தோட்டத் தொழிற்துறை நிலைத்திருக்கும் மட்டுமே நிலவக்கூடிய வேறுபாடு. கலாச்சார வேற்றுமை ஒரு புறம்பான தேசிய இனம் என்ற அடையாளத்தை வழங்கப் போதுமானதா என்பது கேள்விக்குரியது. தேசிய இனம் என்ற வகைக்குச் சற்றுக் குறைந்த குழுக்களாக (communities) இவர்களை உள்ளடக்கலாமா என்பது பற்றி ஆராயப்பட வேண்டும்.

சுவடுகள்: புலம்பெயர்ந்து வாழ்கின்ற மக்களின் பங்களிப்பு இந்நேரத்தில் எப்படியிருக்க வேண்டும் என நினைக்கிறீர்கள்?

தொடர்ச்சி 30 ம் பக்கம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசம் அல்ல,
எதிரி முடக்கப்பட்ட பிரதேசம்,
புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம்.

(கடந்த இதழில் இருந்து தொடர்கிறது)

~ திலீபன் ~

நவசகாப்தம் இதழிலிருந்து

# தேசிய விடுதலை யுத்தம் - ஒரு மீள்பார்வை

### சேய விடுதலை யுத்தம் இரண்டாவது தடவையாக மூலோபாய ரீதியான இரண்டாவது கட்டத்திற்குள்


IPKF முழுவதும் பின்வபங்கியது. யாழ்ப்பாணத்தின் அதே பழைய இராணுவ கடற்படை முகாம்களில் சிறீலங்காப் படைகள் மிக குறைந்த எண்ணிக்கையில் இருந்தன. புலிகள் இராணுவ முகாம்களை அழித்து தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமளவுக்கு இராணுவ பலத்தைப் பெற்றிருக்கவில்லை. ஆனால் முகாம்களுக்குள் இருந்த இராணுவம் வெளியே வராதபடி தாக்கும் தடுக்கும் முறையில் பாதுகாப்பு அரண்களை,கண்ணி வெடிகளை, கண்காணிப்பு நிலைகளை உரிய இடத்தில் ஏற்படுத்தினர். யாழில் இராணுவத்தை முகாமுக்குள் முடக்கும் தயாரிப்புகளை விரைவு படுத்தினர்.

எதிரியும் புலிகளின் இந்தத் தயாரிப்புகளை அறிந்தான். எதிரி தெற்கில் இருந்து படைகளை உடனடியாக யாழிற்கு மாற்ற முடியாத நிலை, JVP கொடுக்கக் கூடிய அதிர்ச்சி நடவடிக்கைகளை சமாளிக்கக் கூடியதாகவும் JVP யை பூண்டோடு அழிக்கவும் தயார் நிலையில் இருக்கவேண்டியிருந்தது. கூடவே புலிகளுடன் நடத்தி வந்த பேச்சுவார்த்தையை பயன்படுத்தி இராணுவத் தயாரிப்பை மேலும் செய்ய வேண்டிய தேவை, புலிகளைப்போல் அரசுக்கும் தேவைப்பட்டது. எதிரி கிழக்கில் தனது கட்டுப்பாட்டை பேணிக்கொள்வதும், வடக்கில் தற்காலிகமாக முடங்கிக்கிடப்பதும் ஒரே வழியானது.

புலிகள் வடக்கைப் போல் கிழக்கிலும் கெரிலாக்கலின் சுதந்திர நடமாட்டத்தை உருவாக்க முயன்றனர். எதிரியின் படைகள் வடக்குக்கு மாற்றப்படுவதை தடுக்கவும், கிழக்கில் தன்னைப் பலப்படுத்த எதிரி உருவாக்கி வந்த பொலிஸ் நிலையங்கள், கிழக்கில் மிச்ச மிருந்த தமிழ் துரோகப்படைகளுடன் எதிரி ஏற்படுத்தத் தொடங்கிய உறவுகள், புலிகளை வேகமாக இயங்கத் தூண்டியது.

யாழ்ப்பாணத்தில் எதிரி படைகளை பலப்படுத்துவதற்கு முன், எதிரி முகாமை விட்டு வெளியில் வருவதை தடுப்பதற்கான தயாரிப்புகளில் முன்னிலை பெற்ற புலிகள், அம்பாறை பொலிஸ் நிலையத் தாக்குதலுடன் 91 யூனில் மீண்டும் யுத்தம் உருவானது. தமது முன் திட்டப்படி கிழக்கில் நூற்றுக்கனக்கான பொலிசாரை புலிகள் பிணைக் கைதிகளாக்கினர். கிழக்கிலும் வடக்கிலும் எல்லைப்புறங்களில் தொடர்ச்சியான கொரில்லா தாக்குதல்களை தந்திரோபாயமான போர் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். யாழில் இராணுவம் முகாமைவிட்டு வெளியே வந்தால் என்ன நடக்கும் என அச்சுறுத்தும் இராணுவ முன் செய்கைகளை வெளிப்படுத்தினர்.

1987ல் மூலோபாயரீதியாக யுத்தத்தில் முன்னெறி முதல் கட்டத்தை அடைந்த எதிரி, IPKF வருகையால் ஏற்பட்ட மொத்த யுத்த சூழல்நிலை மாற்றங்களால் IPKF பின்வாங்கிய பின்னர் தனது நிலையை தக்கவைக்கும் தயாரிப்பில் ஏற்பட்ட தோல்வியால் மீண்டும் 91ல்




மூலோபாய ரீதியாக பாதுகாப்பு கட்டத்துக்கு இறங்க நேரிட்டது. 85ல் எதிரி முகாமுக்குள் முடங்கிய முறைக்கும் இப்போது முகாமுக்குள் முடங்கிய முறையும் வேறுபட்டது. ஆனால் எதிரி சிறீலங்காவில் தோன்றியஆயுத எழுச்சியை மூலோபாய ரீதியாக முதல் கட்டத்திலேயே நசுக்கிவிட்ட வெற்றியும், புலிக்கும் இந்தியப்படைகளுக்கும் இடையில் மோதலை உருவாக்கியதிலும் வெற்றிபெற்றிருந்தான். அதேபோல் புலிகள் 87இல் மூலோபாய ரீதியாக முதலாவது கட்டத்துள் தாம் தள்ளப்பட்ட போதும், இந்திய ஆக்கிரமிப்புப் படையை பின் வாங்க செய்த வெற்றியுடன், யாழில் மீண்டும் சிறீலங்காப் படைகளை முடக்கிய வெற்றியும் பெற்றிருந்தனர்.

புலிகள் மூலோபாய ரீதியான எதிர்த்தாக்குதலுக்கான தயாரிப்புக்கட்டத்தின் தொடக்கம் முதல் கிழக்கில், வட எல்லைப் புறப்பகுதிகளில் தந்திரோபாய ரீதியான தாக்குதல்களை இராணுவமுகாம் மீது நடாத்தினர். பொலிஸ் நிலையங்கள் மீதான போர் நடவடிக்கைகள் வெற்றியளித்தன. எதிரி அவற்றை மூடவேண்டியளவுக்கு பின் வாங்கினான். கிழக்கில் இருந்த முகாம்களை பாதுகாப்பது இராணுவத்தின் பெரிய வேலையாக இருந்தது. வடக்குக்கு தொடர்ந்து இராணுவத்தை அனுப்பினால் கிழக்கையும் புலிகளின் கைகளில் ஒப்படைப்பதற்கு சமன் ஆகிவிடும். இதனால் யாழைப் பலப்படுத்தும் வேலையை தற்காலிகமாக நிறுத்தினான். முகாமைவிட்ட வெளியே செல்வதை தந்திரோபாயமான தற்காப்பாக அமுல்படுத்தினான்.

புலிகளின் யாழ் இராச்சியம் வடதமிழீழம் அறிவிக்கப்பட்டது. யாழில் சிவில் சமூக நிறுவன கட்டுப்பாடுகள் புலிகளிடம் வந்தது. நிதி,நீதி, பொலிசு, சட்டம், வரி, போக்குவரத்து, ஒலி,ஒளிபரப்பு சொத்துக்கள் தேசியவுடமை (புலியுடமை) என புலிகளின் தனி இயக்கக் கட்டுப்பாடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தேசியவுடமை (புலியுடமை) என புலிகளின் தனி இயக்கக் கட்டப்பாடு உருவானது. பிரபாகரன் தேசியதஇ தலைவராக பாடத்துட்டத்தில் சேர்க்கப்பட்டார். புலிகளே போராட்டத்தின் ஒரே இயக்கமாக காட்டப்பட்டது. வெளியுறவு செயலகங்கள் உருவானது. தமிழீழ அரசு பற்றிய புலிகளின் பொருளாதார, அரசியல், பாதுகாப்புக் கொள்கைகள், அரசமைப்ப சட்டங்களஇ யாழ் இராச்சியத்தில் அமுலுக்க வரத்தொடங்கியது. சிறீலங்கா அரசின் இனவாத சிவில் சமூக நிறுவன கட்டுமாகத்தை, சீரழிந்த சட்ட அமுலாக்கலுடனஇ உடப்பிடுகையில் குடித்தனைச் சட்டம், பெண்களின் சுதந்திரமான நடமாட்ட பாதுகாப்பு...... புலிகளின் சட்ட அமுல் வடிவங்கள் ஒருபுறம் இன ஒடுக்குமுறையிலிருந்து விடுபட்ட சுதந்திரத்தையும் மறுபுறம் ஒரு இராணுவ சர்வாதிகார அமைப்பின் தோற்றத்தையும் வெளிப்படையாக மக்களுக்குக் காட்டியது.

ஒருவிடுதலை யுத்தத்தில் மூலோபாயரீதியான இரண்டாவது கட்டம் நீண்ட காலங்களைக் கொண்டத நமத எதிர்த்தாக்குதலுக்கான தயாரிப்ப என்பது இராணுவம், பொருளாதாரம், அரசியல் என எல்லாவற்றிலும் தயாரிப்பைக் கோருவது.ஒரு அமைதியான காலகட்டமல்ல இது இராணுவ ரீதியில் தாக்குதல்களால், போர்நடவடிக்கைகளால், எதிரியை சில இடங்களில் நிர்மூலமாக்கும் இராணுவ நடவடிக்கைகளால் நறைந்த காணப்படும் கட்டம், எதிரி முடமாக்கப்பட்ட பகுதிகளில் மூன்று துறைகளில் தயாரிப்பு வளர வேண்டும். எதிரிக்கும் நமக்கும் போட்டி நடக்கும் பகுதிகளில் தந்திரோபாயரீதியான தாக்குதல்கள் வளர்வதும், எதிரியின் கட்டுப்பாட்டப் பகுதிகளில் தற்பாதுகாப்ப ரீதியான கொரில்லாத் தாக்குதல்களை உருவாகி வளரவேண்டும். இதே போல் எதிரியும் தான் இரண்டாவது கட்டத்தில் தோற்றால் ஒரேவழி பின்வாங்குவது யுத்தத்தில் தோல்வியடைவது என்பதால் எதிரி மூலோபாய ரீதியான பாதுகாப்பில் நீண்டகாலம் இருந்து கொண்டு தனது பலவீனங்களை தவறுகளை மூன்று துறைகளிலும் தன்னைத் தயார்படுத்துவான். தான் முதலாவது கட்டத்துக்குள் மீண்டும் திரும்புவதற்கு முழு அக்கரை எடுப்பான்.

பழைய குருடி கதவைத் திறடி என்பது போல் 85களில் யுத்தம் மூலோபாயரீதியாக இரண்டாவது கட்டத்துக்கள் நுழைந்த போதும் 91இல் மீண்டும் யுத்தம் மூலோபாய ரீதியில் இரண்டாவத கட்டத்துள் நுழைந்த போதும் இருந்த இராணுவ அரசியல் சூழ்நிலமைகள், இரு பகுதியிலுமான இராணுவ சமநிலையை கணிப்பதில் புலிகள் தவறு இழைத்தனர். புலிகள் தங்களின் சிறப்பான யுத்த பங்களிப்பை நினைத்து சந்தோசம் அடைந்தது தவறில்லை அதீதமாக தமது பலத்தை கணித்தனர். யாழ் மீதான தமது கட்டுப்பாட்டை யுத்தத்தின் முடிந்த முடிபாக கருதினர். யுத்தம மூலோபாயரீதியாக மூன்றாவது கட்டத்தில் இருப்பதாக நிைைத்து செயற்பட்டனர். பிரச்சாரம் செய்தனர். யாழ் மீண்டும் தம் கையைவிடஇடு போகலாம் எதிரி கைக்கு என்பதை கனவிலும் ஏற்க மறுத்தனர். யுத்தத்தின் வளர்ச்சி, வீழ்ச்சி விதிகளை அறியாது இதுதான் இறுதியுத்தம் என்றனர்.

### யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசம் அல்ல, எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசம், புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசம்.

யாழ்ப்பாணம் ஒரு விடுதலைப் பிரதேசமாக இருக்க வேண்டின், யாழுக்குள் உள்ள எதிரியின் முகாம்கள் சிறியதோ பெரியதோ எதிரி நிர்மூலமாக்கப்பட்டு முகாம்கள் நமது கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும், அல்லது நிரந்தரமாக அழிக்கப்பட வேண்டும். தரை கடல் என புவி அமைப்பைப் பொறுத்து விடுதலைப் பிரதேசத்துள் எதிரி நுழைவதற்கு இயற்கையாகவே கடினமான பகுதிகளில் எமக்குச் சாதகமான செயற்கையான பாதுகாப்பு மற்றும் எதிர்த்தாக்குதல் தயாரிப்பு நிலைகளை கொண்ட பகுதியில் எமக்கும் எதிரிக்கும் இடையிலான எல்லைச்சாவடி இருக்க வேண்டும். ஒரு வேளை எதிரி தனது வாழ்வா-சாவா போரில் எவ்வளவு இழப்பைச் சந்தித்தும் உள்ளே நுழையத் தயாரானால் அவனது நுழைவைத் தடுக்கவும் முன்னேறுதலை நிறுத்தவும் இயற்கையான, செயற்கையான வலுவான இராணுவ எதிர் தாக்குதல் அரண்கள் நம்மிடம் இருக்க வேண்டும். நமது ஆயுதங்கள், படை வடிவங்கள், (யூகங்கள் கனரக ஆயுதங்கள் உட்பட) எதிரி நுழையக்கூடிய வழிகளில் எப்போதும் தயார் நிலையில் இருக்கவேண்டும். வேவைப்படின் உதவிப்படைகள் வந்துசேர வழி இருக்க வேண்டும். விடுதலைப் பிரதேச மக்கள் குறித்த வயது எல்லைக்குமேல் எல்லாரும் ஆயுதப்பயிற்சி பெற்றிருக்கவேண்டும். மக்களின் ஆயுதப்படைகள் கட்டப்பட்டிருக்கவேண்டும். எதிரிக்கு எதிராக தேவைப்படும்போது மக்கள் உணர்வுபூர்வமாக அல்லது அழைப்பின்பேரில் மக்களின் ஆயுதப்படைகளில் போர்புரியத் தயாராக இருக்கவேண்டும். விடுதலைப் பிரதேசத்துக்குள் எதிரி நுழைந்தால் மக்கள் தமது சொந்த மண்ணும் வாழ்வும் பறிபோவதாக உணர்ந்து போர்வீரர்கள் அளவுக்கு யுத்த முனையில் தேர்ச்சியுடன் பங்காற்ற முடியாவிட்டாலும், போர்வீரர்களின் ஒரு கையாகச் செயல்படுமளவிற்கு மக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். யாழ் மக்கள் விமானக் குண்டு வீச்சிற்கும், பீரங்கிக் குண்டுத் தாக்குதலிலும் தம்மைத் தற்காத்துக் கொள்ள பதுங்கு குழிகளை அமைப்பதிலும், எச்சரிக்கையுடன் பதுங்கிக் கொள்வதற்கும் புலிகளால் பயிற்சி அளிக்கப்பட்டிருந்தனர். மற்றப்படி யுத்தத்தின் பார்வையாளர்களாகவே இருக்கப் பயிற்றப்பட்டுவிட்டார்கள். "புலிகள் விடமாட்டார்கள் பார்த்துக்கொள்வார்கள்" உணவும் பணமும் கொடுக்கவும் பாதுகாப்பு அரண்களுக்கு பணங்குத்தி வெட்டி அடுக்கவும், மண்மூட்டை அடிக்கவும், மாவீரர்கள் கல்லறை கட்டவும் ஆன கடமைகளே மக்களுக்கு சொல்லிக் கொடுக்கப்பட்டது. ஆகக் கூடியது எதிரியின் தாக்குதலை கண்டதும் அகதிகளாக வெளியேற வைத்து சர்வதேச அபிப்பிராயத்தை ஆதரவைத் தேடுவது புரிகளின் வேலையாக இருந்தது.

விடுதலைப் பிரதேச மக்களுக்கு தொடர்ச்சியான இராணுவ அரசியல் விழிப்புணர்ச்சிப் பயிற்சிகள், பள்ளிகள் நடத்த வேண்டும். பொருளியல் வாழ்நிலைமையில் எதிரியின் பொருளாதார தடைகளைத் தாங்கிக் கொள்ளவும், சுய உற்பத்தியிலும் கவனம் செலுத்த வேண்டும். புலிகள் இதில் ஓரளவு வெற்றி பெற்றார்கள். ஆனால் கடத்தல் பொருட்களின் விலையைக் கட்டுக்குள் வைத்திருப்பதில் பணக்காரர்கள் மட்டுமல்ல ஏழைகளும் வாங்கும் ஏற்பாட்டைச் செய்யவில்லை. வெளிநாட்டுப் பணம் உள்ளவர்களால் தாக்குப்பிடிக்க முடிந்தது. மொத்தத்தில் பொருளியல் வாழ்நிலையில் இருந்து வந்த ஏற்றத்தாழ்வு, சமூக சமத்துவமின்மை (புலிகளாக மாறுவதில் பார்க்கப்படவில்லையேதவிர மற்றைய) அனைத்து சமூக நடவடிக்கையிலும் தொடர்ந்தது. இந்தப் பொருளியல் ஏற்றத்தாழ்வை நீக்க, சமூக சமத்துவத்தை ஏற்படுத்த விடுதலைப் பிரதேச அரசு திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். அப்போதுதான் எதிரியின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தமிழ் மக்கள் தம்மை விடச் சிறந்ததான சுதந்திரமான உரிமைகளை வாழ்க்கையை அனைத்து நிலைகளிலும் விடுதலைப் பிரதேச மக்கள் அனுபவிப்பதைப் பார்ப்பார்கள். யாழில் இருந்த பெரும்பான்மை மக்களின் மனநிலை என்னவாக இருந்தது? யாழுக்கு வெளியே வாழும் தமிழர்களின் வாழ்க்கை மேலானது எனக் கருதினார்கள். புலிகளின் எல்லைச் சாவடியைத் தாண்டி போய் வர முடியாதா? என்ற ஏக்கம் இருந்தது. விடுதலைப் பிரதேசத்தின் குணாம்சங்களில் எவற்றை எல்லாம் புலிகளின் யாழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராச்சியத்தில் காணமுடிந்தது.

விடுதலை யுத்தத்தில் இராணுவ ரீதியில் ஒரு விடுதலைப் பிரதேசம் எப்படி இருக்கவேண்டும். அரசியல் பொருளியல் அமைப்பு ரீதியல் எப்படி இருக்கவேண்டும். யாழ்ப்பாணம் ஒரு ஊூம் எனக் கொள்ள முடியாது. மூன்று புறமும் கடல், சிறுபகுதி நிலத் தொடர்பு யாழ் ஒரு பெரிய குடாநாடு. நட்ட நடுவில் வடக்கின் முப்படைகளுக்கும் தலைமையகமான மிகப் பெரிய பலாலி இராணுவ முகாம், உள்ளே இருக்க காரைநகர் கடற்படை முகாம், ஆனையிறவு, பூநகரி, ஊர்காவற்துறை இராணுவ முகாம், குடாவைச் சுற்றியிருக்க, யாழின் சிவில் சமூக நிறுவனங்கள் கட்டுப்பாட்டை மட்டும் பார்த்து விடுதலைப்பிரதேசம் எனப் புலிகளும் - மற்றவர்களும் பிரசாரப்படுத்தினர். தவறான யுத்தக் கணிப்பீட்டில் இருந்தனர்.

யாழ் எதிரியை முடமாக்கிய பிரதேசம் என்பதே உண்மை எதிரி எப்ப வேண்டுமானாலும் தன்னைப் பாதுகாப்புக் கட்டத்தில் தயாரித்துக் கொண்டு வெளியே வருவான் என்பது பல தடவை நிரூபிக்கப்பட்டுள்ளது. ஒப்பரேசன் லிபரேசன், பவான், முன்னேறிப்பாய்தல் சூரிய ஒளி 1 - 2, என எல்லாவற்றிலும், யாழை கைப்பற்றும் இராணுவ வியூகத்தைத் தீர்மானிக்கும் தொடக்கப் புள்ளியாக பலாலி இராணுவ முகாம் இருக்கிறது. நாலாபுறமும் படைகள் முன்னேற முடியும். எதிரியைத் தடுத்து நிறுத்த இயற்கையான பூகோள அமைப்பு செயற்கைத் தடைகளுக்கு தயாரிப்பு எங்கும் இல்லை. யாழ்ப்பாணத்தைத் துண்டு துண்டாக எதிரி கைப்பற்றவும், கடற்கரையோர முகாம்களிலில் இருந்தும் பலாலி முகாமின் மையத்தில் இருந்தும் நம்மைச் சுற்றி வளைக்க இவை எதிரிக்கு அனுகூலமாக இருக்கிறது.

பலாலி முகாம் அழிக்கப்பட்டாலும், யாழ்ப்பாணத்தை ஒரு விடுதலைப் பிரதேசமாக மாற்றுவது காரிய சாத்தியமா என்பதும், ஒருவேளை விடுதலைப் பிரதேசமாக மாற்றப்பட்டாலும் நீண்ட கால யுத்த நேரத்தில் யாழின் பூகோள நிலைமையும், சமூகப் பொருளாதார அரசியல் காரணிகளும் எத்தனை வருடங்களுக்கு விடுதலைப் பிரதேசமாக நீடித்து நிற்க அனுமதிக்கும்? தேசிய விடுதலை யுத்தத்தில் யாழ்ப்பாணத்தைத்தான் மீண்டும் மீண்டும் முதல் நிலை விடுதலைப் பிரதேசமாகப் பார்க்க வேண்டுமா? எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசத்தை எப்படி விடுதலைப் பிரதேசமாக்க முடியும். அதற்கான இராணுவ வழிகள் என்ன என்பது பற்றியும், இராணுவ மூலோபாயத்தை வகுப்பதில் அக்கறையுள்ளவர்கள் சிந்திக்கவும் ஆராயவும் வேண்டிய வேளையிது.

□□

எதிரி மிகப் பொறுமையாக மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்தில் இருந்தான். புலிகளைப் பற்றி நன்றாகப் படித்தான். இராணுவ அரசியல் ரீதியில் தன்னைத் தயார்படுத்தினான். புலிகளுடன் முரண்பட்டவர்களை மெது மெதுவாக இரண்டு முறையிலும் தனது நண்பர்களாக்கினான். சிறீலங்காவின் நிலைமைகளைச் சீரமைத்தான். இராணுவத்தை தெற்கிலிருந்து வடக்கு, கிழக்குக்கு படைப் பகுப்பு செய்தான். கிழக்கில் துரோகத் தமிழ் தலைமைகளின் உதவியுடன் தனது இராணுவ நடவடிக்கைகளை புலிகள் மேல் முடுக்கினான். அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களை தனது கட்டுப்பாட்டுடன் புலிகளின் பாரிய எதிர்ப்பின்றி கொண்டு வந்தான். EPDP, EPRLR, TELO போன்ற இயக்கங்களின் அரசியல் அரசு நிர்வாக பங்களிப்புக்களை ஊக்குவித்து புலிகளுக்கும் மக்களுக்கும் இடையிலான இன உணர்வு உறவுகளை பலவீனமடையச் செய்தான். இதே போல PLOT, TELO உதவியுடன் வவுனியா மன்னார் மாவட்டங்களின் நகர்ப்புற கட்டுப்பாட்டை புலிகளிடம் இருந்து விடுவித்தான்.

தேசிய விடுதலை யுத்தத்தில் எதிரிக்கு 91-க்குப் பின் கிடைத்த மிகப் பெரிய சாதகமான அம்சம் மூலோபாய ரீதியாக வீழ்ந்த தன்னை, தமிழர்களைக் கொண்டே தமிழர்களை அழிக்கும் போராட்டத்தை, பலவீனப்படுத்தும் நடவடிக்கைகள் மூலம் மீண்டும் மூலோபாய ரீதியாகத் தான் எழுந்திருக்க முயன்றான். அதற்கு "புலிகளே தமது பிரதான எதிரி" என்ற முடிவிற்கு வந்த எல்லா தமிழர்களையும், இயக்கங்களையும் எதிரி பயன்படுத்தினான். புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த தீவுப் பகுதிகளை மீண்டும் ஆக்கிரமிக்கும் இராணுவ நடவடிக்கையை, amphibious தாக்குதல் நடத்தினான். வெற்றியடைந்தான். மிகத் தந்திரமாக துரோகக் குழுக்களில் ஒன்றான இராணுவரீதியில் எதிரியுடன் முழுக்க ஒத்துழைத்த EPDP,ன் கைகளில் தீவுப்பகுதியின் சிவில் சமூகக் கட்டுப்பாட்டை ஒப்படைத்தான். இராணுவக் கட்டுப்பாட்டைத் தனது தலைமையில் கூட்டாகச் செய்தான். புலிகளிடம் இருந்து நிலத்தை கைப்பற்றுவது தனது சிங்கள ஆட்சி அதிகாரத்துக்கு அல்ல "தேசிய நீரோட்டத்தில் உள்ள நல்ல தமிழர்களின் கைகளில் ஒப்படைக்கவே'' என உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பிரச்சாரம் செய்தான். புலிகளை அரசியல் ரீதியில் மக்களிடம் இருந்து அன்னியப்படுத்தும் வேலையில் அரசியல் தந்திரோபாயத்தை தமிழ்த்துரோகக் குழுக்களைப் பயன்படுத்தி செய்தான். யாழ்ப்பாணத்துக்கு வெளியே புலிகளை இராணுவ ரீதியாக செயற்படா நிலைக்குத் தள்ளும் - பலவீனப்படுத்தும் வேலையை எதிரி தானே செய்தான். தீவுப்பகுதியின் தோல்வி புலிகளை மூலோபாயரீதியான தோல்விக்குத் தள்ளவில்லை. ஆனால் எதிரி நடத்திய தாக்குதலின் வெற்றியாக அமைந்தது.

புலிகள் எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பு கட்டத்தில் யாழில் சொந்த இராணுவ தொழில்நுட்பவியலாளர்களைக் கொண்டு கைக்குண்டுகளும், தோட்டாக்களும் தயாரித்தனர். துப்பாக்கிகளை பழுதுபார்த்தனர். இவற்றில் தொழில்நுட்பம் வளர்க்கப்பட்டது. இராணுவ மருத்துவமனை, இராணுவத் தலைமையகம், தொலைத்தொடர்பு தலைமையகம் நிலத்தின்மேலும் பாதாளத்திலும் அமைத்தனர். இரகசிய இராணுவ கிட்டங்கிகளை ஏற்படுத்தி பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தனர். இராணுவப் பயிற்சிப் பள்ளிகளை அமைத்தனர்.

உள்நாட்டு மூலங்களைப் பயன்படுத்தி பொருளாதாரத் திட்டங்களை ஊக்குவித்தனர். எதிரியின் பொருளாதாரத் தடையை ஓரளவு தாக்குப்பிடிக்கும் அளவுக்கு முயற்சித்தனர். 'தமிழீழ பொருண்மிய கழகம்' குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தது. அரசியல் பண்பாட்டு ரீதியில் எல்லாம் 'புலிகளின் குரலே' யுத்தமே வாழ்க்கை எனவும் போதிக்கப்பட்டது. மாற்றுக் கருத்துக்கள் துப்பாக்கி முனையில் தடை செய்யப்பட்டது. எதிரியை எதிர்த்து நிற்கும் உரிமை புலியைத் தவிர யாருக்கும் இல்லை என்ற சட்டம் எழுதப்படாது அமுல்படுத்தப்பட்டது. பல புரட்சிகர தேசபக்த சனநாயக சக்திகள் சிறை வைக்கப்பட்டனர். சிறைத்துறை வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுத்தனர். தமிழ்நாட்டுச் சினிமாவும், சீரழிவுக்கலாச்சாரப் புத்தகங்களும் தடைசெய்யப்பட்டது.

ஆனால் தனி ஒரு மனிதனின் ஒரு சிறு கூட்டத்தின் வீரசாகசங்களைக் காட்டும், எந்தப் பெரிய எதிரிகளையும் நவீன



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுதங்களைக் கொண்டு ஒருவன் தோற்கடிக்கும் 'ராம்போ', ஜாக்கிசான் படங்கள் ஓடப் புலிகளே ஊக்குவித்தனர். இறந்த போராளிகளுக்கு கட்டப்பட்ட கல்லறைகள் சுதந்திரம் அடைந்த நாட்டில் செய்யப்பட்டிருப்பதைக் காட்டிலும் அழகூட்டும் பராமரிக்கும் வேலைகள் செய்யப்பட்டன. தமிழீழ வங்கியும், நாணயங்களும் புழக்கத்திற்குக் கொண்டுவர முயற்சிகள் நடந்தன.

யுத்த ரீதியில் யாழ் ஒரு இராணுவம் முடக்கப்பட்ட பிரதேசம் எனப் புலிகள் ஏற்க மறுத்தனர். விடுதலைப் பிரதேசமாக வட-தென் வியட்நாம் போல் யாழை விடுதலை அடைந்த 'வட தமிழீழமாக' கருதினர். இது ஒரு மாயையில் புலிகள் செய்ததல்ல. யாழுக்குள் உள்ள இராணுவ கடற்படை முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வருவதை, தீவுப்பகுதி தம் கையை விட்டுப் போனதைக் கண்டார்கள். கிழக்கில் தாம் செயற்படா தற்காப்பு நிலையில் இருப்பதையும், எதிரியின் கட்டுப்பாடு மேலோங்கி வருவதையும், வடக்கின் எல்லைப்பிரதேசங்களில் கெரில்லாக்கள் தந்திரோபாயரீதியான சில தாக்குதல்களிலும், மிகக் குறைந்தளவான போர்நடவடிக்கையிலும் மட்டுமே ஈடுபட்டு வருவதையும், யாழில் எதிரி முகாம்கள்மீது வெற்றியளிக்கும் நிர்மூலமாக்கும் எந்த தாக்குதல்களையும் நடத்த முடியவில்லை என ஒட்டு மொத்த யுத்த சூழ்நிலைமையையும் புலிகள் கண்ணாரக் கண்டனர். எதிரி எப்போது வேண்டுமானாலும் யாழைத் தாக்குவான் என்பதையும் தெரிந்திருந்தனர் புலிகள், அதனாற்றான் இறுதி யுத்தம் வரப்போகிறது, தயாரிப்புக்கு 'பவுனும் பணமும்' வசூலிக்கும் இயக்கத்தை நடத்தினர்.

85-களைப் போல் அன்றி இம்முறை யுத்தம் மூலோபாய ரீதியாக இரண்டாவது கட்டத்துள் நுழைந்து இரண்டு மூன்று வருடங்களை தாண்டியபோதும் இராணுவ ரீதியாக யுத்தம் வளர்ந்து செல்வதற்கான தயாரிப்புக்கள், திட்டமிட்ட எதிர் தாக்குதல்களும், தந்திரோபாய ரீதியான தாக்குதல்களும் போர் நடவடிக்கைகளும் அதற்கான படைவடிவ, ஆயுதநிலை வளர்ச்சிகளும் நடக்கவில்லை. ஒருசில வெற்றி கண்ட தோல்வியடைந்த பெரிய இராணுவ நடவடிக்கைகள்தான் நடந்தன. அவை எதுவும் எதிரியை மூலோபாயரீதியாக பலவீனப்படுத்தவில்லை. எதிரிக்குத் தனது பலவீனங்களைக் கற்றுக்கொடுக்கும் தாக்குதல்களாகவே எதிர்மறையில் இருந்தன. எதிரியைத் தொடர்ந்தும் முடமாக்கல் நிலையில் வைத்திருக்க முடியும் எனவும், எதிரிகள் தங்களை அங்கீகரித்துப் பேச்சுவார்த்தைக்குக் கீழிறங்குவதே ஒரே வழி எனவும் புலிகள் தவறாகக் கணித்தனர்.

விடுதலை யுத்தத்தின் இரண்டு வடிவங்களான கெரில்லா யுத்தமுறை, கிரமமான யுத்தமுறையில், கெரில்லா யுத்தமுறையைக் கொண்டு யாழில் எதிரியை முகாமுக்குள் முடமாக்க முடிந்தது உண்மையே! ஆனால் கிரமமான யுத்த முறைக்குத் தம்மை வளர்க்கத் தவறினால் கிரமமான யுத்த முறையில் தேர்ச்சிபெற முடியாவிட்டால் எதிரியைத் தொடர்ந்தும் முடமாக்கல் முறையில் வைத்திருக்க முடியாதுபோகும். யாழில் எதிரியை முடமாக்கல் நிலையில் நீட்டிக்கவும் நாம் கிரமமான யுத்தமுறைக்கு வளரவும் வேண்டியிருந்தது. கிழக்கில் எதிரியின் நிம்மதியான வாழ்வைக் கெடுக்க நாம் தற்காப்பில் இருந்துகொண்டு தந்திரோபாயமான கொரில்லா தாக்குதல்களை, போர்நடவடிக்கைகளைச் செய்யவேண்டும். பெருநிலப்பரப்பில் எதிரிக்கு ஓய்வு கொடுக்காமல் தந்திரோபாயமான தாக்குதல்களை வளர்க்க வேண்டும். இதன்மூலம் எதிரி முடமாக்கப்பட்ட பிரதேசத்தில் இராணுவத்தின் பலத்தை அதிகரிக்க முடியாதபடி செய்ய வேண்டும். யாழில் மேலும் எதிரியைப் பலவீனப்படுத்த பின்புறமாகக் கிழக்கிலும், பெருநிலப்பரப்பிலும் புலிகளின் இராணுவ நடவடிக்கைகள் வளர்க்கப்பட்டிருக்க வேண்டும். பெருநிலப்பரப்பில்கூட எதிரியை முடமாக்கும் ஒரு பிரதேசத்தை வளர்க்க முயன்றிருக்க வேண்டும்.

கிரமமான யுத்தத்தின் இரண்டு முறைகளான நடமாட்ட யுத்தமுறை ஸ்தான யுத்த முறைக்கு வளர்வது மூலோபாயரீதியான இரண்டாவது கட்டத்தில் உள்ள நமக்கு மிக அடிப்படையாக உள்ளது. யாழின் யுத்த சூழ்நிலைமையும், புவியமைப்பும் இதுவரை நடமாட்ட யுத்தத்திற்கான வாய்ப்புகளை மட்டுப்படுத்தியுள்ளது. எதிரி பெரிய இராணுவக் கடற்படை முகாமுக்குள் முடமாக்கப்பட்டிருந்தும், யாழில் உள்ள முகாம்களுக்கு இடையிலும், யாழுக்கு வெளியேயான முகாம்களுடனான தொடர்பிலும், படைப்பரிமாற்றம், ஆயுத பரிமாற்றம் மற்றும் அன்றாட தேவைகளுக்கான போக்குவரத்திற்கு வான்வெளி, கடல்வெளி போக்குவரத்தைப் பயன்படுத்தினான். தரைப் போக்குவரத்தை நிறுத்தினான் (ஆனால் கிழக்கிலும், பெரு நிலப்பரப்பிலும் நடமாட்ட யுத்தத்திற்கான பெரு வாய்ப்புக்கள் நிறைய உண்டு). எதிரி ஐந்து ஆண்டுகள் முகாமுக்குள் முடங்கிக் கிடைக்கையில் நாம் ஸ்தான யுத்த முறைக்கு வளர்ந்திருக்க வேண்டும். அப்போது மட்டுமே எதிரியின் முகாம்கள் மீது வெற்றியளிக்கும் திட்டமிட்ட தாக்குதல்களை நடத்த முடியும். எதிரியை நிர்மூலமாக்கி முகாமை கைப்பற்றி வைத்திருக்கவோ-அழிக்கவோ முடியும். புலிகளின் ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் தோல்வியும், பூனகரி முகாம் தாக்குதல் வெற்றியும், ஸ்தான யுத்தத்தின் தொடக்க வடிவங்கள். ஆனால் அவை ஸ்தான யுத்தத்திற்கான நிரந்தபடை வடிவத்துடன் நடத்தப்பட்டவை அல்ல. படை நிலப்பிரிப்பிலும், ஆயுதவகைப்படுத்தல் முறையில், தொலைத்தொடர்பு போக்குவரத்துமுறையில் படைவியூகத்தில் பல கொரில்லாக் குழுக்களின் சேர்க்கையாக தேர்ந்தெடுத்த கூட்டு வடிவமாக நடத்தப்பட்டது. யாழ் கோட்டை மீதான வெற்றி புலிகளின் ஸ்தான யுத்தத்தின் வெற்றியாகப் பார்க்கப்படுகிறது. யாழ் கோட்டைச் சமரில் எதிரி தந்திரோபாயமாகப் பின்வாங்கிய பின்னும், எதிரி உள்ளே இருப்பதாக நினைத்து புலிகள் தாக்கிக்கொண்டிருந்ததை கவனத்தில் கொண்டு பார்ப்பது நல்லது. மண்டைதீவு முகாம் மீதான தாக்குதல் ஒரு ஸ்தான யுத்தமுறைத் தாக்குதல் அல்ல Amphibious தாக்குதல் வெற்றியாகும். தீவுப்பகுதியைப் புலிகளிடமிருந்து எதிரி கைப்பற்றியது கிரமமான யுத்த முறைக்கு Amphibious தாக்குதல் முறையைப் பயன்படுத்தியதாகும்.

புலிகள் பெரு நிலப்பரப்பில் நடமாட்ட யுத்தத்தை தொடங்கி வளர்ந்திருக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை எதிரி வழங்கிக் கொண்டிருந்தான். புலிகள் கெரில்லா யுத்த முறையுடன் நிறுத்திக் கொண்டனர். அல்லது கெரில்லாக் குழுக்களின் கூட்டு நடவடிக்கைகளுடன் திருப்தியடைந்தனர்.

□□

ஒரு முகாம் மீதான தாக்குதலில் கூட்டுக் கொரில்லா யுத்த முறை வடிவத்தையும், அவ்வேளை எதிரிக்கு உதவி வரும் அக்கம் பக்கப் படைகளை தனித்தனியாக கொரில்லாக் குழுக்கள் மூலம் எதிர்பார்த்த பாதையில் கிடைக்கும் எதிரியை மட்டும் தாக்கி அழிப்பதும்- தடுத்து நிறுத்துவதும் ஆன முறையைக் கையாண்டனர். யாழ் தமது கட்டுப்பாட்டில் இருந்த போது, புலிகள் இங்கு ஸ்தான யுத்த முறைக்கு வளர்வதிலும், பெரு நிலப்பரப்பில் நடமாட்ட யுத்த முறைக்கு வளர்வதிலும் மொத்தத்தில் கிரமமான யுத்தத்திற்கு தம்மைத் தயாரிப்பதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அன்புடன் சுவடுகள் வாசகர்களுக்கு,

நீண்ட நாட்களாகவே சுவடுகள் தாமதமாக வருகிறது என்ற குற்றச்சாட்டைக் கேட்டுப் பழகிவிட்டதனால், இப்போது அதற்குச் சமாதானம் சொல்லாது நடக்கக்கூடிய விடயங்களை நேரடியாகவே மனம்விட்டுச் சொல்வது நல்லது என நம்புகிறோம். சுவடுகள் கடந்த இரண்டு வருடங்களாகப் பல நடைமுறைச் சிக்கல்களைச் சந்தித்திருக்கிறது. இதனால் எமது விருப்பப்படி வாசகர்களை ஒழுங்காகச் சந்திக்க முடியவில்லை. முக்கியமாகக் கடந்த வருடத்தில் ஆறு இதழ்கள்கூட வெளிவரவில்லை. எனினும் இந்தக் காலம் சூழலையும், சுவடுகளின் எதிர்காலத்தையும் பற்றி எண்ணத் தகுந்த அவகாசம் தந்தது உண்மை.

இந்த இதழில் இருந்து சுவடுகளை இரு மாதங்களுக்கு ஒரு இதழாக வெளியிட முடிவு செய்துள்ளோம். இந்த வருட ஆரம்பத்தில் வந்த இதழையும் சேர்த்து ஆறு இதழ்கள் 1997ல் வெளிவரும். இது எமது கைகளில் மாத்திரமன்றி உங்கள் கைகளிலும் தங்கியுள்ளது. இதனைச் சாதிப்பது சாத்தியப்பட்டு, எமது நிலையை உறுதிப்படுத்த முடிந்தால், அடுத்தடுத்த வருடங்களில் மீண்டும் சுவடுகளை மாத இதழாக வெளியிடவே விரும்புகிறோம். இருமாத இதழாக வெளிவருவது சுவடுகளுக்கு ஏற்பட்ட தொய்வு எனக் கருதாமல் தொடர்ந்தும் தங்களது ஆதரவை எதிர்பார்க்கிறோம். புதிதாகச் சேரும் சந்தாதாரருக்குப் புதிய சந்தாக் கட்டணம் செல்லுபடியாகும். பழைய வாசகர்கள் பலர் சந்தா செலுத்தவேண்டியிருப்பதால் அவர்கள் பழைய கட்டணத்தையே செலுத்தியுதவ வேண்டுகிறோம்.

சுவடுகளில் முதல் அத்தியாயம் வெளிவந்த நல்லதோர் வீணை செய்தே என்ற நெடுங்கதை, கதாசிரியையான உஷா கனகரத்தினத்தின் விருப்பிற்கிணங்கத் தொடர்ந்து வெளிவராது நிறுத்தப்படுகிறது. இக்கதை வேறொரு வார இதழில் தற்போது பிரசுரமாகி வருகிறது. பிறிதொரு சந்தர்ப்பத்தில், வளர்ந்துவரும் இளம் எழுத்தாளரான அவரது பிறிதொரு கதையைச் சுவடுகள் வாசகர்களுக்கு அளிக்கலாமென நம்புகிறோம்.

சுவடுகள் வெளிவருவதில் ஏற்பட்ட தாமதங்கள் பல படைப்பாளிகளைச் சோர்வடையச் செய்துவிட்டதை உணரமுடிகிறது. படைப்பாளிகள் மீண்டும் முன்போலவே படைப்புகளை அனுப்பவேண்டுகிறோம். இயன்றவரை பல படைப்பாளிகளுக்கும் களம்தரவே சுவடுகள் விரும்புகிறது. அனைத்து மக்களுடைய விடுதலையையும் உறுதிசெய்யும் வகையிலான, மனிதகுல மேம்பாட்டுக்குக் குரல்தரும் படைப்புகளே சுவடுகளின் விருப்பம்.

கடந்த காலத்தில் சுவடுகளின் ஒழுங்கீனம், தொடர்புகளைப் பேணுவதிலும், கடிதங்களுக்குப் பதிலெழுதுவதிலும் தாமதங்களை ஏற்படுத்தியிருந்தது. இதற்காக வாசகர்களிடம் மன்னிக்க வேண்டுகிறோம்.

புதிய வாசகர்கள் சுவடுகளைப் பெற விரும்பி எழுதும் கடிதங்கள் இலங்கையில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் கிடைக்கின்றன. இவர்களுக்கான இதழ்களை அனுப்புவது பெருத்த பொருட் செலவை உண்டுபண்ணும் என்றாலும் சுவடுகள் இயன்றவரை இவர்கள் வீடுதேடி வரும். ஆயினும், சுவடுகள் கிடைப்பது பற்றியோ, சுவடுகள் பற்றிய தங்கள் கருத்துகளையோ ஒரு வரி எழுத மறக்கும் வாசகர்கள் இந்த வாய்ப்பை இழக்க நேரிடும்.

சுவடுகளை இலங்கை, இந்தியாவில் பரவலாக்க உங்களது ஆலோசனைகள் வரவேற்கப்படுகின்றன.

சுவடுகளின் புதிய உருவம் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? சுவடுகளை உருவரீதியில் அழகுபடுத்த என்ன செய்யலாம்? இவை பற்றியும் எழுதுங்கள்.

வரும் இதழில் மறுபடியும் சந்திப்போம்.

இவண்,
துருவபாலகர்கள்,
ஒஸ்லோ,
நோர்வே.

கவனம் செலுத்தியிருந்தால், எதிரி தனது பலத்தை எங்கும் ஸ்திரப்படுத்திக் கொள்ளவிடாது தடுத்திருக்கலாம். பெருநிலப்பரப்பில் கொரில்லா யுத்தமுறையைக் கொண்டே எதிரியை முடமாக்கல் நிலைக்கு தள்ளுவதில் கூட முன்னுரிமை கொடுக்கத் தவறிய புலிகளால் நடமாற்ற யுத்த முறைக்கு வளர்வது காரிய சாத்தியமற்றதே! கிழக்கில் புகையிரதப் பாதைப் பாதுகாப்பு, நெடுஞ்சாலைப் பாதுகாப்பு மற்றும் தேடுதல்

வேலி

ஈடுபடும் எதிரியின் செக்சன், பிளடூன்கள்மீது மட்டக்களப்பில் இன்றுவரை புலிகளின் கெரில்லாத் தாக்குதல் வெற்றியளித்து வருகிறது. இதை நடமாட்ட யுத்த முறையின் வெற்றியாகப் பார்ப்பது மிகத் தவறாகும். இது நடமாட்டத்திலுள்ள எதிரியின் சிறு படைப்பிரிவுகள் மீது நடமாட்டத்திலுள்ள கொரில்லாக்களின் தாக்குதல்களாக, வெற்றிகளாக மட்டுமே பார்க்க வேண்டும். வெலி ஓயா தாக்குதலின் மிகப் பெரிய தோல்வி. ஆனையிறவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோல்வி தொடக்க நிலையிலிருந்த ஸ்தான யுத்த முறையில் நடத்தப்பட்ட தாக்குதல்களின் தோல்வியாகும். இவை புலிகளின் மூலோபாய ரீதியான அதிர் தாக்குதலுக்கான தயாரிப்புக் கட்டத்தின் தோல்வியாக மாற்றிவிடவில்லை. அதேபோன்று கோட்டை, பூநகரி, மண்டைதீவு வெற்றிகள் எதிரியை மூலோபாய ரீதியாக பின்வாங்கும் 3-வது கட்டத்துக்குத் தள்ளிவிடவும் இல்லை. இந்தத் தோல்விகள், வெற்றிகளின் படிப்பினைகளைக் கொண்டு, யாழ் மீதான கட்டுப்பாட்டை தக்க வைப்பதற்கான தேவையை இராணுவ ரீதியில் புரிந்து கெரில்லா யுத்த வடிவத்திலிருந்து கிரமமான யுத்த வடிவத்திற்கு வளர்வதிலும், ஸ்தான யுத்த முறையைச் செழுமைப்படுத்தி வளர்ப்பதிலும், நடமாட்ட யுத்த முறையை உருவாக்குவதிலும் முன்னுரிமை கொடுப்பதற்குப்பதில் குண்டான் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதில் அதிக அக்கறை காட்டினர். கொரில்லா யுத்த வடிவத்துள் புதிய புதிய யுக்திகளை உருவாக்கினர்.

தீவுப்பகுதியின் தோல்வியும், கடற்படை உதவியுடன் இராணுவம் கடல் வழிமூலம் ஒரு பகுதியில் இருந்து மற்றப் பகுதிக்கு வந்து Amphibious தாக்குதல் நடத்துவதையும் கண்டனர். எதிரியின் கடல்வழிப் போக்குவரத்தைத் தடுக்கவும், புலிகளின் வடக்குக்கும், கிழக்குக்குமான தரைவழி, படகுவழிப் போக்குவரத்தை ஆனையிறவு முகாமும், பூநகரி முகாமும் தடுத்து வந்தது. ராஜீவ் கொலைக்குப் பின் தமிழகத்துடனான கடல் போக்குவத்தில் ஏற்பட்ட நெருக்கடிகளாலும், கூடவே திரிகோணமலை, கொழும்பு துறைமுகங்களின் மீதான தாக்குதலுக்கு கடல் வழியின் சாதகமான வாய்ப்பையும் உணர்ந்து புலிகளின் தலைமை 94-ல் கடற்புலிகள் என்ற கொரில்லா அணியை உருவாக்கியது. 1983-களில் இருந்து தமிழ்நாட்டுக்கு பயிற்சிக்குச் செல்லும் போராளி இயக்கங்கள் படகுகளில் சிறந்த நீச்சல் வீரர்களை, வண்டி ஓட்டிகளை உருவாக்கி வைத்திருந்தனர். சிறீலங்கா கடற்படையை தவிர்க்க முடியாது சந்தித்தால் தாக்குவதற்கும் - தப்புவதற்கும் படகுகளில் L.M.Gயும் பொருத்தி வைத்திருப்பது வழக்கமாக இருந்தது.

95-ல் யுத்த நிறுத்தத்தை உடைத்த, திருகோணமலைத் தாக்குதல், முன்னேறிப் பாய்தல், நடவடிக்கையில் புலிகளின் எதிர்நடவடிக்கையான புலிப்பாய்ச்சலின்போது காங்கேசன் துறைமுகத்தில் 'எடித்தரா' ராடார் பொருத்திய கட்டளைக் கப்பலை மூழ்கடித்தது. முல்லைத்தீவுக் கடலில் கடற்படை கொண்டுவந்த பயணிகள் கப்பலைக் கடத்தியது, மற்றும் பல கடற்சமரில் கடற்படையினரையும், கடற்காவல் ரோந்துப் படகுகளையும் வெடிபொருள் நிரம்பிப் படகுகளில் சென்று மோதியும், நீரடி நீச்சல் அணியின் தற்கொலைத் தாக்குதல் மூலமும் எதிரியைக் கடலிலும் புலிகள் தாக்கத் தொடங்கினர். பூனகரி, மண்டைதீவு இராணுவ முகாம் தாக்குதலின் வெற்றியில் கடற்புலிகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. இவை கடல்புலிகளின் கொரில்லாப்போர் வெற்றிகளாகும். யாழின் புவியமைப்பும் நீண்ட நெடிய கடல்பகுதியும், யுத்த நிலைமையும் எதிரிக்கு எதிராக கடலிலும் யுத்தத்தை நடத்தக் கோரியது. இதைப் புரிந்து கொரில்லாப் போர் என்ற மட்டத்துக்கு வளர்ந்தது புலிகளின் தலைமை.

எதிரியின் விமானப்படையானது யுத்தத்தில் வழங்கிவந்த பங்கை அறிவோம். தேசிய விடுதலை யுத்தத்தில் புலிகள் 95-ல் நடத்திய விமான எதிர்ப்பு ஏவுகணைத் தாக்குதல் யுத்தத்தின் போக்கை திசை திருப்பிவிடும் என எதிர்பார்க்கும் அளவிற்கு இருந்தது. பலாலியில் புலிகளின் ஏவுகணைத் தாக்குதலால், படைகளை ஆயுதங்களை மற்றும் இராணுவ சாதனங்களை உணவை ஏற்றி இறக்கும் போக்குவரத்து அவ்ரோ விமானம் 2 சுட்டு வீழ்த்தப்பட்டது. புலிப்பாய்ச்சலில் F -7 ரக குண்டு வீச்சு விமானம் வீழ்த்தப்பட்டது. எதிரி தற்காலிகமாக தனது விமானப் போக்குவரத்தை நிறுத்தும் அளவிற்கு பாதிப்பை ஏற்படுத்தியது. கொழும்புக் கடலில் 60 இராணுவ வீரர்களுடன் கடலில் வீழ்ந்து ஒரு விமானம் மூழ்கியது. இதற்குப் புலிகள் காரணமல்ல என்று பின் தெரிந்தது. புலிகளின் குறுகிய தூர ஏவுகணைத் தாக்குதலை புரிந்துகொண்ட எதிரி விமானம் இறங்கும், ஏறும் முறையில் மாற்றம் செய்தான். உயரப் பறந்தான். தனது இராணுவ நடவடிக்கையில் புலிகளின் முகாம்களைத் தனித்து அடையாளங் கண்டு தாக்க முடியாத நிலையில் உத்தேசமான குண்டு வீச்சுக்களை பரவலாக நடத்தினான். அழிவுகளை அதிகரித்தான். புலிகளிடம் இருப்பதாகக் கருதப்படும் கிளைடர் இலகுரக விமானம் இதுவரை பயன படுத்தப்படவில்லை. சூரிய ஒளி 1,2-இல் எதிரியின் விமானப்படைத் தாக்குதலை புலிகளால் தடுத்துவிட முடியவில்லை.

ஒரு கட்டம்வரை தரையிலும் கடலிலும் வானிலும்கூட கெரில்லா யுத்தமுறையைக் கொண்டு எதிரியை அவனின் சிறிய படைப்பிரிவுகளை அழிக்கவும், நிலைகுலையவும், தற்காலிகமாகப் பின்வாங்கச் செய்யவும் முடியும். ஒரு கட்டத்திற்கு அப்பால் எதிரியின் கிரமமான படைப்பிரிவுகளை எதிர்கொள்ளவும் எதிர்தாக்குதல் நடத்தவும், குறைந்தது நமது பிரதேசத்தைப் பாதுகாக்கவும் எதிரியை விரட்டியடிக்கவும், அழிக்கவும் நாமும் கிரமமான யுத்த வடிவத்திற்கு வளர வேண்டும். நடமாட்ட - ஸ்தான யுத்தமுறையில் தேர்ச்சிபெற்று வளரவேண்டியது யுத்த விதியாகும்.

புலிகள் கிரமமான யுத்த வடிவத்திற்கு வளர்வதற்குப் பதில் கொரில்லா யுத்த வடிவத்துள் நின்று கொண்டனர். கொரில்லாப் போரில் மிக நவீன ஆயுதங்களை, வெடிப்பொருட்களைப் பயன்படுத்தினர். கெரில்லாப் போர்முறையில் அரிதாகப் பயன்படுத்தப்படும் (சுற்றி வளர்ப்பை உடைக்கவும், எதிர்த் தாக்குதலிலும்) தற்கொலைத் தாக்குதல் செயலை, புலிகள் தற்கொலைத் தாக்குதல் படைப்பிரிவாகவே தரையிலும், கடலிலும் மாற்றினர். 'கரும்புலிகள்' வடக்கு கிழக்கில் எதிரிக்கு எதிராகவும், தெற்கில் அரசியல் தலைவர்கள் மற்றும் இராணுவத் தலைமையகம், கொலன்ன எரிபொருள் நிலையம், துறைமுகம், மத்தியவங்கி தாக்குதல்கள் கரும்புலிகளின் தற்கொலைக் கொரில்லா நடவடிக்கைகளே! "எல்லாளன் படை" எதிரிகளுக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யும் படை, அந்நிய நாட்டுத் தூதரகங்களுக்கு, முதலீடுகளுக்கு எச்சரிக்கை விடுவது, அண்மையில் தேயிலையில் விசம் கலந்த செய்தியை வெளியிட்டது (தம்பாப்பிள்ளை மகேஸ்வரன்பாணி). புலிகள் தற்கொலைக் கரும்புலிகளை வளர்த்தனர். ஏன், புலி இயக்க உறுப்பினர்களை உள்நாட்டில் எதிரிப்படையோ, உளவுப்பிரிவோ, வெளிநாடுகளில் பொலிசாரே கையால் பிடித்தால்கூட விசம்தின்று தற்கொலை (தாக்குதல் அல்ல) செய்யும் படையாக வளர்த்தனர். இவையெல்லாம் உலகளவில் கொரில்லா வடிவ போர்முறைக்குள் புலிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட, வளர்க்கப்பட்ட புது விசயங்கள். இவற்றைப் பார்க்கும் சிலர் கொரில்லா யுத்த வரலாற்றில் புலிகளின் கொரில்லாப் போர்தான் அதி உயர்ந்த வடிவம் என்றும் சேகுவேரா, பிடல் காஸ்ட்ரோ, டெஜிரெப்ரே வரிசையில் நவீன கொரில்லா யுத்த தத்துவப் படைப்பாளன் பிரபாகரன் எனவும் கூறுகின்றனர். டெஜிரெப்ரே தத்துவத்தின் வாரிசு என்பதுதான் உண்மையாகும். தமிழீழ தேசய விடுதலை யுத்தத்தில், கொரில்லாப் போர் என்றால் "தற்கொலைப் போராளிகளின் போர்" என உலகுக்கு காட்டிய தவறைச் செய்துள்ளனர்.

(இன்னும் வரும்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நோர்வேத்
# தமிழன்

www.tamilarangam.net

## அரசியல் தஞ்சம்கோரும் தமிழருக்கு

# ஒஸ்லோ பொலிஸ் விசாரணையின்போது மிரட்டல்?


அண்மைக்காலமாக நோர்வேயில் அரசியல் தஞ்சம்கோரும் இலங்கைத்தமிழர்கள் பொலிசாரால் அரசியல் தஞ்சவிசாரணையின் போது மிரட்டப்படுவதாக செய்திகள் வந்திருந்தன. இதுபற்றி வெளியில் சொல்ல நீண்டகாலமாக யாரும் முன்வராத நிலையில்.இறுதியாக தமிழ் அமைப்புகள் ஒன்றிணைந்த அகதிகள் நடவடிக்கைக் குழு எடுத்தமுயற்சியினால் 3 தமிழர்கள் தமக்கு நடந்த மிரட்டல்களையும் கெடுபிடிகளையும் பற்றி 14-02-97 இல் வெளிவந்த நோர்வே நாட்டின் பெரிய பத்திரிகையில் ஒன்றான டாக்பிளாத பத்திரிகைக்கு முகம் காட்டாது விபரமாகக்கூறியுள்ளனர். அவர்களில் ஒருவரது சோகக்கதை வருமாறு:-

என்னைக் காலை 9.30 க்கு விசாரணைக்கு அழைத்தார்கள். என்னை விசாரணைசெய்யும்போது சட்டத்தரணி என்னோடு இருக்கவில்லை. மொழிபெயர்ப்பாளர் மட்டுமே இருந்தார்.விசாரணையின் இடையில் மேசையில் கையால் இறுக்கி அடித்துபுத்தகங்களை மேசை மேல் எறிந்து விளக்கை அணைத்துவிட்டு விரட்டினார். அவர் கூறுவதை நான் ஒப்புக்கொள்ளாவிடில் எனது மனைவி-பிள்ளைகளிடமிருந்து பிரித்துவிடுவதாகவும் மிரட்டினார்.அவர் தொடர்ந்து மிரட்டும்போது என்னை தன்னால் எந்த நேரமும் இலங்கைக்கு திருப்பியனுப்பமுடியும் எனவும் கூறினார். அவர் திரும்பத்திரும்ப இலங்கையர்களின் வழக்கம் பொய்யும் புரளியும் பேசுவதுதான் என அடிக்கடி கூறினார். நோர்வே பொலிஸார் வழமையாக அடிப்பதில்லை. ஆனால் தேவையேற்படும்போது அதையும் செய்வேன் என மிரட்டியதாக பத்திரிகைக்கு கூறியுள்ளார்.

## உள்ளே...


- நோர்வே தமிழன் சொல்வது
  ஆசிரியர் கருத்து
- வெளி நாட்டவர் விதிகளில் தளர்வு?
- கடி பரவட்டும்!
- நோர்வே தமீழ் அட்டவணை.
- தமிழ்ச் சிறுவர்களுக்கு உதவ நோர்வேப்பெண்


நோர்வே அரசே
கொலைக்களத்திற்குத்
தமிழர்களைத் திருப்பி
அனுப்பாதே!

உங்கள்
அச்சுத் தேவைகளை
உயர்ந்த தரத்தில்
வடிவமைத்துத்தரும்
ஒரு தமிழ் அச்சகம்.

கணிப்பொறிகளின் உழைப்பு..
கலைநயம் மிகுந்தவர்களின் நினைப்பு...
கச்சிதம் பொதிந்த அமைப்பு...

ARTISTIC

Hausmannsgt.6, 0186 Oslo, Tlf: 22 36 20 26
Mobil: 92 03 02 53. Fax: 22 36 20 26


தளம்: 1 காலம்: 2 இளவேனில்க் காலம் 1997

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## தமிழ்ச் சிறுவர்களுக்கு உதவ

# நோர்வே பெண்



கடந்த மே மாதம் நடுப்பகுதியில் நோர்வேயின் பிரபல வீராங்கனை கைப்பந்து காப்டன் சுசானா இலங்கைக்கு சிறுவர் காப்பகம் ( REDD BARNA ) சார்பாக விஜயம் செய்தார்.

ரெட்பானா அமைப்பானது வறிய நாடுகளில் சிறுவர் நலன்களுக்காக உழைத்து வருகின்றது.

கடந்த வருடம் ஒலிம்பிக் கோடைகால போட்டி நடைபெற்ற போது அட்லாண்டா நகரில் போர் நடைபெறும் நாடுகளில் உள்ள (14 நாடுகளுக்காக அதில் இலங்கையும் முக்கிய நாடாக கருதப்பட்டது.) சிறுவர்களுக்காக நிதி திரட்டலில் ஈடுபட்டிருந்தது. இதன் ஒரு பகுதியாகவே இவர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தார்.

படத்தில் மட்டக்களப்பு பகுதியில் உள்ள 'ஐயன்கேணி' கிராமத்தில் லோகேஸ்வரனோடு காணப்படுகிறார். லோகேஸ்வரன் 17வயதுடைய இளைஞர். இவர் சிலகாலத்தின் முன்னர் தனது நண்பர்களுடன் விளையாடிக்கொண்டு இருந்த போது பெட்டி ஒன்று வெடித்ததால் தனது இரண்டு கைகளையும் இழந்தவர்.

## நல்ல நாடகங்கள்

நோர்வே வாழ் தமிழ் நாடக எழுத்தாளர்களில் திரு.தியோகுப்பிலஸ் முக்கியானவர். இவரின் 'புகலிடப்பறவைகள்' சிறுவர் நாடகம் அண்மையில் முத்தமிழ் அறிவாலயம் சிறுவர் தமிழ்ப்பாடசாலையின் இரண்டாவது ஆண்டு விழாவில் மேடையேற்றப்பட்டது. புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சமகாலத்தில் மேடையேறிய சிறுவர் நாடகத்தில் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

இவரின் கத்தோலிக்க மன்றத்தினரின் கடந்த ஒளிவிழாவில் மேடையேற்றப்பட்ட செம்பாட்டு மண் நாடகம் பலத்த சர்ச்சையை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. வழமையாக இயக்க மட்டத்தில் பார்வை மட்டத்தில் இருந்தே பெரும்பான்மையான நாடகங்கள் வெளிவந்துள்ளது. ஆனால் இவரின் இந்த நாடகம் இதற்கு அப்பால் விலகி யாழ்ப்பாணத்திலருந்து வெளியேறிய மக்களின் துயரங்களின் பல்வேறு பக்கங்களை நாடி பிடித்துப்பார்க்க முனைந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

அண்மையில் அன்னைபூபதி சிறுவர் பாடசாலையில் மேடையேற்றப்பட்ட இவரது சிறுவர் நாடகம் ஏழு வர்ணங்களை முதன்மைப்படுத்தி ஒற்றுமையை வழியுறுத்தி அமைக்கப்பட்டிருந்தது. இதில் கையாண்ட உத்தி முறை புதிதாகவும் பாராட்டையும் பெற்றது.

### அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயம்

நோர்வே வாழும் தமிழர்களுக்காக இந்து ஆலயம் ஒன்றை அமைப்பதற்கு நோர்வே இந்து கலாச்சார மன்றம் புதிய கட்டிடம் ஒன்றை வேண்டியுள்ளது. இதனை ஆலயமாக புனரமைப்பதற்கு பெருந்தொகைப் பணம் தேவைப்படுவதாகவும், மக்கள் உதவ வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தொடர்புகளுக்கு: 22213387

### தமிழ் நாத ஒலிபரப்புச் சேவை

ஒஸ்லோவில் ஒன்பது வருடங்களாக ஒலிபரப்பாகுகிறது. பண்பலை (FM) 101.1 அலைவரிசையில் பிரதி வியாழக்கிழமை மாலை 7.30 மணி முதல் 8.30 மணிவரை,ஞாயிறு இரவு 11மணி முதல் 12 மணி வரையும் ஒலிபரப்பாகின்றது.

தொடர்புகளுக்கு: தொலைபேசி-22115600

### புதிய வகுப்புக்கள்

முத்தமிழ் அறிவாலயம் தமிழ்ச் சிறுவர் பாடசாலையில் மிருதங்கம், நடன வகுப்புக்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்புகளுக்கு: 22153563

www.tamilarangam.net

சொல்வது நோர்வேத் தமிழன்

நோர்வேயில் வாழும் தமிழ்மக்களின் தொடர்புகள் எப்படி என்று கேட்டால் அல்லது வாழ்க்கை நடப்பின் தொகுப்புகள் எங்கே என்று கேட்டால் அவற்றிற்கு பதில்சொல்வதற்கே இந்த 'நோர்வேத் தமிழன்' உருவெடுத்துள்ளான். ஆம்,எமது மக்களின் தேவைகள் நாடெங்கும் பரந்துபட்டுக்கிடக்கின்றன. அவற்றையெல்லாம் தொகுத்து சகல நோர்வே மக்களுக்கும் அறியத்தருவதே இந்த 'நோர்வேத்தமிழனின்' கடமையாகின்றது. நோர்வே நாட்டின் ஒருமூலையில் நடக்கும் ஒரு நல்ல விடயமோ அல்லது ஒரு நிகழ்வோ அந்த இடத்துடனேயே தடயம் இல்லாமலும் வேறிடத்துத் தமிழர்களுக்குத் தெரியாமலும் தேய்ந்து விடுகின்றது. அத்துடன் சமூக, கலை, இலக்கிய, அரசியல், வியாபார செய்திகள் முழுமையாக பரந்துபட்ட எல்லோருக்கும் சென்றடைவதில்லை என்ற குறைபாட்டினை நிவர்த்திசெய்வதற்காகவே இங்கு 'நோர்வேத்தமிழன்' புறப்படுகிறான்.

## வெளிநாட்டவர் விதிகளில் தளர்வுதேவை

விடயம் வேறொன்றுமல்ல.நீண்டகாலமாக வெளிநாட்டவர்களுக்கான சமூக உதவிக்கான விதிகளில் ஒன்றாக பொறுப்பெடுக்கும் நகரசபை (kommune) களிலேயே கட்டாயம் வசிக்கவேண்டும் என்ற விதி நடைமுறையிலிருந்து வருகிறது. பெருநகரக் நகரசபை (kommune) களில் வெளிநாட்டவர்தொகை அதிகரிப்பைத் தடுக்கவும் பெருநகர் நகரசபை (kommune)களின் சமூக உதவிச்செலவினத்தைக் குறைப்பதற்காகவும் இம்முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.அநேகமானவர்கள் கட்டாயமாக அனுப்பப்படும் இம்முறையை மறுத்துவருவது தெரிந்ததே.நகரசபை(கொம்யூன்)களிற்கிடையில் நடக்கும் பணம் சம்பந்தமான போட்டியில் வெளிநாட்டவர்களின் மற்றையதேவைகளும்,வாய்ப்பு இழப்புகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்தப்பிரேரணைக்கான தகவல்மதிப்பீடு கடந்த நவம்பரில் எடுக்கப்பட்டுள்ளது .விதிகள் தளருமா?




## இலட்சாதிபதியான அதிர்ஷ்டசாலி

சிறிலங்காவில் இருந்து இடம்பெயர்ந்து அல்டா (Alta) இல் வசிக்கும் Sunil Hemantha Perera என்பவருக்கே வீக்கிங் லொட்டோ (Norsk Viking Lotto) இல் 1.4 மில்லியன் குரோணர்கள் கிடைத்துள்ளது.2 வருடங்களுக்கு முன்னர் நோர்வேக்கு வந்த அல்டா (Perra Alta) இல் உணவுச்சாலையொன்றில் முழுநேரவேலை செயகின்றார்.கணிசமான தொகையினைப்பெற்றும் வேலையைவிடப்போவதில்லையென்றும் தொடரப்போவதாகவும் ஆர்பைதபிளா (Arbeiderbladet) பத்திரிகைக்களித்த பேட்டியில் குறிப்பிட்டிருக்கிறார்.

www.tamilarangam.net

# குணாவின் பதிவுகள்



வந்தவர்கள் போனவர்கள் எழுதிவைத்த குவியலுக்குள்
வளம் நிறைந்த எனது ஊரின் முகவரி என்ன?

மிகவும் எளிமையான ஓவியம் எளிமையான தொகுப்பாககிடைக்கும் போது அற்புதமான ஆற்றலைக் காட்ட முடியும் என்பதற்கு குணாவின் பதிவுகள் ஓர் ஆதாரம். ஆயினும் எவராலும் இலகுவில் கீறிவிடக் கூடியதாக இருப்பவை இவரால் கீறப்பட்டவையாக கருதினால் அது தவறு. அதற்கான துணிச்சல் தான் இவரை ஓவியராகவும் இவரை சித்திரங்களினூடு இவருக்கான ஓவிய மொழி அடையாளத்தையும் கொடுக்கின்றது. குணாவின் படைப்புலகம் புகலிடம் தாயகம் இரண்டையும் அளிக்கும் வெளிப்பாடுகள். புகலிடத்தில் தாயகக் கனவை கீறுகின்றது. எங்கள் கிராமத்திலும் இருக்கிறது வெண் நிலவு என்னும் ஓவியம் தேர்ந்த ஷைத்திரீகனின் கைவண்ணத்தைக் காட்டுகிறது. ஆனால் குணா ஓவியத்தை கற்றவரல்ல. சிறிதும் பயிற்சி எடுத்தவருமல்ல.
புகலிட உபாதைகள். வதைபாடுகள் நேரம் இருளும்ஒளியும் இவரை ரொம்ப பாதிக்கிறது. தொகுப்பு இவரை வதைக்கிற உலகத்தைச் சொல்கிறது. நவீன ஓவியத்திற்கு அந்நியமான இவரத ஓவியங்கள் கறுப்பு வெள்ளை நிறத்தினது. தன்னிலிருந்து எப்போதோ விடுபட்டுப் போன காட்சிப் படிமங்களை கறுப்பு வெள்ளை சுலபமாக கொண்டு வந்து விடுகிறதென குணா சொல்கிறார்.
இலக்கியம் நாடகம் இவரது ஏனைய துறைகள்.தனது ஓவியங்கள் சிலருக்கு பிரச்சனையை ஏற்படுத்துகிறது இனியும் பிரச்சனைகள் வரலாம் ஆனால் அது ஒரு கலைஞனால் வராது என்று அதிக நிச்சயத்துடன் இருக்கின்றார் குணா.
ஒஸ்லோ பேர்கன் ஸ்தவாங்கர்-டென்மார்க் ஆகிய இடங்களில் கண்காட்சிகள் நடாத்தியுள்ளார்.
தமிழ் நோர்விஜிய ஓவியங்களுடன் தற்போது தான் பரிச்சயப்பட்டுக் கொண்டிருக்கும் 29 வயதுடைய குணா மேலும் ஒரு ஓவியத்தொகுப்பிற்கான வேலைகளில் இறங்கியுள்ளார்.பிரபல நோர்வே நாட்டு ஓவியர் முங்க் இன் பாதிப்பில் இவர் வரைந்த ஓவியம் ஓலம் குறிப்பிடத் தக்கது. எப்போதும் நேரம் இருக்கின்றது குந்த போன்ற கவித்துவமான தலைப்புகள் நோர்வே வாழ் கவிஞர்களால் கொடுக்கப்பட்டுள்ளது. இது கூட சுவையாகவும் புதுமையாகவும் உள்ளது.

புலம் பெயர்ந்த ஓவியர்களாக தம்பாவையும் மகாவையும் காண்கிறார்!

## பெருமை

நோர்வேத் தமிழர்கள் பெருமைப் படும்படியாக பல விடயங்களை செய்து வருகின்ற போதும் அவை சரியான பாராட்டுகளையும் பதிவுகளையும் அடையாமல் போய் விடுகின்றன. இனிவரும் காலங்களில் நாம் முனைந்து பதிவுகளாக்க முயற்சி செய்கின்றோம். ஆனால் இது உங்களின் ஒத்துழைப் பின்றி நிறைவு பெறமாட்டாது!

கடந்த வருடம் ஜேர்மனி நாட்டில் நடைபெற்ற பாட்டுப் போட்டியில் ஒஸ்லோ வாசியான திரு அன்ரன் டேவிட் அவர்களுக்கு சிறந்த பாடகரிற்கான பரிசு கிடைத்துள்ளது.

இதே போட்டியில் நோர்வேயிலிருந்து கலந்து கொண்ட இசைக் குழுவான யாழிசைக் குழு கலந்து கொண்ட இசைக்குழுக்களிலேயே சிறந்த இசைக் குழுவாக தெரிவு செய்யப்பட்டுள்ளது!

கடந்த வருடம் பிரான்ஸ் நாட்டில் இயங்கும் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடாத்திய உகைளாவிய நாடக பிரதி போட்டியில் சிறந்த நாடக பிரதியாக நோர்வேயில் வசித்து வரும் திரு பிரேம்ராஜ் சிவசாமி அவர்களுக்கு கிடைத்துள்ளது.

கடந்த வருடம் சுவிஷ் நாட்டில் நடைபெற்ற அய்ரோப்பிய நடனப் போட்டியில் சிறந்த நடன த்திகான பரிசு செல்வி கல்யாணி சிவஞானத்திற்கு கிடைத்துள்ளது.

அனைவரையும் நோர்வேத்தமிழன் வாழ்த்துகிறான்!

www.tamilarangam.net

### தமிழரையும் சுட்டுள்ளார்

கடந்த நவம்பர் மாதம் முதலாம் நாள் பிற்பகல் 5 மணியளவில் ஒஸ்லோ பிரின்செங் என்னும் இடத்தில் வைத்து தமிழர் சுடப்பட்டார். இவரைச் சுட்டவர் பாக்கிஸ்தான் நாட்டைச் சேர்ந்த இளைஞர் ஆவார். துப்பாக்கிச் சன்னம் தமிழரின் வயிற்றுப் பகுதியை துளைத்துச் சென்றுள்ளது. ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சன்னம் அகற்றப்பட்டு சுகமடைந்துள்ளார். இவர் தான் வேலைசெய்யும் கடையிலிருந்து வெளியே வரும்போதே காத்திருந்து சுடப்பட்டுள்ளார். ஆயினும் இதற்கு காரணம் என்னவென்று தெரியாதென்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதே தினம் இதே நபர் இன்னும் இருவரையும் சுட்டுவிட்டே தமிழரையும் சுட்டுள்ளார்.

### 2.3 மீற்றர் பனிமழையின் புதிய சாதனை!

நோர்வே வடபகுதியின் பிரதான நகரமாகிய துறம்சோவில் சென்ற மாதம்வரை கொட்டிய பனிமழை, இந்த புதிய சாதனையை ஏற்படுத்தியுள்ளது.

### வால்நட்சத்திரம்

பூமியை கடந்து பூமிக்கு அண்மையாக சென்று கொண்டிருக்கும் வால் நட்சத்திரம் மார்ச் மாதம் கடைசிப்பகுதியில் இருந்து ஏப்ரல் மாதம் கடைசிப்பகுதி வரை நோர்வே நாடு முழுவதுமாக பார்க்கக் கூடியதாக இருந்தது.


### வெள்ளையருக்கு தாராள விசா

கடந்த வருடம் (1996) அமெரிக்கர்களுக்கும் ஐரோப்பியர்களுக்கும் நோர்வே நாட்டுக்கான விசா அனுமதி இலகுவானதாகவும், ஆசிய ஆபிரிக்கர்களை விட அதிக அளவில் வழங்கப்பட்டும் உள்ளதை வெளிநாட்டுத் திணைக்களம் வெளியிட்ட வருடாந்த அறிக்கையிலிருந்து அறிய முடிகின்றது.

விசா அனுமதிவேண்டி விண்ணப்பித்த அமெரிக்கர்களில் 92 வீதமானவர்களுக்கு அனுமதி கிடைத்துள்ளது. ஐரோப்பியர்களில் 82 வீதமானவர்களுக்கும், ஆசியர்களில் 73 வீதமானவர்களுக்கும், ஆபிரிக்கர்களில் 67 வீதமானவர்களுக்கும் விசா அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

விசா வழங்குவதற்கான மையக் காரணங்களாக நோர்வே நாட்டின் வெளிநாடுடவர் தொடர்பான அரசியல் நிலைப்பாடும், அனுமதி கோருபவர் நாட்டில் உள்ள வெளிநாடு நோக்கி வெளியேறும் போக்கு, இங்கு வந்த பின் விசா அனுமதி காலம் முடிந்த பின் நாடு திரும்பி செல்வதற்கு இருக்கக் கூடிய காரணிகள் என்பன கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவதாக அறிய முடிகின்றது.

இலங்கையிலிருந்து தமிழர்கள் சுற்றுலா விசா அனுமதி பொதுவாக வழங்கப்படுவதில்லை. காரணம் இங்கு வருபவர்கள் இங்கு அகதிகள் தஞ்சம் கோரினால் வழங்கவேண்டி வரும் என்பதால். இதே போல் எண்பதுகளின் கடைசிப் பகுதிகளில் சுற்றுலா விசா அனுமதி பெற்று வந்த பலர் திரும்பிச் செல்லாதது இங்கு குறிப்பிடத்தக்கது.







**தொடர்புகளுக்கு:**

**SUVADUGAL**
**Herslebs gate 43**
**0578 OSLO**

www.tamilarangam.net





# கடி பரவட்டும்!

ஒட்டுக்கேட்டு எழுதுபவர் : மாசிலாமணி

நகைச்சுவை உணர்வு வாழ்வை செழிப்புற வைக்கும் அதன் அடிப்படையில் கடிபரவட்டும் எனும் பகுதியை ஆரம்பிக்கின்றோம் இப் பகுதியில் நீங்கள் கேட்டவையாகவோ அன்றேல் இயற்றியதாகவோ இருக்கலாம்

***சனி இரவு ஒருவீட்டில் camera copy படம் பார்த்துக் கொண்டு ஜொலியாகச் சிலர்:***

-இது ரம்பா?

-இல்லையடா நக்மா

-சிலவேளை ருசிதாவாக இருக்குமோ?

அப்போ அங்கு சென்றவர்:

-என்னடா சும்மா குழம்பிறீங்க, எழுத்தோட்டத்தைப் பார்த்தால் தெரியுமே.

ஏற்கனவே குழம்பிப்போனவர் கடிக்காத குறையாக:

-டேய் எழுத்தோட்டத்திலை விளங்கினாத்தானே.

---

'சுட்ட mobil வைத்திருப்பவர்: டேய் இதிலை ring பண்ண நேர police stStionக்குப் போகுதடா (telefon svar)

mobil வைத்திருக்கும் மற்றவர்: அப்பிடியெண்டா நாங்களெல்லாம் policeஓடையே கதைத்துக்கொண்டு திரியிறம்.

---

***தமிழ்க் கடைக்கு முன்னால்:***

-புதுசா கார் ஒண்டு அவிட்டிருக்குப்போல

-கொஞ்சம் கொஞ்சமா அலைஞ்சு சேர்த்த காசிலைதான் இதை வாங்கினனான்.

(தூரத்திலை நின்ற மூன்றாமவர் நண்பரிடம்)

-அவர் சொல்லிறது வட்டிக்காசை

(கார் வாங்கியவர் கடைக்குள் ஆளோடு ஆளாகக் கலந்துவிட்டார்.)

---

நோர்வே நாட்டிலிருந்து கனடா நாட்டிற்கு பிள்ளைகளை ஆங்கில மொழியில் படிப்பிப்பதற்காக சென்றவர், அங்கிருந்து நோர்வேயில் உள்ள தனது நண்பருக்கு தெலைபேசியி எடுத்தபோது:

எப்படி சுகமாக இருக்கிறியளே? பிள்ளைகள் எல்லாம் எப்படி நல்லா இங்கிலீசு பேசுதுகனோ?

கனடாக்காரர்: அதையேன் கேட்குறீர்....இஞ்ச தமிழ்ச்சனம் புழுத்துப்போயிருக்கு இப்ப பிள்ளைகள் சுத்தத்தமிழ் தான் கதைக்குதுகள்...நோர்வேயில் படிச்ச நொஸ்க்கும் கொஞ்சமாவது கதைக்குதுகள் ஆனால் இங்கிலீஸ் துப்பரவாயில்லை......

---

***தமிழ்க் கடைக்கு முன்னால் சிகரட் குடித்த படிநின்றவர்:***

எங்கமச்சான் இரண்டு மூண்டு மாதமாக் காணேல்லை.?

மற்றவர்: சும்மா தெரியாதே மச்சான், ஜேர்மனிக்குப் போனனான். போன இடத்திலை நிக்க வேண்டியதாப் போச்சுடா.

சிகரட் குடித்த படிநின்றவர்: (நமட்டுச் சிரிப்புடன்) உள்ள.. எப்பிடிச் சாப்பாடு, T.V வசதியெல்லாம் இருக்காம் உண்மையாடா?

(மற்றவர் கடுப்புடன் அங்கிருந்து நழுவுகிறார்.)

## ஆண்டு 2097

### எதிர்காலப் பேராண்டி 1

பேரன்: அப்பப்பா, கணவன் மனைவி என்றால் என்ன?

அப்பப்பா:எங்கடை காலத்திலை கல்யாணம் கட்டி ஒன்றாக வாழ்பவர்களைச் சொல்லிறது.

பேரன்: (மீண்டும் விளங்காமல்) கல்யாணம் என்றால்.....?

அப்பப்பா: ........

### எதிர்காலப் பேராண்டி 2

மனைவி: (வீடியோ போனில்) இந்த வருடத்திலை எந்த மாதம் வீடு எண்டு சொல்லுங்கோ.

கணவன்: ஏன்..எனக்கு june மாதந்தான்.

மனைவி: அப்ப நானும் வீடு எடுக்கிறன் உங்களை நேரில சந்திச்சு கதைக்கத்தான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# நோர்வேக்கு இலங்கையரசு கதவடைப்பு

கடந்த (சித்திரை) மாதம் நடுப்பகுதியில் நோர்வே நாட்டின் பல கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு இலங்கைக்கு விஜயம் செய்து நோர்வே அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவு சரியானது தானா என்று ஆராய்வதற்காக செல்ல விருந்தது.

### திருப்பி அனுப்பப்பட்ட தமிழர்கள்.

நோர்வே அரசு ஈழத்தமிழர்கள் தொடர்பான அரசியல் தஞ்சம் வழங்கும் விடயத்தில் தொடர்ந்தும் கடும் போக்கையே கடைப்பிடித்து வருகின்றது. அரசியல் தஞ்சம் கோரியவர்கள் அனேகரிற்கு கடைசி மனு நிராகரிப்பும் அனுப்பப் பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

இதுவரை ஆறு தமிழர்கள் பலவந்தமாக திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் இலங்கை கட்டுநாயக்கா விமான நிலையம் வரை நோர்வே பொலிசார் கூடவே அழைத்துச் சென்று விட்டுவிட்டு வருகின்றனர். இத்தகைய சம்பவங்களைத் தொடர்ந்து இவ்வாறு கடைசி முறையீட்டு மனு நிராகரிக்கப்பட்டவர்கள் பலர் தாம் பலவந்தமாக பிடித்து திருப்பி அனுப்பப்பட்டுவிடுவோமோ எனும் பயத்தில் முகாமைவிட்டு வெளியேறியுள்ளதாக அறியப்படுகின்றது.

### நோர்வேக்கு கதவடைப்பு


கடந்த (சித்திரை) மாதம் நடுப்பகுதியில் நோர்வே நாட்டின் பல கட்சியைச் சேர்ந்த 4 பாராளுமன்ற உறுப்பினர்கள் கொண்ட குழு இலங்கைக்கு விஜயம் செய்து நோர்வே அரசாங்கம் எடுத்திருக்கும் முடிவு சரியானது தானா என்று ஆராய்வதற்காக செல்ல விருந்தது. அகதிகள் நடவடிக்கைக் குழு அந்தத் தருணம் தமிழ், சிங்கள புத்தாண்டு காலப் பகுதியாகையால் விடுமுறை தினம் என்பதை சுட்டிக்காட்டிய படியால் தற்காலிகமாக விஜயம் பிற்போட பட்டிருந்தது. பின்னர் மே மாதம் 6ஆம் திகதி இலங்கை செல்லவிருந்தது. ஆனால் இவர்களின் விசா அனுமதி மனுவை இலங்கையரசு நிராகரித்ததை தொடர்ந்து அவர்களது விஜயம் மீண்டும் பின் போடப் பட்டுள்ளது. விசா நிராகரிக்கப் பட்டதையடுத்து நோர்வே நாட்டின் அமைச்சர் திரு யான் ஏகலாண்ட் வெளிநாட்டுத் திணைக்களம் மூலம், சுவீடனிலுள்ள இலங்கைத் தூதராலயத்திற்கு இதுபற்றி கடிதம் எழுதியுள்ளார். இதற்கான ஒழுங்குகளை அகதிகளுக்கான நோவாஸ் அமைப்பு மேற்கொண்டிருந்தது. இலங்கையரசு தனது வழமையான தந்திரோபாயத்தை பாவிக்க முனைந்துள்ளது. விசா மறுப்பிற்கு காரணமாக அதன் விளக்கம், இந்தக்காலப்பகுதி நல்லதல்ல என குறிப்பிட்டுள்ளதாம்.அத்தோடு அக்காலப் பகுதியில் கொழும்பு நகர்ப் பகுதியில் பெரிய மகாநாடு நடைபெற இருப்பதாக கூறப்பட்டதாம். ஆனால் அரசியல் அவதானிகளின் கணிப்பில் அந்தக் காலப்பகுதியில் இராணுவம் வன்னி மீதான பாரிய படையெடுப்பை மேற்கொள்ள உள்ளதாகவும் இது தமிழருக்கு சாதகமாக மாறிவிடும் என அரசு பயப்படுவதாக கூறப்படுகிறது. பொதுவாக உல்லாசப் பிரயாணிகளுக்கு முற்கூட்டியே விசா எடுக்கத் தேவையில்லை ஆனால் வெளிநாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் விஜயம் செய்வதற்கு கட்டாய விசா நடைமுறையில் உள்ளது.

இக்குழுவில் ஆர நெஸ் (கிறிஸ்தவ மக்கள் கட்சி) யூருன் ஹாகலர் (சோசலிச இடதுசாரி கட்சி) எர்லிங் போல்க்கவோல்ட் (சிவப்பு கூட்டு முன்னணி) குரு பியலாங்கர் (இடதுசாரி சட்சி) பியாட் வன்விக் (நோவாஸ்) கோல்பியோன் எ்லி (டுரோ நகர சபை மேயர்) ஆகியோரே செல்ல இருந்தவர்களாவர். டுரோ நகரிலேயே அதிகளவு தமிழ் அகதி தற்போது உள்ளனர். இதில் பாராளுமன்ற உறுப்பினர் ஆர்லிங் போல்க்கவோட் அடிக்கடி தமிழர்கள் தொடர்பாக நோர்வே பாராளு மன்றத்தில் குரல் கொடுப்பவர்.

03.05.97 அன்று ஒரு தமிழரை பொலீசார் திருப்பி அனுப்புவதற்காக அகதி முகாமிலிருந்து பிடித்து செல்லப்பட்டுள்ளார். அனைத்து தமிழ் அமைப்புகளும் இணைந்து அகதிகளின் நலன்காக்கும் நடவடிக்கைக்காக மட்டும் உருவாக்கப்பட்ட தமிழ் அகதிகள் நடவடிக்கைக் குழு தமிழர்களை திருப்பி அனுப்பும் நடவடிக்கையை நிறுத்தக்கோரி தொடர்ச்சியாகப் போராடி வருகின்றது.

### அபாயத்தில் 280

இவ்வாறு மனு நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படும் அபாயத்தில் உள்ள தமிழர்களின் தொகை 280 என அறியப்படுகின்றது.



www.tamilarangam.net


# நோர்வே தமிழ் அட்டவணை

## குளிர் காலம் 97

குளிர் காலம் 97

நோர்வேயில் வாழும் தமிழர்களின் வாழ்க்கையும் வரலாற்றையும் பதிவுகளாக்கும் முயற்சியில் இறங்கியுள்ள நோர்வே தமிழன் தனது முதல் முயற்சியாக இந்த அட்டவணையை வெளியிடுகின்றான். இது முழுமையானதல்ல. கூடுதலாக ஒஸ்லோ பகுதியை மையப்படுத்தி பதியப்பட்டுள்ளது. ஆனால் தமிழர்கள் நோர்வே முழுவதுமாக பரவி வாழ்கிறான். இவை அனைத்தும் பதிவுகளாக்கப்பட வேண்டியுள்ளது. இனிவரும் காலங்களில் இம்முயற்சி முழுமைபெற அனைத்து தமிழர்களின் ஒத்துழைப்பையும் வேண்டி நிற்கிறான்.

☐ 12.01.97 தமிழ் கத்தோலிக்க நலன்புரி ஒன்றியம் catwas புத்தாண்டு இசையும், விருந்து ஒன்று கூடலையும் நடாத்தியது. இதில் அகதிகளுக்கான நிதிசேகரிப்பும் நடைபெற்றது.

☐ 14.02.97 அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் மாலை பொங்கலும் விசேட பூசையும் சிறப்பாக நடைபெற்றது.

☐ 25.01.97 தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட புலர்வின் பூபாளம் நிகழ்ச்சி நடைபெற்றது.

☐ 18.01.97 சனிக்கிழமை தளபதி கிட்டுவின் 4வது நினைவு நிகழ்வு நடைபெற்றது.

☐ 19.01.97 தமிழ் சங்கத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட தைப்பொங்கல் விழா நடைபெற்றது.

☐ 17,18,19.01.97 தினங்களில் தமிழ் கிறிஸ்தவ மிசனரி சபையின் சுவிசேச நற்செய்தியும், தெய்வீக சுகமளிக்கும் கூட்டமும் நடைபெற்றன.

☐ 23.01.97 அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் தைப்பூசம் நடைபெற்றது.

☐ 27.01.97 அன்று தமிழர்கள் நோர்வே அரசின் தமிழர்களைத்திருப்பி அனுப்ப எழுத்திருக்கும் முடிவைக் கண்டித்து ஒஸ்லோ நகரில் தீப்பந்தங்களை ஏந்தி ஊர்வலமாகச் சென்றனர். இதில் 300பேர் கலந்து கொண்டதாக ஆப்தன் போஸ்தன் பத்திரிகை எழுதியுள்ளது. ஆனால் என்.ஆர்.கோ தொலைக் காட்சியில் 500 பேர்வரை சென்றதாக தெரிவித்தது.) இதில் 100 தமழர்களுக்கு இறுதி முடிவு கிடைக்கப்டுள்ளது. இதில் 60 பேர்களுக்கு வெளியேறும்படி திகதி குறிப்பிட்டு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. தீப்பந்த ஊர்வலத்தின் முடிவில் தமிழர்களின் கோரிக்கை மனுவை பாராளுமன்ற நீதிக் குழுவின் தலைவர் பெற்றுக் கொண்டார்.

☐ 25.01.97 வெஸ்தரோலன் பகுதியில் இருந்து இரு தமிழர்கள் பொலிஸாரினால் திருப்பி அனுப்புவதற்காக ஒஸ்லோ நகரிற்கு கொண்டு வரப்பட்டுள்ளனர். தீப்பந்த ஊர்வலத்தில் கலந்து கொண்ட பெரியதம்பி (35 வயது) பத்திரிகைக்கு தெரிவித்த கருத்தின் படி 'தான் முடிவடைந்த 20ம் திகதி திரும்பிப் போவதற்கான கடைசி நாளாகும் எனத் தெரிவித்துள்ளார்.

☐ 24.01.97 உண்ணாவிரதம் இருந்த தமிழர்களில் இருவர்களின் உடல் நிலை மோசமடைந்ததைத் தொடர்ந்து உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

'புளோரா' நகரில் உள்ள அகதிகள் முகாமிலிருந்த 15 தமிழர்கள் தலைமறைவாகியுள்ளனர்.


☐ 27.01.97 இதே தினத்தில் நோர்வே நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான 'பேர்கன்' நகரிலும் தமிழர்கள் எதிர்ப்பு ஊர்வலம் ஒன்றை மேற்கொண்டனர்.

☐ 26.01.97 கடந்த 14 நாட்களாக துரொண்ஹய்ம் நகரில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்த 14 தமிழர்களும் துரொண்ஹய்ம் நகர அதிமேற்றாணியார் கேட்டுக் கொண்டதுக்கு இணங்க தமது உண்ணாவிரதத்தை கைவிட்டனர். இதில் மோசமான நிலையில் இருந்த ஆறு பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதே தினத்தில் செய்தி ஸ்தாபனங்களுக்கு கருத்து தெரிவித்த பிரதி நீதியமைச்சர் இவர்களைத் திருப்பி அனுப்பும் முடிவில் மாற்றம் இல்லையென்று தெரிவித்துள்ளார். அத்தோடு கடந்த முறை போன்று தமிழர்கள் உண்மையான அரசியல் அகதிகள் இல்லை என்றும், இவர்கள் பொருளாதார அகதிகள் என்றும் தெரிவித்துள்ளார். கடந்த முறை போன்றே தமிழ் அகதிகள் நடவடிக்கைக்குழு தனது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளது.

☐ 28.01.97 ஆப்தன் போஸ்தன் பத்திரிகையில் பிரதி நீதியமைச்சர் தாங்கள் இந்தவாரம் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என கெடு நிர்ணயிக்கப்பட்ட தமிழர்களை இந்த வாரத்துக்குள் அரசு பிடித்து அனுப்ப திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் கருத்தை நிராகரித்தார். இது பற்றி அரசு இறுதி முடிவு எடுத்த பின்னரே நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

போர்டே பொலீஸ் அதிபர் 28.01.97 அர்பைத பிளாத பத்திரிகையில் அங்கிருந்து தலைமறைவான 15 தமிழர்களை உடனடியாக தேடி கண்டு பிடிக்கும் நடவடிக்கையில் இறங்கப்போவதில்லை என்றும் ஆனால் அவர்கள் மீது ஒரு கண் எப்போதும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

☐ 15.02.97 தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடத்தினரின் மாதம் ஒரு கலந்துரையாடலில் நோர்வே நாட்டில் அரசியல் தஞ்ச நிலைபற்றியும், தமிழ் அகதிகள் நிலை பற்றிய கலந்துரையாடல் தொய்யன் தேவாலயத்தில் நடைபெற்றது. இதில் இலங்கையிலிருந்து விஜயம் செய்திருந்த ஆவணக்காப்பாளர்



குரும்பசிட்டி கனகரத்தினம் அவர்கள் தனது ஆவணக்காப்பு விடயம் பற்றி அறிமுக உரையாற்றினார்.

☐ 15.02.97 ஒஸ்லோ உதை பந்தாட்டக்காரரினால் 5 பேரிற்கான உதை பந்தாட்டப் போட்டி வைத் வெத் மண்டபத்தில் நடைபெற்றது.

☐ 17.02.97 ஒஸ்லோ நகர் பகுதியில் புதிய வானொலி ஒலிபரப்பு ஒன்று தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினரால் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இதற்குத்தமிழ் முரசம் எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது!

☐ 22.02.97 அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் மாசிமகம் நடைபெற்றது.

☐ 01.03.97 உலகத்தமிழர் ஆவணக்காப்பகத்தின் சேகரிப்பு கண்காட்சி ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது. இதன் ஸ்தாபகர் திரு கனகரத்தினம் அவர்களும் விஜயம் செய்திருந்தார்.

☐ 07.03.97 அருள்மிகு சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் மகா சிவராத்திரி நடைபெற்றது.

☐ 22.03.97 ஒஸ்லோ அன்னை பூபதி சிறுவர் தமிழ்ப்பாடசாலையின் 5வது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.


☐ 23.03.97 catwas அமைப்பினர் தமிழ் முதியோரிற்கான ஒன்று கூடல் ஒன்றை சென் ஹால்வார்ட் தேவாலயத்தில் நடாத்தினர்.

☐ 23.03.97 ஒஸ்லோவிற்கு வருகை தந்த வண.பிதா இமானுவேல் திருப்பலி பூசையை நடாத்தியதோடு தாயக நிலை பற்றியும் உரையாற்றினார்.

☐ 29.03.97 கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம் ஒஸ்லோவில் விவிலிய வேதாகம வெளிகள நிலை ஒன்று கூடலை நடாத்தியது.

☐ 19.04.97 துரொம்சோ தமிழ்ச சங்கத்தினரால் புது வருட விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.

☐ 26.04.97 ஒஸ்லோ தமிழ்ச்சங்கத்தினரால் புதுவருட விழா சிறப்பாக க்கொண்டாடப்பட்டது.



## விளையாட்டுத் துறை

☐ 96ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஒஸ்லோவில் நடைபெற்ற மாவீரர் தினத்திற்கான 18 வயதுக்கு உட்பட்டவருக்கான உதைபந்தாட்ட போட்டியில் முதலாம் இடத்தை Veitvet united sports club பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை 11 STAR SPORT CLUB பெற்றுக்கொண்டது.

☐ நவம்பர் 96, பேர்கன் நகரில் நடைபெற்ற மாவீரர் தினப் போட்டியில் முதலாம் இடம் Veitvet united sports clubம், இரண்டாமிடம் FANTOF S.Cம், மூன்றாமிடம் 11 STAR S.Cம் பெற்றுக் கொண்டன.

☐ டிசம்பர் மாதம் ஒஸ்லோ தமிழ் உதைபந்தாட்ட கழகம் நடாத்திய உள்ளரங்குப் போட்டியில் முதலாம் இடத்தை 11 STAR S.Cம், இரண்டாம் இடத்தை Veitvet united sports clubம், மூன்றாம் இடத்தை T.S.Cம் பெற்றுக்கொண்டன.

☐ 11 STAR விளையாட்டுக்கழகம் தனது 10வது வருட நிறைவை கொண்டாடியது.

### தமிழும் ஒரு மொழியாக

நோர்வே பல்கலைக் கழக புதுமுகத் தேர்வில் இரண்டாவது மொழியாக 49 மொழிகள் தோற்ற முடியும். இதில் தமிழும் ஒரு மொழியாக தோற்ற முடியும். இலங்கையில் உள்ள மொழிகளில் ஒன்றான சிங்களமும் ஒரு மொழி பாடமாக நோர்வே அரச கல்வித் திணைக்களம் அறிவித்துள்ளது.

### 24 தமிழ் சிறுவர்கள்

கடந்த வருடம் மட்டும் 24 தமிழ் சிறுவர்கள் நோர்வே நாட்டில் அகதி அந்தஸ்த்து கோரியுள்ளனர். நோர்வே நாட்டில் அகதி அந்தஸ்த்து கோரிய வெவ்வேறு நாட்டவர்களில் தமிழர்கள் இரண்டாவது இடத்தை வகிக்கின்றனர்.

### வெளிநாட்டு பின்னணியை

ஒஸ்லோ நகரப்பகுதியில் கல்வி பயிலும் மாணவர்களில் 38 வீதமானவர்கள் வெளிநாட்டுப்பின்னணியைக் கொண்டவர்கள். ஆயினும் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களில் ஒரு வீதமானவர்களே வெளிநாட்டுப் பின்னணியைக் கொண்டவர்களாவர்.

### திருமணம்

ஒஸ்லோப் பகுதியில் கடந்த வருடம் நடைபெற்ற பதிவுத் திருமணங்களில் நோர்வே நாட்டவர்கள் 25 வீதமானவர்கள், வெளிநாட்டவரையே திருமணம் புரிந்துள்ளனர். இவர்களில் ஆறு பேர் இலங்கையைச் சேர்ந்தவர்களாவர்.

### நிறம் காரணமாக

சில வருடங்களாக நடைமுறையில் இருந்து வரும் வெளிநாட்டவர்களை தோற்றம் (நிறம்) காரணமாக பொலிசார் அடையாள அட்டை கேட்கும் நடைமுறை இனி நிறுத்தப்படவுள்ளது என ஒஸ்லோ பொலீசார் தெரிவித்துள்ளனர். அதாவது நோர்வே குடிமகனாக உள்ள வெளிநாட்டுப்பின்னணியாக கொண்டவர்களும் நோர்வே நாட்டவர்களைப்போலவே சமமாக நடாத்தப்படுவர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

## விசா சட்டம் தளர்வு?

எதிர்காலத்தில் குடும்ப மீளிணைவுக்கான விதிகள் தளர்த்தப்பட உள்ளன. நோர்வேயில் பெற்றோர் வசிப்பின் 16 வயதுக்குட்பட்ட பிள்ளைகள் கெடுபிடிகள் இல்லாமல் இங்குவர அனுமதிக்கப்படுவர். பெற்றோரில் ஒருவர் மட்டுமே நோர்வேயில் வசித்தாலும்,மற்றைய பெற்றோர் விரும்புமிடத்து,பிள்ளைகள் நோர்வே வர அனுமதிக்கப்படுவர். தந்தை மாத்திரமே நோர்வேப் பிரஜையாக இருப்பினும்,பிள்ளைக்கு நோர்வேப் பிரஜா உரிமை வழங்கப்பட உள்ளது.முன்பு தாய் நோர்வேப் பிரஜையாய் இருப்பின் மட்டுமே பிள்ளைகள் நோர்வே பிரஜா உரிமை பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### 130 நாடுகள்

நோர்வேக்கு வெளிநாட்டவர்கள் வருவதற்கான விதிகள் இறுக்கமடைகின்றன. முன்பு உலகின் 193 நாடுகளில் 130 நாடுகளுக்கு கட்டாய விசா நடைமுறையிலிருந்தது.

### ஆனால் தமிழர்க்கு மறுப்பு?

நோர்வேப் பிரஜையான தமிழர் ஒருவரது தாய் நோர்வேக்கு வர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. பத்து வருடமாக நோர்வேயில் வாழும் யோகன் ஒகஸ்டின் (33) நிரந்தரவேலை, வதிவிடம் போன்ற ஆதாரங்களை வழங்கியும் நோர்வே அரசு அவரது தாய்க்கு அனுமதி வழங்கவில்லை.இலங்கையிலிருந்து வருபவர்கள் திரும்பிச்செல்வதில்லை என்ற கருத்தின் அடிப்படையிலேயே அரசால் இந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளதென இச்செய்தியை வெளியிட்டுள்ள டாக்பிளாத் பத்திரிகை செய்திவெளியிட்டுள்ளது.

## சுவடுகள் கண்டிப்பு!

பாரிஸ் கொலையை சுவடுகள் சஞ்சிகையும், நோர்வே தமிழ் கலாச்சார மையமும் வன்மையாக கண்டித்துள்ளது! இது தொடர்பாக இவர்கள் எழுதிய அறிக்கையில்,

ஈழமண்ணில் தலைவிரித்தாடும் கொலைக்கலாச்சாரத்திற்குத் தப்பி புலம்பெயர்ந்த தமிழர்கள், இன்று புலம் பெயர்ந்த மண்ணிலும் கொலைக் கலாச்சாரம் பரவி விரிவதைக் கண்டு கதி கலங்கி நிற்கின்றனர்.

இது இன்று நேற்றல்ல 83களிலேயே கொலைக்கிருமிகள் காவி வரப்பட்டு புலம்பெயர்ந்த மண்ணிலும் பரப்பப்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆரம்பத்தில் இது தேசபக்தர்கள், விமர்சனக் கருத்துடையவர்களை குறிவைத்து மிரட்டல், இரும்புக்கம்பி அடி என்று ஆரம்பித்து மெல்ல மெல்ல கொலையாக வடிவெடுத்து ஆடுகின்றது.

சுவடுகள் நீண்டகாலமாகவே இத்தகைய மனித உரிமை மீறல்களையும்,கொலைகளையும் கண்டித்து வருகின்றது.

கடந்த 26.10.96ம் திகதி பாரிசில் வைத்து ஈழமுரசு ஆசிரியர் திரு.கந்தையா கஜேந்திரன், விடுதலைப்புலிகளின் சர்வதேச நிதிப்பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்ப நாதன் ஆகியோர் இனந்தெரியாத நபர்களால் கொடூரமாக சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். இக்கொலையை சுவடுகள் வன்மையாக கண்டிப்பதுடன், அனைவரையும் இக்கொலையை கண்டிக்கும்படி வேண்டுகிறது. கொலை எக்காரணங்களுக்காக நடாத்தப்பட்டிருந்தாலும் கண்டிக்கப்பட வேண்டியதே!

மூன்று வருடங்களிற்கு முன்னர் புலம்பெயர்ந்த மண்ணில் முதலாவது அரசியற் படுகொலையான சபாலிங்கத்தின் மீதான கொலையை தடுக்க முடிந்திருந்தாலோ அல்லது கொலையின் பின்னாவது அனைவரும் சேர்ந்து வன்முறை கலாச்சாரத்திற்கு எதிராக செயற்பட்டிருந்தால் இப்படுகொலையை தடுத்திருக்க முடியும். ஆயினும் [illegible] துரதிஷ்டவசமாக எமது சமூகம் குறுகிய தனிமனித நலன்களாலும், குறுகிய அமைப்பு நலன்களாலும் சீரழிக்கப்படும் அபாயத்தில் உள்ளோம்.

சிறந்த சிந்தனையுடன், ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்க இனியாகிலும் வன்முறை கலாச்சாரத்திற்கு எதிராக கைகோர்க்க அனைவரையும் வேண்டுகிறோம். இதனை இப்பொழுதாயினும் நாம் செய்யத் தவறுவோமாயின் புலம்பெயர்ந்த மண்ணில் இரத்த ஆறு ஓடுவதை தடுக்க முடியாதவர்களாவோம்!

### தமிழ் அகதிச்சிறுவர்கள்

16.01.97 ஆப்தன் போஸ்தன் பத்திரிகையில் தற்போது ஒஸ்லோ பகுதியில் உள்ள பல்வேறு நாட்டு அகதிச் சிறுவர்களின் எண்ணிக்கை (1.1.96 கணக்கெடுப பின்படி) பற்றிய விபரம் வெளியாகியுள்ளது.

இதில் இலங்கையைச் சேர்ந்த 142 தமிழ்ச் சிறுவர்கள் தற்போது நோர்வேயில் வாழ்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.இவர்களின் வயதெல்லை 7 முதல் 16 வரையாகும்.

## ஒஸ்லோ பகுதிகளில் நினைவு அஞ்சலி

கடந்த 26.10.96ம் திகதி பாரிசில் வைத்து ஈழமுரசு ஆசிரியர் திரு.கந்தையா கஜேந்திரன், விடுதலைப்புலிகளின் சர்வதேச நிதிப்பொறுப்பாளர் திரு. கந்தையா பேரின்ப நாதன் ஆகியோர் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் ஒட்டி ஒஸ்லோ பகுதிகளில் வர்ணப்படத்துடனான நினைவு அஞ்சலிச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

www.tamilarangam.net

## வாசகர் பதிலடி



### ஆயிரம் சஞ்சிகைகள்

ஆயிரம் சஞ்சிகைகள் தோன்றி மறைகின்றன. நோர்வே தமிழனும் அந்த வகையில் அமையாமல் இருந்தால் சரிதான்.

பரம், ஸ்தவாங்கர்

### நோர்வே தமிழனின்

நோர்வே தமிழனின் தேவையறிந்து வரும் நோர்வே தமிழனிற்கு வாழ்த்துக்கள்.

இராஜன். ஒஸ்லோ.


### துணிகரம்

வடக்கையும் தெற்கையும் இணைக்க முயற்சிக்கும் உனது துணிகரம் வளர்க.

அரவிந்தன்.வார்ட்ஸ்

**வாசகர் கடிதங்கள் வரவேற்கப் படுகின்றன.**

# துருவமணி



## பதில்கள்

*த.புஸ்பன், ஒஸ்லோ*

கேள்வி: தமிழன் போராடலாமா?

பதில்: வாழ்வே போராட்டம், போராட்டமே வாழ்வு!

*க.கணேசலிங்கம், பேர்கன்*

கேள்வி: நீரும் என்னைப்போல காசு உழைக்கத்தானே அகதியாக இங்கு வந்தீர்?

பதில்: பிழைக்கமாட்டீர்..... உண்மை பேசுகிறீரே!

*வே.ஸ்வபன், பேர்கன்*

கேள்வி: ஏன் துருவத்தார் இந்த நோர்வேத்தமிழன் பத்திரிகை எழுதி வெளியிட்டு வெளி உலகிற்கு என்ன சாதிக்கப் போறாய்? இதைவிட்டுட்டு வேறை ஏதாவது பணம் பண்ற வேலையைப்பார்.தெரியுதா?

பதில்: மொட்டைக்கடிதம், அநாமதேய தொலைபேசி, மிரட்டல் தொலைபேசி என்று நாகரீகத்தின் உச்சியில் இருக்கும் தமிழனுக்கு எதாவது பண்ணலாம் என்றால் விடமாட்டீர் போல.....

*மணிமாறன்,ஒஸ்லோ*

கேள்வி: எப்போதாவது நீர் நின்று கொண்டு தூங்கியதுண்டா?

பதில்: ஆச்சரியமாகக் கேட்கிறீர் போலுள்ளது. இது சாதாரணமாக நடப்பதுதானே. யாராவது என்னைப்பதில் கூறவிடாமல் அல்லது 'ம்' போடவிடாமல் கதை அளப்பவர்கள் (அறுப்பவர்கள்) முன்னால் இச்சம்பவம் பல தடவை நடந்தேறியதுண்டு.

*யோகராஜா, ஒஸ்லோ*

கேள்வி: யாராவது நோர்வேத்தமிழனுக்கு நேரடியாக விமர்சனம் கூறியதுண்டா?

பதில்: எப்போது தமிழன் முன்னேறினான்?

*க.சிவமலர், ருவான்*

கேள்வி: தமிழன் பெருமைப்படும்படி வெளிநாட்டில் ஏதாவது சாதனை செய்ததுண்டா?

பதில்: இத்தனை ஆயிரம் போடர்களையும் கடந்து வெளிநாடு வருவதே ஒரு சாதனைதானே?.

*தவராஜா, ஒஸ்லோ*


கேள்வி: உன்னை நோர்வேத்தமிழன் என்பதா ஈழத்தமிழன் என்பதா?

பதில்: உம்மையும் குளப்புவதற்கு நான் விசுவின் படம் பார்ப்பதில்லை!

*இ.கோபி. துரொம்ஸ்*

கேள்வி: பணத்திற்காக வாழ்வா? வாழ்வதறகாக பணமா!

பதில் : வாழ்வதற்காக வாழ்வு!



கேள்வி . தமிழன் எப்போது ஒன்றுபடுவான்?

பதில : ஒன்றுக்கு மேற்பட்டதெல்லாம் விரோதமானது எனும் சிந்தனையை கைவிடும் போது!

www.tamilarangam.net

# மாதம் ஒரு கலந்துரையாடல்

தமிழ் நோர்வே மக்கள் இணைவு கூடம் மாதாந்தம் சமகாலப்பிரச்சனைகளைக் கருப்பொருளாகக் கொண்டு விவாத அரங்குகளையும், கலந்துரையாடல்களையும் நடாத்தி வருகின்றது. கடந்த 15.02.97 இல் நடைபெற்ற மாதாந்த கலந்துரையாடல் நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரிய தமிழர்களின் இன்றைய நிலை பற்றியதாக இருந்தது. இதில் பல்வேறு பட்ட கருத்துக்கள் வெளிப்பட்டதுடன் பயன் உள்ளதாக அமைந்தது. இதில் பல்வேறு பட்ட கேள்விகளுக்கு தமிழ் அகதிகள் நடவடிக்கைக்குழு விளக்கமளித்தது பயனுடையதாக இருந்தது. இதில் வெளிப்பட்டசில கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம்.

☐ அரசியல் தஞ்ச மனுக்களில் பல போதியளவு பலமானதாக இருப்பதில்லை.

☐ மொஸ்கோவில் கிட்டத்தட்ட 10,000 தமிழர்கள் வெளிநாடு வருவதற்கு காத்திருப்பதால் இந்த அரசாங்கம் இங்கு வந்துவிடுவார்களோ என பயப்படுகிறது.

☐ இங்கு நாம் ஆடம்பரம் மூலம் நாம் அரசியல் தஞ்ச அகதிகள் இல்லை பொருளாதார அகதிகள் எனக் காட்டுகிறோம்.

☐ நோர்வே கடவுச்சீட்டு எடுத்தவுடன் இலங்கைக்குப் பலர் போவது புதிதாக வருபவர்களைப் பாதிக்கிறது.

☐ சிலகாலத்தின் முன்னர் அனுமதி நிராகரிக்கப்பட்டு அவதிப்பட்டவர்கள் தமக்குக் கிடைத்தவுடன் இதுபற்றி அக்கறையற்றவர்களாக தற்போது பாதிக்கப்படும் தமிழர்களுக்கான ஊர்வலத்திற்குக்கூட வருவதில்லை.

☐ தற்போது கூட பாதிக்கப்படும் சில தமிழர்கள் மற்றத் தமிழர்களை நம்பி உதவி கேட்பதில்லை.

☐ அகதிகள் தஞ்சம் கோருபவர்களுக்கு தமிழில்போதிய விளக்கவுரை அகதிகள் முகாம்களில் கிடைப்பதில்லை.

☐ மிகக்கடினப்பட்டு எழுபதாயிரத்திற்கு மேல் செலவுசெய்தே தமது உயிர்காக்க இங்கு வருகிறார்கள்.

☐ நோர்வே அகதிகள் விடயத்தில் நாட்டுக்கு நாடு பாரபட்சமான அணுகுமுறையை கடைப்பிடிக்கிறது. தமது கண்டத்திலுள்ளதால் போஸ்னியர்களுக்கு கெடுபிடிகள் தளர்வாகவே உள்ளன.

☐ தேவாலயத்தில் தஞ்சம் கோருபர்களுக்கு அரசு தொடர்ந்தும் கடும் போக்கேகொண்டிருக்கும்.

☐ ஈழத்தில் காத்திரமான அரசியலை முதன்மைப்படுத்தும் போராட்டம் பெரிய அளவில் வராதவரை அகதிகள் பிரச்சினையில் பெரிய மாற்றத்தை ஐரோப்பிய அரசுகள் கொண்டுவராது.

## பத்தாவது வருட நிறைவு விழா

தமிழ் நோர்வே இணைவு கூடம் தொடங்கப்பட்டு
எதிர் வரும் கோடைகாலத்தில் பத்தாவது
வருடத்தை நிறைவு செய்கிறது
இதையொட்டி கருத்தரங்கும் கலை விழாவும்
ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. விழா சிறப்புற சகல
[illegible] வேண்டி நிற்கிறது

[illegible]

## ஆறாத் துயர் ஆறவேண்டும்

தமிழனின் வேர்கள் பதியும் ஈழமண்ணில் தினம் தினம் இடம்பெறும் கொலையும் துயரமும் மீளாத்துயரை மீட்டிவைக்க. இதற்குத் தப்பி உயிர்காக்கவென்று வெளிநாடு வரும் வழியில் நடந்தேறும் துயரங்களோ அதிகம். அதிலும் துயரம் இவ்வாறு எல்லை கடக்கும் போது மீளாத்துயிலில் சிக்குண்டும் சோகம் கொடுமையானது.

இவ்வாறு கடந்த சில வருடங்களாக தொடர்ச்சியாக பல நூறு தமிழர்கள் இறந்து போவது தொடர் கதையாகிவிட்டது. இவ்வாறு நடக்கும் ஐரோப்பிய நாடுகளில் சம்பவங்கள் வெறும் செய்திகளின் பெறுமானத்தையே பெற்றுவிட்டு, மறுநாள் பழைய குப்பை காகித நிலையே கதையாகிவிட்டது. இங்கு மூன்றாம் உலக நாட்டவரின் உயிருக்கு எந்த பெறுமதியும் இல்லாமலும் போய்விட்டது. இது பற்றி எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதில்லை. மறுபுறத்தில் இவ்வாறு வருபவர்களை கிரிமினல் குற்றவாளிகள்போல் தொடர்பு சாதனங்கள் செய்தி வெளியிடுவது கொடூரமானது.

உண்மையில் இந்நாடுகள் மூன்றாம் உலக நாடுகளை மோசமான வரையறையில்லா' முறையில் சுரண்டுவதே பிரதானமான காரணம் வேற்று நாடுகளை நோக்கி இவர்களை துரத்துகின்றன. அத்தோடு இந்த ஐரோப்பிய நாடுகள் கொண்டிருக்கும் கெடுபிடி அகதிகள் தஞ்ச நிலைப்பாடுகளே இவர்கள் கொல்லப்படுவதற்குக் காரணங்களாக அமைந்துள்ளன.

இது போல் அண்மையில் கிரேக்க நாட்டுக் கடலில் பல உயிர்கள் கடலில் பறிக்கப்பட்டன. இதற்கு ஐரோப்பிய அரசுகள் பொறுப்பேற்க வேண்டும். அத்தோடு மனிதத்துவத்துடனான அகதிகள் தஞ்ச நடைமுறையை அமுல்படுத்த நோர்வேத்தமிழன் உரத்துக்குரல் கொடுப்பதுடன் இறந்தவர்களின் ஆழ்ந்த துயரிலும் பங்கெடுக்கின்றான்.

இது ஒரு சுவடுகள் வெளியீடாகும்

www.tamilarangam.net

-கோவிலூர் செல்வராசன்.

# ஒட்டுத்துணிகளும் ஒட்டமைவுகளும்



விழித்துக்கொண்டேன்! விடியலுக்கான ஒத்திகை நடந்துகொண்டிருந்தது..... தன்மேல் ஒட்டியிருந்த கனவுகளை இமைகள் கத்தரித்துக்கொண்டன.... இருந்தாலும், உறக்கத்தின் போர்வையிலிருந்து நான் இன்னும் முற்றாக உதறப்படவில்லை. இன்று சனிக்கிழமை என்பதால் நிம்மதியாக நீண்ட நேரம் தூங்கி எழும்பலாம் என்ற எண்ணம் எனக்குள்ளே....

ம்கூம்.... நடக்கவில்லை....... தூக்கத்திற்கும் எனக்கும் வெகுதூரம். இந்த நாட்டிற்கு நான் வந்து இழந்த மிகப்பெரிய இழப்பு தூக்கம். படுக்கையிலே புரண்டு படுத்து, பக்கத்துக் கட்டிலைப் பார்த்து லேசாகக் கண்திறக்கிறேன். அது வெறுமையாக.. அலங்கோலமாக.... சீர்செய்யப்படாமல் காட்சியளித்தது. படுக்கையைக்கூட ஒழுங்குபடுத்த முடியாத அவசரம் என் நண்பனுக்கு......நேற்று இரவு படுக்கும்போது அவன் போட்ட பாட்டு என் நினைவுக்கு வந்தது. தாயகக் கலைஞர்கள் வெளியிட்ட ஒரு இசைத்தட்டிலிருந்து அந்தப் பாடல்:

"கோவில் மணி ஓசை காதில் கேட்கவில்லையே.....
கோலமயில் தோகை விரித்தாடவில்லையே...சோலைவனக் குயில்கள் எல்லாம் கூவவில்லையே... அதிகாலையிலே சூரியனைக் காணவில்லையே- அட என்னடா இந்த வாழ்க்கை ...... இயந்திரமான வாழ்க்கை" ஆகா அற்புதமான வரிகள் பாடலிலே ஐரோப்பிய வாழ்க்கையையே அப்பட்டமாக சொல்லப்பட்டமையையும், அந்தத் தாயகத்துக் கவிஞனின் ஆதங்கத்தையும் என்னால் உணரமுடிந்தது.

இந்தப் பாடலுக்கும், என் நண்பனின் இயந்திரமயமான வாழ்க்கைக்கும் தான் எவ்வளவு ஒரு ஈடுபாடு, தொடர்பு..... இருக்கிறது என்று அறிந்து வியக்கிறேன். காலத்தின் கட்டாயத்திற்காக கடல் கடந்துவந்து, அந்நிய நாட்டிலே படித்த நம் இளைஞர்கள் படும் அவதியை நினைத்துப் பார்க்கிறேன்... என் கண்கள் பனிக்கின்றன...... பல்கலைக்கழகம் சென்றவர்களும், பட்டப்படிப்பு முடித்தவர்களும், காத்திரமான உத்தியோகம் பார்த்தவர்களும் இந்த அந்நிய நாட்டில் பாத்திரம் கழுவி வாழ்வதை என்னால் ஜீரணிக்க முடியவில்லை....

பேனைபிடித்த கைகளால் இங்குள்ள உணவுச்சாலைகளில் பானையும், சட்டியும் சாப்பாட்டுத் தட்டுகளும் கழுவி தங்கள் பொன்னான கையைப் புண்ணாக்கி அவஸ்தைக்குள்ளாவதை நான் பார்த்து நொந்திருக்கிறேன்...

ஊரிலே தோட்டத்தில் இறங்கி தன் தகப்பனுக்கு ஒத்தாசை செய்யாதவர்கள்கூட இங்கே காலைப்பனியையும், போர்வைக்குளிரையும் பொருட்படுத்தாமல் மரக்கறித் தோட்டத்தில் மடிகால்பாய்ச்சலில் கிடந்து, மரக்கறி வெட்டுவதை நான் கேட்டு மனம் வெதும்பி இருக்கிறேன்.

ஏன்? எதற்காக? இப்படியெல்லாம்?......

பணம்! பணம்!! இதைப் பார்ப்பதற்காக நம்மவர்கள் எது வேண்டுமென்றாலும் செய்வார்கள். வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிசத்தையும் பணம் சேர்ப்பதற்காகவே பயன்படுத்தும் நம்மவர்களின் வேகம்.... என்னைப் பிரமிக்க வைத்திருக்கிறது........ அந்நிய தேசத்தில் அடிமைகளாக வாழ்ந்தாலும் பரவாயில்லையென்று எண்ணும் இவர்களுக்குள்ளே ஒரு ஆடம்பர மோகம்...... வேருன்றி இருக்கிறது.

எமது புண்ணிய பூமியை- அங்கே அந்நியன் ஆக்கிரமித்ததால்தான் போர் மூண்டது. பின்பு அது முற்றிப் புரையோடியது... அதனால் ''புலம்பெயர்ந்தவர்கள்'' என்று சொல்லிக்கொண்டு புறப்பட்டவர்கள்தானே நம் மக்கள்.

இவர்களில்தான் எத்தனை பிரிவுகள்....

தன்னுயிரைக் காப்பதற்காகவே தாயகத்தை விட்டு வந்தவர்கள்.....

பொருளாதாரத்தை மேம்படுத்த வேண்டுமென்று பெரும் செலவுசெய்து இங்கே வந்து அகதி என்று போர்வைக்குள் அடங்கிப்போனவர்கள்.... இன்னும் பலவிதத்திலும் சுயநலத்திற்காகவே ஊர்விட்டுப் புறப்பட்டவர்கள் இங்கு நம்மிடையே வாழ்கிறார்கள். ஆனால் உண்மையான அகதியாக வாழ்ந்து, தாய்நாட்டை நினைத்துக்கொண்டு தங்களால் இயன்ற பங்களிப்பைச் செய்பவர்களும் நம்மிடையே இல்லாமல் இல்லை. ஆனால் இன்னொரு தேசத்தில் பங்களாவோடு ஆடம்பரமாக வாழும் நம்மவர்களில் பலருக்கு எமக்கொரு தேசம் இருக்கின்றதென்ற நினைப்பே இல்லாமல் போய்விட்டதுபோலத் தெரிகிறது..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாங்கள் வெளிநாட்டில் வாழ்கின்றோம். எந்த நாட்டில் எது நடந்தால் எமக்கென்ன? சொந்தநாடு என்று எங்களுக்கு ஒன்றில்லை. இருந்தாலும் திரும்பிப் போகப்போகிறோமா என்ன?" என்று என்னிடம் பலர் சொல்ல, நான் கேட்டு மனதுக்குள் அழுதிருக்கிறேன்.
வெளிநாடு! இதில் பரவசம் என்ன இருக்கிறது..
எந்தவொரு வெளிநாடும் நாம் வாழும் இந்தப் பூமிக்கிரகத்தின் இன்னொரு பாகம்தான்....
வரலாறு, மொழி, பூகோளச்சூழல் இவைகள் வந்து கோடு கிழிக்காவிட்டால் நாடுகள் இல்லை.
எந்தவொரு வெளிநாட்டையும் இந்த மண்மண்டலத்தின் இன்னொரு கூறு என்றே என்னால் ஏற்கமுடியும்.

□□

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்றவனைத் தோன்றியெடுத்துத் துடைத்து மாலைபோடவேண்டும்.
நதிகளில் எல்லாம் நீர் ஒன்றுதான் பெயர்கள்தான் வெவ்வேறு...
மனிதர்களுக்கு எல்லாம் நா ஒன்றுதான் மொழிதான் வெவ்வேறு....
உடைகளை வானிலை தீர்மானிக்கிறது...
உணவை வாழ்க்கைமுறை தீர்மானிக்கிறது..
கலாச்சாரத்தை மனவியலும், நிலவியலும் தீர்மானிக்கின்றன. எனவே வெளிநாடு என்று ஒன்றை விதந்தோதுவதும், தாய் நாட்டைத் தரம் தாழ்த்துவதும் தவறான பார்வைகள் என்பதே சரியான பார்வை என்று நான் நினைக்கிறேன்.
ஓ! எனது தாய்நாட்டைப்பற்றி நினைக்கும்பொழுதே எனக்குள்ளே ஒரு இனம்புரியாத பரவசம் உடல் முழுவதும் எகிறிப் பாய்கிறது. கர்ப்பிணியின் வயிற்றில் குழந்தை புரண்டு படுக்கும்போது ஒரு சிலிர்ப்பு ஏற்படுமாமே.... அந்தக் கர்ப்பிணியின் சிலிர்ப்பு எனக்குள்ளே.....

எனது எண்ணங்கள் விழித்துக்கொண்டபோதும், இமைகளின் கனவுகள் கத்தரிக்கப்பட்டபோதும், அந்த இமைகள் இன்னும் திறக்கப்படவில்லை. கண்களைமூடிக்கொண்டு கற்பனைசெய்வதே ஒரு அலாதி இன்பம். போர்வைக்குள் இருந்த அடைகாப்புச் சூடு என்னைச் சோம்பேறிகளின் சொர்க்கத்துக்குள்ளே வைத்திருந்தது. ஆறுநாட்கள் ஆடியோடி வேலைசெய்து அலுத்துக் களைத்த உடம்புக்கு அப்படி ஒரு அசதி இருக்காதா என்ன?
புரண்டு மறுபக்கம் படுக்க முயற்சிக்கிறேன்....
"ரிங்ங்..... ..... ரிங்ங்..... " தொலைபேசியின் அலறல்.
வேண்டுமென்றே எனது தூக்கத்தைக் கலைக்க விசமத்திற்கு ஒரு சிலர் இப்படிச் செய்வதுண்டு. அதனால் சிரத்தையில்லாமல் "ரிசீவரை" எடுத்து "ஹலோ" என்கிறேன்.
மறுமுனையில் எனது நண்பனின் குரல்.
"என்ன மச்சான் எழும்பீற்றீரே? "என்றான்.
நல்ல தூக்கத்தில் இருப்பவர்களை இப்படித் தொந்தரவு செய்து "குட்மோர்னிங்" சொல்வதும், இன்னும் விவகாரமான விசயங்களைத் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் சத்தமாகப் போட்டுவிட்டு அதைக் கேட்கவைப்பதும் இங்குள்ள சிலருக்கு ஒரு பொழுதுபோக்கு.....
"என்னடாப்பா, பேச்சையே காணயில்லை!....... சொறி மச்சான்! நான் ஏன் எடுத்தனானெண்டால் இண்டைக்கு "இந்தியன்" படம் போடுறாங்களாம். நான் வேலையாலை வந்ததும் நாலரை மணி "ஷோ"விற்குப் போவம். நீ எழும்பி ஏதும் சமைத்துவிட்டு "ரெடி"யா இரு என்ன? "

எனது பதிலுக்குக் காத்திருக்காமலே வைத்துவிட்டான் நண்பன். ஆடம்பரமான விசயங்களையும், கேளிக்கை நிகழ்ச்சிகளையும், பொழுதுபோக்கு அம்சங்களையும் நான் அணுகுவதில்லை என்பது என் நண்பனுக்குத் தெரியும். இவற்றில் எனக்கு உடன்பாடு இல்லை என்பதும் அவன் அறிவான். இருந்தும் அவன் வேண்டுகோளுக்காக எப்போதாவது இருந்துவிட்டு அவனுடன் செல்வதுண்டு.
இனியெங்கே படுப்பது.... தலையை நிமிர்த்தி மேசையிலிருந்த மணிக்கூட்டைப் பார்க்கிறேன். அது பதினொன்றரையைக் காட்டியது.

ஓ! நீண்டநேரம் நித்திரையில்லாவிட்டாலும் பல நினைப்புகளுடன் படுத்துக் கிடந்திருக்கிறேன் என்பதை உணர்ந்தவனாய் போர்வைக்குள்ளிருந்து விடுபட்டு மெல்ல எழுந்துகொள்கிறேன்.
காலைக்கடன்களை முடித்துக்கொண்டு தூசிதுடைத்து, வீடுகழுவித் துப்பரவுசெய்துவிட்டு சமையல் சமாச்சாரத்தில் இறங்கிவிட்டேன்.

மணி நான்கு அடித்ததும் நண்பன் வந்தான். அவசர அவசரமாகக் குளித்து, வெளிக்கிட்டு உணவருந்திவிட்டுப் புறப்படத் தயாரானான். வீட்டிலிருந்து புறப்பட்டு தியேட்டருக்கு வந்ததும் ஏகப்பட்ட கூட்டம் பென்ஸ் கார் தொடக்கம் பீ.எம்.டபிள்யூ வரை, மற்றும் ஜப்பான் கார்கள் அத்தனை மொடல்களிலும் வந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள் ஈழத்தாயின் மடியில் தவழ்ந்த நம்மவர்கள்.......
குடும்பங்கள், இளைஞர்கள், பெரிசுகள் என்று அணியணியாக அவர்கள் இந்தியனைத் தரிசிப்பதற்குக் காட்டிய ஆர்வம் என்னை வியப்பில் ஆழ்த்தியது.
பெண்கள் அணிந்திருந்த பட்டுச்சாறிகளும், கழுத்திலும் கையிலும் மின்னிய சிங்கப்பூர் நகைகளும் ஐரோப்பிய மாலைவெயிலில் பட்டுத்தெறித்து என்மனதைச் சுட்டெரித்தது.
என்னைத் தனிமையில் விட்டுவிட்டு நுழைவுச்சீட்டுப் பெறுவதற்காகக் கூட்டத்தோடு சங்கமமாகிவிட்டிருந்தான் எனது நண்பன்.

மீண்டும் எனது நினைவுகள் எங்கேயோ........ ஆ! அந்தத் தாயகத்துக் கவிஞனின் மற்றுமொரு பாடல் பல்லவியை அசைபோட்டுக்கொண்டது. என் உள்ளத்தை நெருடிய அந்த ரத்தம் தோய்ந்த வரிகள்.....
"கண்கள் குளமாகுதே! நெஞ்சம் தடுமாறுதே!! தாய்நாட்டின் நிகழ்வுகள் நாள்தோறும் அறிகையிலே.... எப்போதான் விடியல் வந்திடுமோ.... தப்பாமல் யாவும் கிடைத்திடுமோ... பொல்லாத் தடைகள் நீங்கிடுமோ....." என்று ஒலித்தது.... மீண்டும் மீண்டும் ஒலித்துக்கொண்டே இருந்தது.
'வா மச்சான் "ரிக்கற்" எடுத்திட்டன்" என்று நண்பன் அழைத்தபோதுதான் எனது பிரமை கலைந்தது.

திரையரங்கு நிரம்பிவழிந்தது. சிலர் இருப்பதற்குக்கூட இடமில்லாமல் நின்றுகொண்டிருந்தார்கள். பலர், அடுத்தகாட்சிக்காக மூன்று மணித்தியாலங்களாக வெளியில் காத்திருக்கிறார்களாம் என்றும் அறியமுடிந்தது.

இதே திரையரங்கில் நமது தாயக நிகழ்வுகளையும், நமது கலைஞர்களின் படைப்புகளையும் எத்தனை தடவைகள் காட்டியிருக்கிறார்கள். அதற்கெல்லாம் இவ்வளவு கூட்டம் வந்ததில்லையே....... பாரதிராஜாவின் படத்திற்கும், மணிரத்தினத்தின் படத்திற்கும், ரஜனி - கமல் நடித்த படங்களுக்குந்தானா இப்படியொரு கெடுபிடி. ஏன்?
வெண்திரையில் கற்பனைப்படம் தொடங்கிவிட்டது.... ஆனால்

www.tamilarangam.net

**(Northern Muslims'Rights Organization/ N.M.R.O.)**

வடக்கிலிருந்து பலவந்தமாக வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் நலன்களுக்காக இயங்கும் அமைப்பு.

பிரதான குறிக்கோள்கள்:

1. பூர்வீகவிடத்தில் வாழும் உரிமை.

2. பலவந்தமாக வெளியேற்றப்பட்டதால் ஏற்பட்ட அசையும், அசையா ஆவண இழப்பீடுகளை மீளப்பெறும் உரிமை.

3. மீளக்குடியேறும்வரை இலங்கையின் ஏனைய பகுதிகளில் வாழும்பொழுது சகல வசதிகளையும் பெற்றுக்கொள்ளும் உரிமை.

4. வடமாகாணத்தில் மீளக்குடியேறும்போது அச்சமின்றித் தனித்துவத்தோடும் பூரண பாதுகாப்போடும் வாழும் அரசியல் உரிமை.

மேற்படி குறிக்கோள்களை அடையப் பின்வரும் செயற்திட்டங்களை இவ்வமைப்பு நடைமுறைப்படுத்தும்.

1. வெளியேற்றப்பட்ட முஸ்லிம்களின் புள்ளி விவரங்களைத் திரட்டுவது.

2. அவர்கள் மத்தியில் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கும் மனோநிலையை ஏற்படுத்துதல்.

3. இலங்கையில் வாழும் ஏனைய மக்கள் மத்தியிலும் சர்வதேச சமூகத்தின் மத்தியிலும் வடமாகாண முஸ்லிம்களின் வரலாற்றுப் பாரம்பரியம் பற்றியும், அகதிகள் தொடர்பாகவும் அறிவை வழங்குதல்.

4. இந்நோக்கத்தை அடையும்பொருட்டுக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகள், பத்திரிகையாளர் மாநாடு போன்றவற்றை நடாத்துதல். இவ்வகையான முயற்சிகளின் பிரதிபலன்களைப் பிரசுரங்களாக வெளியிடல்.

5. அரசியற் தீர்வொன்றிற்கு வடமாகாண முஸ்லிம்களின் அபிப்பிராயங்களை ஒன்றுதிரட்டி அதற்காகத் தயார்படுத்தல்.

6. இந்தக் குறிக்கோள்களை அடையத் தேசிய, சர்வதேச ரீதியில் பொது அபிப்பிராயத்தை ஏற்படுத்தல் என்பனவாகும்.

இவ்வமைப்பில் அங்கம் வகித்து, வடமாகாண முஸ்லிம் மக்களின் தாயக மண்ணை மீட்கவும், அவர்களது உரிமைகளை வென்றெடுக்கவும், தங்களது பங்களிப்பைச் செய்ய முன்வருவோர் இதன் அங்கத்துவத்திற்கு விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: செயலாளர்,/ வடக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு,/ 15ஏ, ரோகினி வீதி,/ வெள்ளவத்தை,/ கொழும்பு 6/ இலங்கை.

---

என் மனத்திரையில் ஓடுவதோ என் மண்ணின் மக்கள் படும் துன்பங்கள், துயரங்கள் நிறைந்த உண்மைப்படம். அது ஊமைப்படமில்லை - உணர்ச்சிப்படம்.

"சூரியக்கதிர் ஒன்றும், இரண்டும்" ஏற்படுத்திய மிகப்பெரிய பாதிப்பால் வலிகாமத்தைவிட்டு வன்னிப்பகுதிக்கு இடம்பெயர்ந்த நம்மக்கள் என் மனத்திரையில்....... உடுத்த உடுப்புடனும், ஓட்டமும் நடையுமாக..... கைக்குழந்தைகளைக் கக்கத்தில் ஏந்திக்கொண்டு ஏதோ அகப்பட்டதை எடுத்துக்கொண்டு....... தாயகத்திலேயே அகதிகளாக அவர்கள்........ படுக்க இடமில்லை, பசிக்குச் சோறு இல்லை ........ பச்சைக்குழந்தைகளுக்கு பாலுக்கு வழியில்லை....... எல்லாவற்றையும் முற்றாக இழந்த நிலையில் எமது இரத்தங்கள் அங்கே அல்லல்படுவதைப்பார்த்து....... நாம் இங்கு எப்படி? இப்படி? என்னால் மௌனமாக இருக்கவே முடியவில்லை.

குடிதண்ணீருக்கும், ஒருநேரக் கஞ்சிக்குமாக, கொசுக்கடியிலேயும், கொட்டும் மழையிலேயும் அவர்கள் அங்கே காத்துக்கிடக்கிறார்கள்........

இங்கே ''இந்தியனைப்பார்ப்பதற்காக திரையரங்குக்குவெளியே இவர்கள் தவமிருக்கிதிறார்கள். இருசாராரும் அகதிகள்தான். அவர்கள் தாய்நாட்டில் உண்மையாக அகதியாக்கப்பட்டவர்கள். இவர்கள் அகதியென்ற போர்வைக்குள் ஆடம்பரமாக இங்கே வாழ்பவர்கள். இதுதான் ஒரு வேறுபாடு.

படம் முடிந்தது. மூன்று மணிநேரம் ஒரே இடத்தில் உட்கார்ந்து இருந்த இடுப்பு லேசாக வலித்தது. முண்டியடித்து வெளியேற முடியாமல் நாற்காலியில் அமர்ந்தபடியே நான்..... எனது எண்ணத்தைப் புரிந்துகொண்டவனாக என் நண்பனும் அமர்ந்திருந்தான்.

வீடு திரும்பும்போது மீண்டும் என் நினைவுகளுக்கு இறக்கைகட்டிவிடுகிறேன். அவை பறக்கத் தொடங்கின.

படத்தில் இந்தியன் தாத்தா தமிழ்நாட்டில் லஞ்சம் வாங்குபவர்களைத் தனது கத்தியால் குத்திக் கொலைசெய்வதுபோல் தமிழ் ஈழத்திலும் தமிழினத்தைக் காட்டிக்கொடுப்பவர்களையும், அழிப்பவர்களையும்........ இங்கே நமது மண்ணையும், மக்களையும், எமது கலைகளையும் கலாச்சாரத்தையும் மறந்து வாழ்பவர்களை கொலை செய்தால் தேவலை என்ற ஒரு வெறி எனக்குள்ளும் எழுந்தது.

திரையரங்கினுள் பார்த்த பட்டுச்சாறிகளும், தங்க நகைகளும், கோட்டும் சூட்டும், கும்மாளக் கோலங்களும் மனத்திரையில் நான் பார்த்த ஒட்டுத்துணிகளும் ஒட்டிய வயிறுகளும், கொட்டும் மழையும், கொசுக்கடியும்....... மாறிமாறி என் மனக் கண்ணில் தோன்றி என்னை வதைத்துக்கொண்டிருந்தன.

"என்ன மச்சான்! 'மயா மச்சேந்திரா மச்சம் பார்க்க வந்தீரா........' பாட்டு பிரமாதமாக இருந்தது இல்லையா? " நண்பன் கேட்டான். அவனுக்காக ஒரு 'ம்' கொட்டத்தான் என்னால் முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8ம் பக்கத் தொடர்ச்சி

தமிழ்மாறன்: இயக்கங்கள், மோதல்கள், பிரிவுகள் என்பன இலங்கைத் தமிழ் மக்களிடம் மட்டுந்தான் இருக்கின்றன எனச் சிலர் கருதித் தப்பிவிடப் பார்க்கின்றனர். ஏனைய நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டங்களோடு ஒப்பிடுகையில் இவை எமக்கு மட்டும் பரிச்சயமான சாபக்கேடு என்ற நினைப்பு அகன்றுவிடும்.

மனித உரிமைகள்வாதி என்ற ரீதியிலும் மோதல்களுக்கான அமைதித் தீர்வையே எப்போதும் விரும்புபவன் என்ற ரீதியிலும் உங்களிடையே ஒற்றுமை ஏற்பட வேண்டும் என்பதே எனது பெருவிருப்பு. அதற்கான எல்லா முயற்சிகளுக்கும் ஆதரவு வழங்க ஆசைப்படுகிறேன். அடிப்படை விடயங்களில் எங்களிடையே நிறைய ஒற்றுமையுண்டு. அவற்றை முன்னிறுத்தி நாங்கள் ஒன்றுபடலாம். பேதங்களை எப்போதும் பின்னுக்குத் தள்ளிவைக்க வேண்டும். உங்கள் நண்பரை நீங்கள் வீட்டில் வரவேற்க விரும்பினால் தேவையில்லாத பொருட்களைப் பின்புறத்திலே கொண்டுபோய் வைத்துவிட்டு, வரவேற்பறையை அலங்கரிப்பதில்லையா? அதுபோலவேதான். நோக்கந்தான் முக்கியம். ஒன்றுபட விரும்பினால் நிச்சயம் முடியும். அப்படி விரும்புங்கள் என்றுதான் கோருகிறேன்.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல், யுத்தத்தை நிறுத்தல், போராட்ட வரலாற்றை விளக்குதல், தவறுகளை மனம்விட்டுப் பேசுதல், தலைமைப் போட்டியைத் தவிர்த்தல், அகதிகளின் உரிமைக்காகப் போராடுதல் என்பவற்றில் நாம் ஒன்றுபட முடியும். யாருடைய நலனுக்காக நாங்கள் போராடப் புறப்பட்டோம் - அப்போது எங்களிடம் சுயநலனிருந்ததா என்பதையுஞ் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். மக்கள் நலனை முன்னிலைப்படுத்திப் பொதுவான பணிகளில் ஒன்றுபடுங்கள். ஒற்றுமை நிச்சயம் உருவாகவே செய்யும்.

சுவடுகள்: இறுதியாக, சுவடுகள் வாசகர்களுக்கு ஏதாவது கூற விரும்புகிறீர்களா?

தமிழ்மாறன்: நிச்சயமாக இது ஒரு தரமான சஞ்சிகையே. ஒரு சில பதிவுகளையே என்னால் பார்க்க முடிந்தது. பரந்த சிந்தனையுள்ளவர்களால் நடத்தப்படுகிறது. கருத்து மோதல்களைச் சீரணிக்க விரும்புகிறார்கள்.

ஆனாலும் இன்னும் பல விடயங்களை முன்னெடுக்கும் வல்லமை இதற்குள்ளது.

ஒற்றுமையை வலியுறுத்தி எழுதலாம். எதிரெதிரான கருத்தாளர்களைப் பேட்டிகண்டு எழுதலாம். கருத்து மேடையினை அமைக்கலாம். கருத்தரங்குகளுக்கு ஒழுங்கு செய்யலாம். எல்லாவற்றையும்விட - குரோதத் தணிப்புக்கு வித்திட வேண்டும்.


**Folkehøgskolen**

**Konkurransepoeng og utvida minstestipend**

Stortingsmelding nr 51 (1995–96) om folkehøgskolen og utdanningssamfunnet blei behandla i Stortinget 14. januar 1997. Resultatet blei m a desse vedtaka:

*«Med verknad frå og med skoleåret 1997–98 skal elevar som gjennomfører eit folkehøgskoleår på 33 veker, få utteljing i form av tre konkurransepoeng ved opptak til høgre utdanning i tillegg til alderspoeng, under føresetnad av skoledokumentasjon og registrert elevframmøte på 90 %».*

*«Med verknad frå og med skoleåret 1997–98 skal elevar som vel å ta folkehøgskolen som siste år i eit fireårig løp, ha rett til utvida minstestipend til dei er 20 år».*

Skolar som vil vere med på ordninga med konkurransepoeng, må utarbeide sin eigen skoledokumentasjon. Retningsliner for dette arbeidet vil bli sendt til skolane kring 1. mai.

Vedtaket om utvida minstestipend føreset ei løyving av nødvendige midlar frå Stortinget. Når denne ligg føre, vil det bli sendt ut orientering og supplering av forskriftene for Statens lånekasse for utdanning.

A-11/97

**Kyrkje-, utdannings- og forskingsdepartementet**

Innrykt av Statens informasjonsteneste


இயன்றளவுக்கு ஆக்கங்கள், (name calling) 'நாமகரணஞ் சூட்டுவதை'த் தவிர்த்தல் வேண்டும். துரோகி, பாசிசவாதி, அராஜகவாதி, எடுபிடி, கூலிப்படை இப்படியான சொற்களைத் தவிர்த்தல் வேண்டும். மோதல்களை

இயன்றளவுக்கு ஆக்கங்கள், (name calling) 'நாமகரணஞ் சூட்டுவதை'த் தவிர்த்தல் வேண்டும். துரோகி, பாசிசவாதி, அராஜகவாதி, எடுபிடி, கூலிப்படை இப்படியான சொற்களைத் தவிர்த்தல் வேண்டும். மோதல்களை

இணக்குவதில் முதல் வேலையே இந்தப் பெயர்சுட்டுதல்களைத் தடுப்பதில்தான் ஆரம்பமாகிறது.

சுவடுகள் - இத்தகைய பெயர்களைத் தவிர்த்தல் நல்லது. கூடுதலான ஆக்கங்களை இலங்கையிலிருந்து பெற்றுப் பிரசுரிக்கலாம். ஜனநாயகம், மனித உரிமைகள் விழுமியங்கள் பற்றி எழுதச் சுவடுகளுக்கு நிறையவே அருகதை உள்ளது. இந்தப் பணிகளை முன்னெடுப்பீர். நன்றி!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இ.தியாகலிங்கம்

# மாற்றங்கள்



## அத்தியாயம்-. 4

அடுத்தநாள் காலை வரையும் பந்து என்ன ஆனது என்பது எங்களுக்குத் தெரியாது . அது ஆஸ்திரியிடம் தான் இருக்க வேண்டும் என்பது எங்களின் எண்ணம் . ஆஸ்திரி பந்தை எடுத்திருந்தால் நிட்சயம் கிடைக்கும் என ஒரு நம்பிக்கை இருந்தது. மூவரும் வகுப்பறைக்குள் இருந்தோம். ஆஸ்திரி இன்னும் வரவில்லை. ஏன் என்பது புரியவில்லை. வகுப்புத் தொடங்குவதற்கு ஐந்து நிமிடங்கள் இருந்தன. விக்கோவும் அவனது நண்பர்களும் எள்ளி நகையாடுவார்கள் என்பது எங்களுக்குப் புரிந்திருந்தது. பாடசாலைக்குள் அடிக்க முடியாது. அடித்தால் நேரடியாகவே எங்கள் மீது குற்றம்சாட்டி விடுவார்கள். பெறுமையோடும் ஆவலோடும் இருந்தோம். எங்களை விக்கோ சும்மா இருக்கவிடவில்லை.

இந்த தமிழர் எல்லாம் நேற்று பெம்பிளையள் மாதிரி ஓடிட்டாங்க .

விக்தீஸ்சிடம் கூறினான்.

எனக்கு கோபம் வந்தது. நான் "கோல் செப்த் " (வாயை மூடு) எனக் கத்தினேன். அவன் சிரித்துச் சிரித்து அருகே வந்து ஆ ஆ எனக் கூறிய வண்ணம் என்னை தள்ளினான். எனக்கு கோபம் கொப்பளிக்கவே அவனது மார்பில் கையை வைத்து தள்ளிவிட்டேன். இது பெரும் குழப்பத்தை உண்டு பண்ணும் போதே , ஆசிரியை ஒருத்தி உள்ளே புகுந்தாள். வகுப்பறை சற்று அமைதியானது. விக்கோ கல்வத்த தமிழர் எனக் கூறிய வண்ணம் தனது இருக்கையில் போய் அமர்ந்தான் . விக்கோ இருக்கையில் அமரவும் மணி அடித்தது . ஆஸ்திரி உள்ளே நுழைந்தாள். பந்து அவளின் கையில் பத்திரமாக இருந்தது. தனது இருக்கையில் புத்தகப்பையை இறக்கி வைத்துவிட்டு ஆசிரியைக்கு அருகில் சென்று,

இந்தப் பந்து சுமன்ர . இதை விக்கோ அவனிட்ட இருந்து பறிச்சான். நான் விடல்ல அதைப் பறிச்சு வீட்டுக்கு கொண்டு போய்க் கொண்டாறன்.

இது எங்க நடந்தது?

வெளிக் கிறவுண்டில இப்ப பந்தைக் கொடுக்காதேங்கோ. வீட்டுக்கு போகேக்க கொடுங்கோ. இல்லாட்டி வீக்கோ பறிச்சு அவையோட சண்டைக்குப் போவான்.

நன்றி — நீ போய் உன் இருக்கையில் இரு.

எனக்குக் கிட்ட வரும் போது ஆஸ்திரி கூறினாள்.

உன்ர பந்து ரீச்சரிட்ட இருக்கு. வீட்டுக்குப் போகேக்க வேண்டிக் கொண்டு போகலாம்

நன்றி.

ஆஸ்திரி நல்லவள். இனவெறி இல்லாதவள். மிகவும் அழகானவள். இதை விட வேறு என்ன என்னால் அவளைப்பற்றிச் சிந்திக்க முடியும்? ஏனோ அவளைப்பற்றிச் சிந்திக்க வேண்டும் . அடிக்கடி எட்டி எட்டிப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. நான் இப்படி பார்ப்பதில் எந்தவித பிரையோசனமும் இல்லை. அவளுடன் நேரடியாக கதைக்க வேண்டும் என்று எண்ணினேன். என்ன கதைக்க வேண்டும் என்பது புரியவில்லை என்றாலும் அவளைத் தொடர்ந்தும் பார்த்துக் கொண்டிருந்தால் சந்தோஷமாய் இருக்கும் போல் தோன்றியது.

பாடசாலை முடிந்து வெளியே வந்தேன். தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு வீடு நோக்கிச் சென்றேன். வங்கிக்குப்பக்கத்தில் இருந்து மற்றப்பக்கத்திற்கு செல்லும் போது வாகனம் வர நான் சைக்கிளை மெதுவாக்கி நின்றேன். நிற்கும் போது எதேற்சையாய்த் திரும்பிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்த்தேன் . ஆஸ்திரியும் நீனாவும் வந்து கொண்டு இருந்தனர். எனக்கு அவளைக் கண்ட உடன் கதைக்க வேண்டும் போல் இருந்தது. அவள் வரும் வரையும் காத்திருந்து அவர்களோடு சேர்ந்து கொண்டேன்.

அவள் என்னைக் கண்டதும் மீண்டும் சிரித்தாள். கதைக்கவில்லை. இவர்களுக்கும் வெட்கம் உண்டு. உலகத்தில் எந்தப் பெண் இனத்திற்கும் வெட்கம் உண்டு . அதன் அளவுதான் இனத்திற்கு இனம் அல்லது கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் வித்தியாசப்பட்டிருக்க வேண்டும். இவளும் வெட்கப் படுவது எனக்குத் தெரிந்தது. நான் தான் முதலில் கதைத்தேன்.
(டு) என்றால் நீ . இவர்களின் பேச்சு வழக்கில் நீ என மற்றவரை விழிப்பதே அதிகம். அப்படியே நானும் அவளுடன் கதைக்கத் தொடங்கினேன்.
நீ ஆஸ்திரி ! எங்கே இருக்கா?
ஆஸ்பத்திரி வீதி 10.
நீ எங்கே இருக்கா ?
ஸ்திரன் வீதி
ஓ.... அப்ப எங்கட வீட்டுக்கு கிட்டத்தான். சுமன் நேரம் கிடைச்சா எங்க வீட்டுக்கு வாயேன் விளையாடலாம்.
நான் விளையாடவந்தா உங்க வீட்டில ஒரு பிரச்சனையும் இல்லையே?
சீ......சீ.......ஏன் அப்படி நினைக்கிறாய் சுமன்? அதைப் பற்றி எல்லாம் ஒண்டும் கவலைப்படாமல் நீ வரலாம்.
நன்றி . நீயும் எங்க வீட்டுக்கு விளையாட வரணும்.
நிச்சயமா . ஆனா நீ முதல்ல எங்க வீட்டிற்கு வரணும் .
சரி..
அதன் பின் எங்களால் கதைக்க முடியவில்லை. எமது பாதைகளில் பிரிந்து சென்றோம்.

## 5

மாலை ஐந்து மணிபோல் அம்மா வடை சுட்டுக் கொண்டிருக்க அப்பா உதவியாளராய் கடமையாற்றினார்.. அம்மா தட்டிப் போடுபவற்றை அப்பா பொன்னிறமாகியதும் வேறு ஒரு சட்டிக்குள் எடுத்துப் போட்டுக் கொண்டிருந்தார். நான் தங்கையோடு விளையாடிக் கொண்டிருந்து விட்டு சமையல் அறைக்குச் சென்று ஒரு வடையை எடுத்துக்கொண்டு திரும்பினேன் . வடை சுட்டு முடிந்து விட்டது . அப்பா வந்த உடன் தங்கையை அவரிடம் கொடுத்து விட்டு நான் விளையாடப் போக எண்ணினேன்.
அப்பா வெளியே வந்தார். தங்கையைக் கொண்டு போய் அப்பாவிடம் ஒப்படைத்தேன்.
அப்பா இவளைப் பிடியுங்க .
ஏன்டா?
நான் விளையாடப் போறேன்.
எங்கே அந்தக் கிறவுண்டிற்கா ?
இல்லை . ஆஸ்திரி, என்னோட படிக்கின்ற பிள்ளையின்ர வீட்டை.
ம்....... கெதியா வந்திடு என்ன?
சரியப்பா!
சுமன் வெளியே சென்ற உடன் உள்ளே சென்று அரசு கூறினர்.
சுமன் விளையாடப் போறான்.
அதுக்கு இப்ப என்ன வந்திச்சு?
இல்லை நொஸ்க் பெட்டையளோட .
புரியாமல் விழித்தாள் மங்கை !
ஒரு நாளைக்கு யாரும் ஒரு நொஸ்க் பெட்டையை இழுத்துக் கொண்டு வந்து நிண்டா என்ன செய்வா ?
நீங்க என்ன சொல்லுறீங்க ? நீங்களும் உங்கட கற்பனையும். அவன் அப்பிடி எல்லாம் செய்ய மாட்டான். அவன் என்ர பிள்ள. ஏன் வீணா இப்பிடி எல்லாம் கற்பனை பண்ணுறீங்க?
அப்ப அப்படி ஒண்டும் நடக்காது எண்டுறியா?
ச்........சும்மா விடுங்க அப்படி ஒண்டும் அவன் செய்ய மாட்டான்.
சரி இவளைப்பிடி . கொண்டு போய்ப் பாலைக் கொடு.
நான் பால் கொடுக்கிறேன். நீங்க வடையில எடுத்துக் கொண்டு போய் சோபாவில இருந்து சாப்பிடுங்க. இவளுக்குப் பால் கொடுத்திட்டு ரீ வைச்சுக் கொண்டு வாறன்.
அரசு சிறிது யோசினையுடனேயே சோபாவில் அமர்ந்தார்.

நான் ஆஸ்திரி வீட்டிற்கு சென்றேன். அவளை வெளியே காணோம். எங்கே போய் விட்டாள்? எங்கே போய்விடப் போகின்றாள்? வீட்டிற்குள் தான் இருப்பாள்.? எனக்கு நானே சமாதனம் சொல்லிக் கொண்டேன். கதவில் உள்ள அழைப்பு மணியை அழுத்தினேன். ஆஸ்திரிதான் வந்து கதவைத் திறந்தாள். என்னைக் காணவும் அவளது முகத்தில் மலர்ச்சி ஏற்படத்தான் செய்தது.

காய் வா சுமன் , உள்ள வா ?
காய் எனச் சிரித்த வண்ணமே நான் உள்ளே சென்றேன். ஆனாலும் ஏதோ ஒரு வித திகைப்பு மனதை அடைத்துக் கொண்டிருந்தது. ஏதோ எங்களை விட எல்லா விதத்திலும் இவர்கள் உயர்ந்தவர்கள் போலவே எண்ணத் தோன்றியது. இந்த எண்ணங்கள் ஏன் ஏற்படுகின்றது? இதை ஆராயும் அளவிற்கு எனது மனம் வளர்ச்சி அடையவில்லை என எண்ணிக் கொண்டேன்.

வீடு றெம்பவும் அழகாய் இருந்தது. கோப்பி வாசம் வீட்டிற்குள் பரவி இருந்தது. உள்ளே நீனாவும் இருந்தாள்.

நீனாவும் ஆஸ்திரியும் வீடியோக் கேம் விளையாடி இருக்கு வேண்டும். நினா வீடியோ கேம் விளையாடும் ஆயுத்த நிலையிலேயே இருந்தாள். ஆஸ்திரி என்னைக் கூட்டிச் சென்று தனது தாயிடம் அறிமுகம் செய்து வைத்தாள்.
மம்மா?
என்னைக் கண்டும் கணாதது போல் வேலையில் ஈடுபட்டிருந்த தாய் தனது முகத்தை உயர்த்தி இருவரையும் என்ன என்பது போல பார்வையால் வினாவினாள். அதைப் புரிந்து கொண்டு
இவர் பெயர் சுமன். என்னோட படிக்கிறார் மம்மா . கூறினாள் ஆஸ்திரி.
ம்.......ம்.......... என ஓரளவு சிரித்த வண்ணமே தலையை ஆட்டினாள். பின்பு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காய் என்ர பெயர் சிக்கிரி.
கைதந்தார். என்னும் எனது பெயரை மறுபடியும் கூறி அந்தக் கையைப் பற்றினேன்.

வா சுமன் நாங்க விளையாடுவோம். என்னை ஆஸ்திரி அழைத்துக் கொண்டு சென்றாள் . பின்பு சிறிது நேரம் நீனாவும் நானும் வீடியோக் கேம் விளையாட ஆஸ்திரி பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் கேமில் நீனா தோற்க அவள் ஆஸ்திரியை விளையாடச் சொன்னாள். ஆஸ்திரியும் நானும் நீண்ட நேரம் விளையாடினோம். திடீரென கணப் பொழுதில் நான் தோற்று விட்டேன். என் வீட்டிலும் வீடியோக் கேம் இருப்பதால் வீடியோக் கேமில் தேர்ச்சி பெற்றிருந்தேன் . எப்படிஎன்றாலும் ஆஸ்திரியிடம் தோற்றது சிறிது கவலையைத் தந்தது.

எனக்கு சிறியதோர் பயம் மனதில் இருந்தது. ஆஸ்திரி வீட்டிற்கு விளையாடச் செல்வது நிச்சலனுக்கோ மற்றவர்களுக்கோ தெரிந்தால் பகிடி பண்ணுவார்கள் . நான் தேவை இல்லாமல் இந்த விடயத்தை அவர்களிடம் கூறக் கூடாது . ஆஸ்திரி கூறிவிட்டால் ? அவளைக் கூறவேண்டாம் என்று கூறினால்? எனக்கு அவளிடம் அப்படிக் கூறவும் துணிவு வரவில்லை. அவளின் முகத்தைப் பார்க்க வேண்டும் போல் இருந்தது. ஏன் அப்படி மீண்டும் மீண்டும் அவள் முகத்தைப் பார்க்க வேண்டும் போல் தோன்றுகின்றது? காரணம் புரியாவிட்டாலும் அவளது முகத்தைப் பார்ப்பதால் ஏதோ ஒருவித இன்பம் உண்டாவது உண்மை. ஓ நெஞ்சிற்குள் ஒரு கிறு கிறுப்பு. மீண்டும் மீண்டும் அவளைப் பார்க்க வேண்டும் என மனது அடித்துக் கொண்டது.

ஆஸ்திரியும் இப்படித்தான் என்னைப் பார்க்க ஆசைப்படுவாளா? புரியவில்லை. ஆஸ்திரியின் அம்மா நான் நினைத்தது போல் கூடாதவள் அல்ல மிகவும் நல்லவள் அவளைப் பற்றிச் சிலநாட்கள் சென்றபின்பு எனக்குப் புரியத் தொடங்கியது . ஆஸ்திரியின் தாய் இப்படி இருப்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை உண்டு பண்ணியது . ஆஸ்திரியின் தந்தை எட்டாம், ஒன்பதாம் வகுப்பிற்கு ஆசிரியர் . அவரைப் பற்றி கூறவே தேவையில்லை. பொதுவாக உயர்ந்த படிப்பு படித்தவர்கள் பேதம் காட்டாது மிகவும் அன்பாய் பழகுவார்கள் என்பது உண்மை . அதை நூறு வீதம் நிருபித்தார் ஆஸ்திரியின் தந்தை . ஆஸ்திரியின் மனம் அவர்கள் இருவருக்கும் ஒருபடி மேலாகவே இருந்தது.

இணைவுகள் பலவிதம் . நட்பு சிலரிடம் இணைவை உண்டாக்குவது உண்டு. அதே போல் காதல் இணைவை இரு உயிர்களுக்கிடையில் உண்டு பண்ணுவது உண்டு . பல உறவு முறைகள் கூட பலவிதமான இணைவை உண்டாக்குவது உண்டு. இந்த இணைவுகளில் சில தற்காலிகமாய் இருக்கும் . சில நீடித்து நெடுநாட்கள் இருக்கும் . உறவு முறைகளால் உண்டாகும் இணைவு காரணத்துடன் கூடியதாய் இருந்தாலும் நட்பும் காதலும் அப்படிப்பட்டது அல்ல. அது எப்போதும் யாரின் மீதும் வரலாம். இவை காரணகாரியங்களை பெரும்பாண்மையாக அடிப்படையாய் கொள்பவை அல்ல. இப்படி உண்டாகும் சில இணைவுகள் தான் பலகாலம் நீடிக்கின்றது. பல இணைவுகள் அற்ப ஆயுளிலேயும் முடிகிறது.. நீண்ட ஆயுளுடன் ஒரு நட்பு எங்களிடத்தில் இருப்பதாய் நான் எண்ணினேன். இது வித்தியாசமானது தான் . வேடிக்கையானது தான் . இறுக்கமானது பிரிக்க முடியாததும்கூட என நான் முடிவு செய்து கொண்டேன். எப்படி நாங்கள் இணைந்தோம் என்பது எவருக்கும் தெரியாது . எப்படி நாங்கள் இருக்கிறோம் என்பது பலருக்குப் புரிந்தது .

(தொடரும்)

# என்னுடைய தெய்வமும் உன்னுடைய தெய்வமும்

என்னுடைய தெய்வம்
ஊரெல்லையில் உட்கார்ந்திருக்கிறது
கறுப்பாய்க் களிமண்ணாய்க்
கண்களை முழித்தபடி கையிலே வாளுடன்
பற்கள் தெரியச் சிரிக்கிறது
உன்னுடைய தெய்வமே உயர்ந்தது என்கிறாய்
அது சிவனானால் என்ன மாலானால் என்ன
அல்லாவோ இல்லை அந்தப் பரமபிதா எனில் என்ன
என்னுடைய தெய்வம்
உன்னுடைய தெய்வத்தை விட
எனக்கு எட்டுந் தொலைவில் உள்ளது

உன்னுடைய தெய்வம்
உன்னை மோட்சத்துக்கு வழிகாட்டும்
என்னுடைய தெய்வம்
நான் அயலூர் போய் வரும்வரையும்
எனக்காகக் காவலிருக்கும்
உனக்கு அது போதுமோ போதாதோ
எனக்கு இது போதும்

என் ஊரானைக் கேள்
உன் தெய்வம் பற்றி
நீ சொல்லும் ஒவ்வொரு கதைக்கும்
தன் தெய்வம் பற்றி
அவன் இன்னொரு கதை வைத்திருக்கிறான்

**சி.சிவசேகரம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கள் எண்ணம்

## ஈழமண்ணில் இன்றைய தேவை ஒரு இன்டிபாடா எழுச்சியே!

ஈழத்தமிழரின் போராட்டம் நீதிக்கானது, அவர்கள் தமது உரிமைகளை மீட்டெடுப்பதற்கானது. அதற்கும் அப்பால் தனது அடிமைத்தளைகளில் இருந்து மீண்டுவரும் சுயநிர்ணயத்திற்கானது.
ஈழத்தமிழர்களின் மீதான இன ஒடுக்கு முறையின் ஆரம்பம் மலையக மக்கள் மீதான குடியுரிமை பறிப்புடன் ஆரம்பமாகி ஐந்து தசாப்தங்களாகத் தொடர்கின்றது. இக்கால ஓட்டத்தில் இன ஒடுக்குதல் வடிவங்கள் மாறுபட்டபோதும் படிமுறையாக வளர்ந்தும தீவிரப்பட்டும் வந்துள்ளது.
இதன் உச்சகட்டமாக இராணுவ ஒடுக்கு முறையைக் கடந்த இரு தசாப்தங்களாக சிங்கள பௌத்த பேரினவாதம் கட்டவிழ்த்து விட்டுள்ளது.
சிங்கள ஆளும் வர்க்கம் (தமிழ், சிங்கள, முஸ்லீம், மலையக உள்ளிட்ட) முழுமக்களின் மீதான அரசியல் சமூக பொருளாதார ஒடுக்கு முறையைத் தொடர்ந்து நடாத்துவதற்காக இனவாத அரசியலை முன் வைக்கிறது. இதன் மூலம் பெரும்பான்மை மக்கள் தாம் தமது சொந்த அரசு மூலம் ஒடுக்கப்படுகின்றோம் என்பதை மறைத்து வைக்கிறது. இதன்மூலம் தனது இருப்பை அது உறுதி செய்து கொள்கிறது.
மறுபுறத்தில் எமது போராட்டம் ஆரம்பத்தில் திட்டமிடப்படாத பரந்து பட்ட சாத்வீக எதிர்ப்பு போராட்டமாக ஆரம்பித்து அது இராணுவம் மூலம் ஒடுக்கப்பட்டதை தொடர்ந்து ஆயுதப்போராட்டமாக வெடித்துக்கிளம்பியது. இவ்வாறாக பல்வேறு படிமுறை வளர்ச்சியினுடாக வளர்ந்து வந்தது போராட்டம். ஆயினும் ஆரம்பம் முதலே தமிழ் அரசியல் தலைமைகளின் வர்க்க நலன் காரணமாக தமிழ் மக்கள் நலனை முதன்மைப்படுத்தாமையுமாக அவ்வப்போது சில பின்னடைவுகளையும் சந்தித்தே வந்துள்ளது. இது துரதிருஸ்டவசமானது.
இப்பின்னடைவிற்கு அக,புற காரணிகள் பல பலமான பாத்திரத்தை வகித்ததுடன் வகித்தும் வருகின்றன. இதற்கும் அப்பால் எமது அரசியல், இராணுவ வழிமுறைத் தவறுகளும் பின்னடைவுக் காரணிகளின் ஒரு அம்சமாகும். பின்னடைவானது ஒரு தேசிய விடுதலை போராட்டத்தில் நடந்தேறக் கூடிய ஒருவிடயம் தான். அப்படியான பின்னடைவுகள் ஏற்படும் போதெல்லாம் தேசிய விடுதலையை முன்னெடுக்கும் சக்திகள் அனைத்தும் பின்னடைவிற்கான காரணிகளை கண்டறிவதற்காக பரந்த அளவிலான மீளாய்வை மேற்கொள்கின்றன. எமது போராட்டத்திலும் கடந்த காலப் பின்னடைவிற்கான காரணங்களை பரந்த அளவிலான மீளாய்வை மேற்கொள்ள வேண்டும். அதன் மூலம் போராட்டம் தனது சரியான திசை வழியை மாற்றியமைத்து முன்னேற வேண்டும். இல்லாது போனால் மீண்டும் மீண்டும் ஒரே சகதிக்குள் சிக்குண்டு போகவே வழிவகுக்கும்.
கடந்த காலத்தில் எமது போராட்டம் பரந்த நியாயங்களைக் கொண்டிருந்த போதும் துரதிருஸ்டவசமாக பலமான சர்வதேச ஆதரவைத் திரட்டிக்கொள்ளவில்லை. முக்கியமாக கடந்தகாலங்களில் எமது ஆயுத போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் அரசியல் ரீதியான பரந்துபட்ட மக்கள் போராட்டங்களை போதிய வகையில் நடாத்தப்படவில்லை. பரந்து பட்ட மக்கள் போராட்டமே எப்போதும் உலக மக்களின் ஆதரவை வலுவாக திரட்டித் தரும். இதற்கு நல்ல உதாரணமாக எமது காலகட்டத்தில் நடந்தேறும் பாலஸ்தீன மக்களில் போராட்டத்திலிருந்து முக்கிய பலவிடயங்களைக் கற்றுக் கொள்ள ணேடும். பாலஸ்தீன மக்களின் விடுதலைப்போரின் அமைப்புகளின் பரந்துபட்ட மக்கள் சாராத வெறுமனையே சில பயங்கரவாத நடவடிக்கைகளை காரணம் காட்டி அவர்களின் நியாயமான போராட்டத்தை பயங்கரவாதமாக காட்டமுனைந்தது இஸ்ரேலிய ஆதிக்கவாதிகள். ஆயினும் பாலஸ்தீன மக்கள் 89ஆம் ஆண்டில் இன்டிபாடா மக்கள் எழுச்சி நடவடிக்கையை ஆரம்பித்து தொடர்ந்து மேற்கொண்டதையடுத்து உலகரீதியாக பாலஸ்தீன மக்களின் போராட்டத்திற்கான ஆதரவு அலை எழுந்துவந்தது. இதையடுத்து இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு அரசுமீதான அழுத்தங்கள் காரணமாகவே அது ஒரு அரசியல் தீர்வுக்கு செல்லவேண்டியதாயிற்று.
தமிழர் கூட்டணியின் துரோகத்தனத்தின் பின் ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த தலைமைகள் அரசியல் சார்ந்த ஆயுதப் போராட்டத்தை விடுத்து, வெறும் இராணுவப் போராட்டமாக முன்னெடுக்க முனைந்தது. இதன் வெளிப்பாடே இன்றைய தேக்கநிலையாகும். ஆரம்பம் முதல் மக்கள் தாமாக வெளிப்படுத்த முனைந்த தமது அரசியல் நடவடிக்கைகளுக்கு தொடர்ச்சியாக முன்னெடுப்பதற்கான ஆதரவை தலைமைகள் வழங்காதது மட்டுமல்லாது, இத்தகைய எழுச்சியை முனையிலேயே கிள்ளியெறியும் நடவடிக்கையில் ஈடுபட்டன. அடிப்படையில் குட்டிமுதலாளித்துவ தலைமைகள் தமது நலன்களை பாதுகாத்துக்கொள்வதிலேயே குறியாகவுள்ளன. மக்கள் சுயமாக எழுச்சிபெறின் தமது தலைமைக்கு ஆபத்து உருவாகிவிடும் எனக்கருதுகின்றன. இதன்காரணமாகவே குறைந்த பட்சம் இராணுவம் ஆக்கிரமித்த பிரதேசங்களில் கூட மக்கள் எழுச்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதில்லை. அண்மையில் இராணுவத்திற்கு எதிரான தமழ் மாணவர்களின் எழுச்சியை முக்கியமற்றதாக்கியதுடன் இதற்கு ஆதரவு வழங்கி இதனை வளர்த்தெடுக்கத் தவறியது.
இன்றைய நிலையில் நாம் வேண்டுவது, பாலஸ்தீன மக்கள் எழுச்சி போன்ற எமது சூழலுக்கு ஏற்ற வகையிலான ஒரு மக்கள் சார்ந்த அரசியலை முதன்மைப்படுத்தும் எழுச்சியே சர்வதேசரீதியாக எமது போராட்டத்திற்கு ஆதரவு அலையை பெற்றுத்தருவதுடன் இலங்கை அரசுமீதான அழுத்தத்தை கொடுக்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# ஆரியல் டோப்மேன்:

## மனித உரிமை அரசியலாளர்

ஆரியல் டோப்மேன் (Ariel Dorfman) சிலி நாட்டைச் சேர்ந்த படைப்பாளி. ரோமன் போலன்கி இயக்கிய Death and the maiden திரைக்கதைக்கு ஆதாரமான நாடகத்தின் ஆசிரியர். இக்கவிதைகள் சிலியில் 1973ம் ஆண்டு நடைபெற்ற ராணுவக் கவிழ்ப்பின்பின் 'காணாமற் போன' ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் பற்றிய 20 கவிதைகளில் இருந்து எடுக்கப்பட்டவை. அகதியான இவர் தற்போது ஹாலந்தில் வசித்து வருகிறார்.

இந்த நிமிஷத்துக்கும் பொருந்துபவை; எல்லா அமைப்புக்களுக்கும், மாற்றுக் கருத்தை ஒடுக்கும் எல்லா சமூக/ அரசியல் அமைப்புகளுக்கும் பொருந்துபவை. சர்வாதிகாரம், ஜனநாயகம், கம்யூனிசம் என நிலவிய எல்லா அமைப்புக்கும் பொருத்திப் பார்க்கிறார் ரோமன் போலன்ஸ்க்கி (போலந்து நாட்டைச் சேர்ந்தவர், தற்போது பாரிஸில் வாழ்கிறார்). இடதுசாரிகளின் மனித உரிமை ஓர் அரசியற் தந்திரோபாயமாகவே இருப்பதை விமர்சிக்கிறார் டோப்மேன். மனித உரிமை அமைப்புகள் 'இறந்தவர்கள்' பற்றித்தான் கண்டுபிடிப்புகளைச் செய்யுமேயொழிய, தீராத மனச் சித்திரவதைக்கு உள்ளானவர்கள் பற்றி அக்கறை கொள்வதில்லை என்பதை டோப்மேன் Death and the maiden நாடகத்தின் உரையாடல்களில் சுட்டிக் காட்டுகிறார். மனித உரிமை அமைப்புகளிலும் பதவி, அரசியல் நோக்கங்கள் போன்றன அடிப்படை மனித உரிமைகள் பற்றி அக்கறை கொள்வதினின்று இவ்வமைப்புக்களை விலக்கி வைக்கின்றன என்கிறார் டோப்மேன். காணாமற் போய்க் கொல்லப்பட்டோரது மனைவியர்களது அனுபவம் பற்றிய இவரது Widows எனும் நாடகம் 1997 மார்ச் மாதத்தில் பிரிட்டனில் பல்வேறு இடங்களில் மேடையேறுகிறது.

இந்த எட்டுக் கவிதைகளும் நேரடியானவை. இருந்த இருப்பிலேயே நம்மை உலுக்கிவிடுகின்றன இக்கவிதைகள். இக்கவிதைகளை இலத்தீன் மொழியினின்று ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் எடித் கிறாஸ்மென் (Edith Grossman). தமிழில்: யமுனா ராஜேந்திரன்.

நன்றி: Institute of Latin American studies/ Chile solidarity Campaign/ London, U.K./ Iron Press/ U.K.

## ஆரியல் டோப்மேன்: காணாமற் போனவர் குறித்து எட்டுக் கவிதைகள்.

### 1. அடையாளம்

என்ன சொன்னாய் - மறுபடியொருவனை அவர்கள்
கண்டுபிடித்திருக்கிறார்களா?
எனக்குச் சரியாகக் கேட்கவில்லை - இன்று காலை
மறுபடியொருவர் ஆற்றில்
மிதந்துகொண்டிருந்தாரா?

சத்தமாகப் பேசு - உன்னால் முடியாதென்கிறாய் -
என்ன - எவராலும் அடையாளம் சொல்லமுடியாது
அவனை என்கிறாய்?
போலீஸ் சொல்கிறது அவன் தாயால்கூட முடியாதென்று
அவனைச் சுமந்த தாயால்கூட முடியாதென்று
அவளால் முயற்சி செய்யக்கூட -
அப்படியா அவர்கள் சொன்னார்கள்?

இன்னொரு பெண் ஏற்கனவே முயற்சித்துப் பார்த்துவிட்டாள் -
நீ என்ன சொல்கிறாயென்று எனக்கு விளங்கவில்லை
அவனைத் திருப்பிப்போட்டு அவனது முகத்தை அவர்கள்
பார்த்தார்கள்
பார்த்தார்கள்
அவன் கைகளை அவர்கள் பார்த்தார்கள் - சரி
எல்லோரும் காத்துக்கொண்டிருந்தார்கள்
மௌனமாகத் துக்கித்தபடி
ஆற்றங்கரையில் -
அவன் அம்மணமாயிருந்தான்
அவன் பிறந்தபோது இருந்த மாதிரி -
அங்கே ஒரு போலிஸ் கேப்டன் இருக்கிறான்
நான் அங்கே வந்துசேரும்வரை யாரும்
போகமாட்டார்கள்?

அவன் யாருக்கும் சொந்தமில்லை
அவன் யாரையும் சேர்ந்தவனில்லை என்று சொல்கிறாய்?

அவர்களிடம் சொல்லு நான் துணி
மாற்றிக்கொண்டிருக்கிறேன்
நான் வந்துகொண்டிருக்கிறேன் -
அந்த கேப்டன் போனமுறை இருந்தவனாகவே
இருந்தால் அவனுக்குத் தெரியும்
என்ன நடக்கப் போகிறதென்று
அந்த உடல் எனது பெயரோடு சேர்ந்திருக்கும்
எனது மகனின்
எனது கணவனின்
எனது தந்தையின் பெயரோடு

www.tamilarangam.net

நான் அறிக்கைகளில் கையெழுத்திடுகிறேன்
அவர்களுக்குச் சொல்லு
நான் வந்துகொண்டிருக்கிறேன்
எனக்காகக் காத்திருக்கச் சொல்
நான் வரும்வரை
கேப்டனை அந்த உடலைத் தொடவேண்டாமென்று சொல்
அவனுக்கருகில் அந்தக் கேப்டனை ஒரு அடிகூட
நெருங்கிச் செல்லவேண்டாமென்று சொல்

அவர்களைக் கவலைப்பட வேண்டாமென்றும் சொல்
எனது சொந்த இறப்புகளை நான் புதைப்பேன்.

## 2.
## ஆண்டு நிறைவு

ஒவ்வொரு செப்டம்பர் 19ம் தேதியும்
(சீக்கிரமே நாலுவருஷம் முடியப்போகிறது
அவ்வளவு வேகமாகவா ஆண்டுகள் போய்விட்டது?)
மறுபடியும் அவளை நான் கேட்கவேண்டும்
ஏதாவது செய்தியுண்டாவென
ஏதாவது கேள்வியுற்றாளாவென

அவள் இல்லை என்று சொல்வாள், மிகமிக நன்றி
உங்கள் அக்கறையை நான் போற்றுகிறேன்
ஆனால் வார்த்தைகள் தேவையில்லாமல்
அவள் கண்கள் சொல்லிக்கொண்டிருக்கிறது
முதல்முறை அவர்கள் சொன்ன அந்தப் பதிலை

'சீக்கிரமே மூன்று வருஷம் முடியப்போகிறது
எப்படி அது சாத்தியமாகிறது?'
இல்லை, மிகமிக நன்றி
உங்கள் அக்கறையை நான் போற்றுகிறேன்
நான் விதவையில்லை
என்னிடமிருந்து தள்ளி நில்லுங்கள்
என்னிடம் எதையும் கேட்கவேண்டாம்
நான் உங்களை மணந்துகொள்ளமுடியாது
நான் விதவையில்லை
நான் விதவையில்லை
இன்னும்.

## 3.
## அவள் தனது பால்குடிப் பல்லை உதிர்த்துக் கொண்டிருக்கிறாள்

யாரது, யாரது அந்த ஆள் ரோபர்ட்
மாமாவோடு இருப்பது?
ஓ எனது தேனே, அவர் உனது அப்பா
ஏன் அப்பா இதுவரை என்னைப் பார்க்க வரவேயில்லை?
ஏனென்றால் அவரால் முடியாது.
அப்பா இறந்துவிட்டாரா?
ஆகவேதான் அவர் இதுவரை வரவேயில்லையா?

நான் அவளது தந்தை உயிரோடு இருக்கிறார்
எனச் சொன்னால் நான் பொய் சொல்கிறேன்
நான் அவளது தந்தை
இறந்துவிட்டாரெனச் சொன்னாலும்
நான் பொய் சொல்கிறேன்.

ஆகவேதான் சொல்லமுடிகிற ஒரேயொரு பதிலை
நான் சொல்கிறேன் இது பொய்யில்லை:

அப்பா இனியெப்போதும் வரவேமாட்டார்
ஏனெனில் அவரால் முடியாது.

## 4.
## அவரது பார்வை சிட்டுக்குருவியின்மீது

எனது பிதாவே என்னை மன்னியும்
இந்த விண்ணப்பத்தை உமக்கு அனுப்புவதன் பொருட்டு
வேறெங்கும் மன்றாடிப்போக எமக்கு இடமில்லை
ராணுவாட்சி எமக்குப் பதில் சொல்லாது
'எல்மெர்க்குரியோ'1 ஜோக்குகள் பிரசுரித்துவிட்டு
மௌனமாக இருக்கிறது
பாதிக்கப்பட்டவரின் விணணப்பங்களை
கோர்ட் ஆப் அப்பீல் இப்போது கேட்பதில்லை
சுப்ரீம்கோர்ட் நிப்பாட்டிக் கொள்ளுங்களென
உத்திரவு கொடுத்து
எதிர்ப்பேச்சு பேசாமல் இருக்கப் பணிக்கிறது
அவன் குடும்பத்திலிருந்து வருகிற இந்த
விண்ணப்பத்தை
எந்தப் போலீஸ் ஸ்டேசனும் ஏற்றுக்கொள்ள
விரும்பவில்லை
எங்கெங்கேயும் இருக்கிற பிதாவே நீங்கள்
கிரிமால்டி மாளிகையினுள்ளும் இருக்கிறீரா?

அவர்கள் சொல்கிறார்கள் எப்போதுமே தாங்கள்
மிலிட்டரி அகாதமியின் மேல்மாடியினின்றோ
லான்டரஸ்2 வீதி இருப்பிடங்களிலிருந்தோ
ஒருபோதும் நாங்கள் வெளியே நகர்ந்ததில்லை
என்கிறார்கள்
நீங்களும் அப்படித்தானா?
நீங்களும் அப்படித்தானென்றால் நீங்கள் எங்கெங்கும்
நிறைந்திருப்பது உண்மையெனில்
எமக்குப் பதில் சொல்லும்

www.tamilarangam.net

எப்போது நீங்கள் அங்கே இருந்தீர்
எமது மகன் ஜெரார்டோவை நீங்கள் பார்த்தீரா?
உமது மாதாகோவிலில்தான் பிதாவே
அவனுக்கு ஞானஸ்தானம் செய்யப்பட்டது
ஜெரார்டோ மிகமிகத் துடுக்கானவன்
நான்கு பேரிலும் இனிமையானவன்
உங்களால் அவனை ஞாபகம் கொள்ளமுடியவில்லையெனில்
ஒரு புகைப்படம் அனுப்பலாம்
ஞாயிற்றுக்கிழமை பூங்காக்களில் நீவிர் எடுக்கும்
படங்களைப் போன்றதது
அவர்கள் வந்து கதவைத் தட்டிய இரவு
இராப்போசனத்தின் பின்
அன்றுதான் அவனை நாங்கள் கடைசியாகப் பார்த்தோம்
அப்போது அவன் நீல மேலங்கியும்
மங்கிய ஜீன்சும் அணிந்திருந்தான்
இப்போதும் அவன் அதைத்தான் அணிந்திருக்கவேண்டும்

பிதாவே, அனைத்தையும் சாட்சியமாயிருந்து
பார்த்துக்கொண்டிருப்பவரே
நீங்கள்
அவனைப் பார்த்தீரா?

## 5.
## நம்பிக்கை

**எட்வர்டோ என்றிகோ. தகப்பனுக்காக**
**எட்வர்டோ என்றிகோ. மகனுக்காக**

சென்ற ஆண்டு மே 8ஆம் தேதியிலிருந்து
எனது மகனைக் காணவில்லை

சிலமணி நேரங்களுக்கு மட்டும் அவர்கள்
அவனைக் கூட்டிச் சென்றார்கள்
வழக்கமான சில கேள்விகள் கேட்பதற்காக
மட்டும்தான் என்று அவர்கள் சொன்னார்கள்

அந்தக் கார் அங்கிருந்து சென்றதிலிருந்து
லைசன்ஸ் பிளேட் இல்லாத
அந்தக் கார் அங்கிருந்து அகன்றதிலிருந்து
அவனைப் பற்றி எதுவுமே எங்களால்
கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் இப்போது எல்லாம் மாறிவிட்டது
ஐந்து மாதம் கழித்து இப்போது
வெளியே வந்த ஒரு இளம் தோழனிடமிருந்து
நாங்கள் கேள்வியுற்றோம்
செப்டம்பர் மாதத்தின் இறுதியில் அவனை
கிரிமால்டி மாளிகையில்(3) அவர்கள்
சித்திரவதை செய்துகொண்டிருந்தார்களாம்
கிரிமால்டிக்குச் சொந்தமான சிவப்பு இல்லத்தில்
அவனை குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்தார்களாம்
அவனது குரலை அடையாளம் கண்டுகொண்டதாக
அவனது கதறல்களை

யாரேனும் நேர்மையாக எனக்குச் சொல்லுங்கள்
என்ன மாதிரியான காலம் இது
என்ன உலகம் இது
என்ன மாதிரியான நாடு இது?

நான் கேட்பதென்னவென்றால்
ஒரு தந்தையின் சந்தோஷம்
ஒரு தாயின் சந்தோஷம்
இவ்வாறாயிருப்பதை அறிந்துகொள்வதுதானென்றால்
அவர்கள்
இந்த நிமிஷம் வரையிலும் அவர்கள்
தமது மகனை சித்திரவதை செய்துகொண்டிருப்பதை
அறிந்துகொள்வதுதானென்றால்

அதாவது ஐந்து மாதங்களின் பின்
அவன் உயிரோடு இருக்கிறான் என்பதை
எமது மாபெரும் நம்பிக்கையாக இருக்கப்போவது
அடுத்த ஆண்டு
மறுபடியும் எட்டு மாதங்களின் பின்
இப்போதும் அவர்கள் அவனை சித்திரவதை செய்துகொண்டுதான்
இருக்கிறார்கள் என்பதை
அறிந்துகொள்வது தானென்றால்

அவன் இருப்பான் இருக்கவேண்டும்
இருக்கத்தான் வேண்டும்
இன்னும் உயிரோடுதான் இருக்கிறான் என்பதை
அறிந்துகொள்வதுதானென்றால்.

## 6.
## கடைசி உயிலும்
## கடைசி வாக்குமூலமும்

நான் ஒரு கைதியாக அவர்களிடம் இல்லையென்று
அவர்கள் சொன்னால்
நீங்கள் அதை நம்பவேண்டாம்
என்றோ ஒருநாள் நிச்சயமாக அவர்கள் அதை
ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்
என்னை விடுதலை செய்துவிட்டதாக அவர்கள்
சொன்னால் நீங்கள் அதை நம்பவேண்டாம்
என்றோ ஒருநாள் நிச்சயமா அவர்கள் தாங்கள்
பொய் சொன்னதாக ஒப்புக்கொண்டே ஆகவேண்டும்
நான் கட்சிக்குத் துரோகமிழைத்துவிட்டதாக
அவர்கள் சொன்னால் நீங்கள் அதை

www.tamilarangam.net

நம்பவேண்டாம்
என்றோ ஒருநாள் நான் கட்சிக்கு விசுவாசமாகத்தான்
இருந்தேன் என்பதை ஒப்புக்கொள்வார்கள்.

அவர்களை நம்பவேண்டாம்
நம்பவே வேண்டாம்
அவர்கள் சொல்கிற எதையும் நம்பவேண்டாம்
அவர்கள் சத்தியம் செய்கிற எதையும்
அவர்கள் காண்பிக்கிற எதையும்
அவர்களை நம்பவேண்டாம்.

கடைசியாக அந்த நாள் வரும்போது
அவர்கள் உங்களிடம் வந்து
என் உடம்பை அடையாளம் காட்டச் சொல்லிக்
கேட்கும்போது நீங்கள் என்னைப் பார்க்கும் வேளை
ஒரு குரல் சொல்லும்
நாங்கள் இவனைக் கொன்றோம்
இந்த அயோக்கியன் செத்துப்போனான்
இவன் செத்தான்
நான் முழுமையாக, முற்றுமுழுதாக நிச்சயமாக
இறந்துவிட்டேன் என்று அவர்கள் சொல்லும்போதும்
அவர்களை நம்பவேண்டாம்,
அவர்களை நம்பவேண்டாம்,
அவர்களை நம்பவேண்டாம்.

## 7.
## முதல் அறிமுகம்: உடனுக்குடன் மொழிபெயர்த்தல் பற்றி

கண்ணாடி அறைகளுக்குள்ளிருந்து உரையாடுகிற
மொழிபெயர்ப்பாளர்களிலிருந்து
நான் வித்யாசமானவன் அல்ல
முடிவற்ற சர்வதேசீயக் கருத்தரங்குகளில்
தால்க்கா பூர்வகுடி(4) விவசாயி சொல்கிற
சித்திரவதை அனுபவங்களை மொழிபெயர்த்து
சொல்லிக் கொண்டிருப்பவன்தான் நான்
அவனை அவர்கள் கட்டிலில் படுக்கவைத்தார்கள்
என்று ஆங்கிலத்தில் திரும்பச் சொல்லிக்கொண்டு
செறிவான நளினமான பிரெஞ்சில்
எவ்வாறு எலெக்ட்ரிக் ஷாக் அவனது உடலில்
தீராத தொடர்வேதனைகளை விளைவிக்கிறதென
நாய்களால் கற்பழிக்கப்பட்ட நிகழ்வுக்கு
ஒரு சரியான சொல்லைத் தேடிக்கொண்டு
கொலைகாரர்களே அவமானப்படும்படி அவர்கள்
செய்த செய்கைக்குச் சமனாக
உணர்ச்சிபூர்வமான ஒரு வார்த்தையற்று
அந்தக் கொடூரஉணர்ச்சியை விளக்கமுடியாது
- தயவுசெய்து மன்னியுங்கள்
எனது மொழிபெயர்ப்பில் ஏதேனும்
லயங்களையோ எதுகை மோனைகளையோ நீங்கள்
எதிர்கொண்டால் -

உங்கள் முதுகுக்குப் பின்னால் சுவர் இருக்கும்போது
கேப்டன் தீ என்கிற வார்த்தையைச் சொல்லத்துவங்கும்போது
அந்த வார்த்தையினிலிருந்து உணர்ச்சிவிளைவை விடுத்து
அந்த உணர்ச்சியின் சாராம்சத்தை மட்டுமே
விளக்கப்படுத்திக்கொண்டு
அவர்களின் இருண்ட அனுபவத்தாரைகளை விடுத்து
அவர்கள் உண்மையிலேயே
என்ன சொல்கிறார்கள் என்பதை விடுத்து
அவர்கள் எனது மகனை அடுத்த அறையில் சித்திரவதை
செய்தார்கள், அவர்கள் எனது தோழனை
ஸ்மரணையற்று திருப்பிக் கொண்டுவந்தார்கள்
எமது தோழரின் உடம்புக்குள் எலிகளை அவர்கள் நுழைத்தார்கள்
கடவுள்மேல் சத்தியம்
அவர்களிலிருந்து நிறைய வித்யாசப்படாமல்
அவர்களின் குரல்கள்
அவர்களின் சொற்களஞ்சியங்கள்
அவர்களின் குறிப்புகள் அவர்கள் கலாச்சாரம்
அவர்கள் திரும்பவும் நாட்டுக்குத் திரும்பிப்போவது என
ஜெனீவாவில் நியூயோர்க்கில் ஹாக்கில்(5)
ஒரு நடுவாந்திராக, பாலமாகக்கூட அல்லாது
நல்ல தொகைக்காக உடனுக்குடன் மொழிபெயர்த்துக்கொண்டு
நாங்கள் ஏனெனில்
நாங்கள் சிறப்பான அறிவாளிகள்
மிகத்துக்கமான விஷயமாதெனில் எமது இருப்புக்கும்
அப்பால் எமது ஆற்றொழுக்கான வியாக்கியானங்கள்
வார்த்தைத் திருகல்கள் இருந்தபோதும்
கொஞ்சமாவது விசயங்கள் விளக்கப்படுகிறது
கூக்குரலின் பாதி
இரத்தத் திட்டு
தவிர்க்கவியலாத கண்ணீர்
மனிதகுலம் சில விசயங்களையாவது புரிந்துகொள்கிறது
நெகிழ்ந்தும்போகிறது.

## 8.
## சோள ரொட்டி

வயதான அந்த எனது முதிர்மனுஷிக்கு
இதிலெல்லாம் எந்த சம்பந்தமும் இல்லை

அவள் எங்கள் தாயாக இருந்ததால் அவர்கள்
இழுத்துச் சென்றார்கள்

www.tamilarangam.net

அவளுக்கு ஒன்றுமே தெரியாது
நான் சொல்வதாவது யாதெனில்
அவளுக்கு ஒன்றும் தெரியாது என்பதைப்பற்றிக்கூட
ஒன்றும் தெரியாது.

யோசித்துப் பாருங்கள்
அந்த வேதனையை விட்டுவிட்டால்கூட
இதையிட்டு அவள் எவ்வாறு
அதிர்ச்சியும் ஆச்சரியமும் கொண்டிருப்பாள் என
அவள் இந்தமாதிரி மனிதர்கள்
இந்த உலகத்தில் இருக்கிறார்கள் என்பதைக்கூட
ஒருபோதும் அறிந்தவள் இல்லை

அநேகமாக இரண்டரை ஆண்டுகள் முடிந்துவிட்டது
அவள் வரவேயில்லை
அவர்கள் சமையலறைக்குள் வந்தார்கள்
அடுப்பில் கெட்டிலில் தண்ணீரை கொதிக்கவிட்டுப்
போனார்கள்
முதியவர் வீட்டுக்குத் திரும்பிவந்தபோது அடுப்பில் ஆவிபறக்க
கெட்டில் காய்ந்து போயிருந்ததைக் கண்ணுற்றார்
அவளது சமையல் அங்கியைக் காணவில்லை

யோசித்துப் பாருங்கள் இந்த இரண்டரை ஆண்டுகள்
எவ்வாறு அவள் அவர்களை பார்த்திருப்பாள் என
எவ்வாறு அவள்....
அவளது கண்களின்மீது எவ்வாறு
கண்கட்டிய கறுப்புத்துணி இழிந்திருக்கும்
என நினைத்துப் பாருங்கள்
அந்த அதே ஆட்கள்
இந்த உலகத்திலேயே இருந்திருக்கக்கூடாதவர்கள்
மறுபடியும் அவளைத் தேடிவந்தார்கள்(8)

அவள் எனது தாய்
அவள் திரும்ப வரவேமாட்டாள் என நான் நம்புகிறேன்.

## ஒரு செய்தி

பொன்னையனுக்கு
இப்போதெல்லாம்
ஆச்சரியம்தான்!

உரமிட்டு,
மாட்டுச்சாணம்
பக்குவமாய் தெளித்து
விதைத்த
விதைப்பிலிருந்து எப்படி
மனிதத் தலைகள்
முளைத்தன என்று
ஆச்சரியம்தான் -

கந்தனும்
இதே அதிசயத்தை
இவனிடம் சொன்னான்

காலம் கலிகாலம்
என்று
கலப்பையுடன் வீடுதிரும்ப...
இராணுவ வண்டிகள்
வந்தன....

பிறகு......
மனிதத் தலைகளை
அறுவடை செய்ய
பொன்னையன்
ஊரில் மட்டுமல்ல..
உயிருடனுமில்லை
என்பது நாடறிந்த செய்தி!

முல்லை அமுதன்

குறிப்புகள்:

1. 'எல்மெர்க்குரியோ' எனும் பத்திரிகை
2. 'லாண்டரஸ் விடுதி' சித்திரவதைக்கூடம்
3. கிரிமால்டி மாளிகை: நேஷனல் ஸ்டேடியத்தை அடுத்து சிலியில் சித்திரவதை மையப்படுத்தப்பட்டு நடத்திய மாளிகை
4. 'தால்க்கா பூர்வகுடி' செவ்விந்தியப் பூர்வகுடி (Indegenous South American)
5. ஜெனீவா: ஐ.நா. தலைமையகம், அகதிகள் பிரச்சினை பற்றிய கருத்தரங்கை நினைவுகூர்கிறார்.
6 நம்பிக்கைத் துரோகி என்று கொல்லப்பட்டவனின் கடைசி வாக்குமூலமான கவிதை
7. Simultaneous Interpretation என்பதற்கான தமிழ்ப்பதம்
8. முதலிலேயே கொன்றுவிட்டு பிறகும் பாசாங்காக வருகிறார்கள்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

"SUVADUGAL"
Herslebs gt 43,
0578 Oslo
Norway

www.tamilarangam.net

BLAD
March-April 97




# கூர்மையான கணிப்பு! குறையில்லாத படைப்பு!!

கணிப்பொறிகளின் உழைப்பு..
கலைநயம் மிகுந்தவர்களின் நினைப்பு...
கச்சிதம் பொதிந்த அமைப்பு...

உங்கள்
அச்சுத் தேவைகளை
உயர்ந்த தரத்தில்
வடிவமைத்துத்தரும்
ஒரு தமிழ் அச்சகம்.

**ARTISTIC**

Hausmannsgt.6, 0186 Oslo, Tlf: 22 36 20 26
Mobil: 92 03 02 53. Fax: 22 36 20 26

ARTISTIC - *மலிவு!.. மகிழ்ச்சி!!.. மனத்திருப்தி!!!..*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்